நூல் இல ௨

இந்நூல்
யாழ் இலக்கிய நண்பர் கழகம்
நடாத்திய சிறுகதைப்போட்டியில்
மூன்றம் இடம்பெற்ற
செல்வி. யோகேஸ்வரி சின்னத்துரை
அவர்களுக்கு வழங்கப்பட்டது.

செயலாளர்.

2-1-68.

# வாழ்வு

நாவேந்தன்

தமிழ்க்குரல் பதிப்பகம்,
ஏழாலை வடக்கு,
சுன்னாகம் (இலங்கை)

தமிழ்க்குரல் வெளியீடு — 4
பதிப்பு : 1963

( உரிமைப் பதிவு நூலாசிரியர்க்கு )

விலை ரூ. 2-50

யாழ்ப்பாணம், மத்தியகல்லூரித் தமிழ்விரிவுரையாளர், பண்டிதர். க. சச்சிதானந்தன், பீ. ஏ., (இலண்டன்) அவர்கள் அளித்த.

# அணிந்துரை

பல்லவர் காலம் அருட்பாடல்களின் காலமென்ருல், சோழர் காலம் காவிய காலம் என்ருல், இன்றைய காலம் சிறுகதைக் காலம் என்று கூறுவது, மிகவும் பொருந்தும். மனிதனுக்கு அமைதியாகவிருந்து இயற்கையன்னேயின் அழியா அழகைச் சுவைப்பதற்கோ, காவியங்களின் இன்ப உலகத்தில் மிதப்பதற்கோ இறைவனின் அகண்ட அன்பில் மிதந்து, அருட்பாடலில் உளம் நெகிழ்ந்து, உருகிக் கரையவோ நேரமுமில்லே, உள்ளப் பொறுமையுமில்லே. சிறு கதைகளுக்குத்தான் இன்றைய மனிதனின் உள்ளம் பொருத்தம் போலும்!

உதிர்ந்த சருகுகளே, உரமாகக் கொண்டு அழகான முல்லேச் செடி பூப்பதுபோல, கணந்தோறும் அரும்பி உதிரும் சிறுகதைக் குவியல்களே உரமாக்கிக்கொண்டு அழியாத சிறுகதைகள் பிறக்கின்றன. அவைகளுக்குப் பரிசு கொடுப்பது மக்கள் உள்ளமே. வருங்காலக் கன்னிப் பெண்கள் வேலே முடிந்து, துயிலச் செல்லும் போது சரசாவை ஒருதரம் எண்ணி நெகிழ்வார்களாயின், துடுப்பை வலித்து ஓய்ந்தபோது இடையிடையே பண்ணேக் கடலின் வலேஞன் ஒருவன் கண்முன்னே ஆறுமுக உபாத்தியாயர் தோன்றி மறைவாராஞல், மூட்டை தூக்கிச்செல்லும் உழைப்பாளியின் உள்ளத்திலே, நல்லான் ஒருதரம் நடமாடுவாஞைல் இக்கதைக் கொத்துக்கு வேறு பரிசுகள் வேண்டா. இப் பரிசைப் பெற இன்னும் பத்து ஆண்டுகள் காத்திருப்போம்.

நாவேந்தன் அவர்கள் எழுத்துலகிலே மிளிரும் ஒரு வைரமணி. அவர் கிராமப் புறங்களிலும், பட்டினங்

களிலும், பண்ணைகளிலும், பாக்கங்களிலும், நம்மைச் சுற்றி உலவும் மக்களின் இன்பதுன்பங்களில் நம்மைத் தோயவைக்கிருர். அவர்களின் கண்ணீரிலும், ஏக்கத்தி திலும், உவகைச் சிரிப்பிலும் நம்மை ஈடுபடச் செய் கின்ருர். இத்தொகுதிக்குமுன் வெளியிட்ட நூல்கள் அவரைப் புகழேணியில் இட்டுவைத்தன. இத் தொகுதி யும் அவருக்குப் பெரும் புகழ் கொடுக்கும் என்றே நம்புகிருேம்.

இரண்டொரு வார்த்தைகளிலே, அரிய காட்சிகளே யும், பாத்திரங்களின் குணுதிசயங்களேயும் மனத்துக் குக் கொண்டுவரும் வன்மை வியக்கத்தக்கது. பல கதைகளிலே இவருடைய'சொந்த அனுபவங்கள்' அவரை அறியாமலே பிய்த்துக்கொண்டு வருகின்றன. இவர் படைக்கும் பள்ளிக் காட்சிகள், ஆசிரியைகள், பத்திரிகை நிருபர்கள், காதற் சம்பவங்கள் உண்மை அனுபவங் களுக்குக் கற்பனை வர்ணந் தீட்டியவைபோல் சோபிக் கின்றன.

ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களின் வரிசையில், நாவேந்தன் சிறந்தவர் என்பதற்கு இக்கதைக்கொத்து சான்று பகரும். சுருங்கச் சொன்னல் இதுவே இம் முன்னுரையின் சாரம்.

மாவிட்டபுரம்
தெல்லிப்பழை
10962

க. சச்சிதானந்தன்

# மதிப்புரை

'நாவேந்தன்' முயற்சியுள்ள இளைஞர். சலியாது எதிர்காலத்தை நோக்குபவர். வாழ்க்கைப் பாதையில் கரடு, முரடுகளைக் கண்டவர்.

பிறந்தநாடு - தாய்மொழி என்பவற்றில் அளவு கடந்த பற்றுள்ளவர். இந்த நிலையில் எழுதுவது அவருக்கு ஆறுதல் செய்த்தில் ஆச்சரியமில்லை.

அரசியல் - கவிதை - சிறுகதை முதலிய பல துறைகளில் அவர் கால் வைத்திருக்கிருர்.

இயங்கிக்கொண்டிருக்கும் இந்த உலகத்தின் துளி துளியான அமிசங்களே சிறுகதைகள்.

ஆசிரியர் இதை நன்கு உணர்ந்தவர். கதைகளே சாட்சியாக நிற்கின்றன.

அவர் எழுதிய பல கதைகளில், இங்கே இடம்பெற்றவை சிலவே. இவை முன்னரே வாசகர்களால் மதிக்கப்பட்டவை. மனித இதயங்களைப் பண்படுத்தும் ஆற்றல் உடையவை.

'வாழ்வு', அருமையான கதை. நாம் சூக்கும சரீரத்திலும் வாழப்போகிருேம் என்ற உண்மையை அது உணர்த்துகிறது. இது நிச்சயம் மனிதனை வளப்படுத்தும்.

அகலிகை, பழங்கதைதான் - ஆயினும் வாசிக்க வேண்டியதேவை இருக்கவே செய்கிறது. உழைப்பு-சுடலையாண்டி - விழிப்பு முதலியனவும் ஒவ்வொரு துறையில் வாசகனை வழிப்படுத்தவல்லவைகளே.

சமுதாயத்தின் அவசியத் தேவைகளை நோக்கி, வாசகனே எப்பொழுதும் கதைகளைத் தரப்படுத்த வல்லவன். எனவே, மேலுஞ் சொல்ல நான் விரும்பவில்லை.

ஆனால், ஆசிரியர் வளர்ந்து கொண்டிருப்பவர். இனியுந் தொடர்ந்துவரும் கதைத் தொகுதிகளில் அவரது பூரணவளர்ச்சியைக் காண்போமாக.

திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.
14-9-62

க. தி. சம்பந்தன்

# வாழ்வும் எழுத்தும்

இலக்கியம் அனைத்தும் வாழ்வை அடிப்படையாகக் கொண்டே படைக்கப்படுகின்றன. இலக்கியத்திற்கு எவ்வித எல்லைக்கோடும் இல்லை. நல்லதைச் சொன்னாலும், அல்லதைச் சொன்னாலும் இலக்கியம் மனித வாழ்வையே சொல்லுகின்றது. இலக்கியக்காரனின் மனநிலை, வாழுங்காலம், சமுதாயநிலை என்பவற்றுக்கியையவேதாம் பேதங்கள் கிளைக்கின்றன. இவற்றைக் கண்டு இலக்கியக்காரர்கள் யாருமே அவலப்படவேண்டியதில்லை. இலக்கியம் கடவுளைப் போன்றது. அதற்கு முடிவில்லை.

எந்தக் கோட்பாட்டுக்கும், விதிகளுக்கும் பணிந்து, குனிந்து இலக்கியம் படைத்தலியலாது. தமிழின் தொன்மையான இலக்கியங்கள் தொட்டு, இன்றைய இலக்கியங்கள்வரை இந்த உண்மைகளையே யாம் காண்கிறோம். இலக்கியம் படைக்க மொழி மூலப்பொருளாகும். அம்மூலப்பொருளுக்கு வரையறையுண்டு. இலக்கணம் உண்டு. மூலப்பொருளின் வலிவு குன்றினால், அதனாலாய படைப்பு வலிவற்றதாகும். தமிழின் வலிவுக்குக் காரணம் அதன் இலக்கண வரம்பும், தூய மரபுமே. இவ்வுண்மையினைப் பகுத்தறிவாளர் எவரும் மறுத்திட எண்ணார். மொழி மரபினையும், இலக்கணத்தினையும் சிறிதேனும் ஓராதார், அவை இன்று வேண்டப்படுவனவல்ல என்பதில், அன்னார்தம் அறியாமையே தெற்றெனத் தோன்றுகின்றது.

மொழிப்பண்பு, இலக்கியம் என்பவற்றின் வேறுபாடுகளை உணராதார், அவையிரண்டும் ஒன்றெனமயங்

கிப் பிதற்றுதலைக் கண்கூடாகக் காண்கிறோம். கவல்கிறோம்! இந்நிலையில் இலக்கியம் படைப்பவனுக்குப் பேரிடர் எழுந்துள்ளது. 'செக்குஞ்சரி சிவலிங்கமுஞ்சரி'யென அறியாமையிற் பழுத்துவிளங்குபவர்களிடமும், அத்தகையவர்களுக்காகவே எழுத்தாளர்களாக விளங்குபவர்களிடமும் இருந்துவரும் வீணுரைகளைத் தவிர்த்துக்கொள்ளுதல் மிகக்கொடுமையும், கடுமையுமாகவுளது.

இந்நிலையில் உண்மையான இலக்கியப் படைப்பாளன் திண்ணிய மனத்துணிவுள்ளவனுகவும் பெரிய போராட்டக்காரனுகவும், தியாகியாகவும் வாழவேண்டியேற்படுகிறது.

அவன் தனது இலக்கியப் படைப்பை மக்களுக்கு நல்ல முறையில் அறிமுகப்படுத்துவதுடன், தான் மேற்கொண்டுள்ள மொழி இயல்பையும், இலக்கியச் சிறப்பையும் பாதுகாக்க வேண்டிய கடமையுள்ளவனுகிறன். ஈழத்தில் இன்றுள்ள இலக்கியப்படைப்பாளர்களை இப்பாரியபொறுப்பு எதிர்நோக்குகின்றது. அவர்களிற் பலருக்கு இதன் பொருள் தெரிவதேயில்லை. சிலருக்கு இவ்வுண்மைகள் புலனுயினும் அவற்றை நிலைநாட்டுதற்கான மனப்பண்பும், வலிவும், வகையும் இயலுவதாயில்லை. மிகமிகச்சிலர் மட்டுமே இவ்வுயரிய குறிக்கோளுக்காக இன்று எழுத்துலகிற் போராடுகிருர்கள்.

அத்தகைய எழுத்துலகப் போராட்டக்காரனுகிய எனக்கு, இச்சிறுகதைத் தொகுப்பை வாசகர்களாகிய உங்கள் முன் வைப்பதில் பெருமகிழ்ச்சி கிளர்கிறது. இஃது எவ்வித முற்போக்கு இலக்கியமோ, அஃதல்லாத இலக்கியமோ அல்ல. அனைத்துலகும் ஒப்புக்கொண்டுள்ள இலக்கியத்துறையின் ஒரு கூருன, சிறுகதை இலக்கியத்தின்பாற்பட்ட ஒரு படைப்பாகும்.

ஈழத்திலும், தமிழகத்திலும் சிறப்புற்று விளங்கிய, விளங்குகின்ற வீரகேசரி, சுதந்திரன், கலைமன்றம், உமா, ஆனந்தன், கலைச்செல்வி, உதயம், விவேகி ஆகிய எட்டுப் பத்திரிகைகளில் வெளியாகிய, எனது பதினைந்து சிறுகதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இலக்கியத்தின் பொதுவான அடிப்படையான வாழ்வு இக்கதைகள் முழுமையும் இழையோடி இலங்குவதால் தொகுப்பு 'வாழ்வு' எனப் பெயர்பெறுவதாயிற்று. கதைகள் ஒவ்வொன்றும் தனித்தன்மையுடையவை என்பதனைப் படிப்பவரனைவருமுணர்வர். வாழ்க்கையில் மிக இழிந்த பொருளாதார நிலையிலுள்ளவர்கள் சிலரையும், நடுத்தர வகுப்பினருக்கேயுரிய 'அரைகுறையான' வாழ்க்கை வசதிகளுடன் போராடிக் கொண்டு வாழ்பவர்கள், பல்வேறு உணர்ச்சிச் சிக்கல்களுடன் உலாவுபவர்கள் பலரையும், கதைகளின் பாத்திரங்களாக நீங்கள் பார்க்க முடியும். எவ்விதச் சார்புமின்றி, நடுநிலைநின்று நோக்குபவர்களுக்கு, இப்பாத்திரங்கள் இன்றைய சமூகத்தின் உண்மையான, உயிரோட்டமுள்ள படைப்புக்கள் என்பதில் ஐயமே எழாது!

வாழ்க்கையில் நாம் காணுகின்ற உண்மையான உலகினை விட்டு, எதுவோ ஒரு 'கொள்கையின்' கட்டுப்பாட்டிற்குத் தலைபணிந்து, வலிந்து, புதிய மனநிலையும், செயல்களும் உரிய பாத்திரங்களை அளவுக்கு அதிகமாகப் படைத்துவிடுவதில், எனக்கு எள்ளளவும் ஒருப்பாடில்லை. எனது கதைகளின் பாத்திரங்கள் உண்மையானவர்கள். அவர்கள் அதிகமாகக் காதலிக்கலாம், காதலிக்க விழையலாம். அஃது தவறன்று. இன்றைய சமுதாயச் சூழ்நிலையில் 'மத்தியதர வகுப்பு' மக்களின் - குறிப்பாக, இளம்பெண்கள், இளைஞர்களின் இயல்புகள் அதுவாக அமையவில்லையா? அது போன்றே சுடலையாண்டியும், நகரசுத்தித் தொழில் புரியும் நல்லானும்,

இழுவைவண்டிக்காரனுன நாகப்பனும் உண்மையான வர்களாக நடமாடுகிருர்கள்.

இவர்களுக்கு மட்டும் தனியான அழுத்தங்கொடுத்து, திரைப்படங்களையும், மரும நாவல்களையும் பார்த்து, படித்துக் காதல் செய்யத் துடிப்பவர்களையும், உணவுக்கு வேண்டியதை, உடைக்காகவே செலவழித்து வாழத் துடிக்கின்ற ஆடம்பரப் பிரியர்களான ஆடவர், பெண்டிரையும், ஆன்மீக வழிபாட்டிலேயே தம்மைக் கரைத்துக்கொள்ள விரும்புகின்ற சிதம்பரர்களையும் மறந்துவிட்டு இலக்கியம் படைக்க என்னுலியலாது. ஏனெனிற் சிந்தனைச் சுதந்திரத்தையும், எழுத்துச் சுதந்திரத்தையும் உயிராக எண்ணுபவனுக நானிருப்பதாலும், அத்தகைய கருத்துக்கு, உயர்வு கொடுக்கப்படுகின்ற காலத்தில் வாழ்பவனுக இருப்பதாலுமேயாம். உண்மை எவ்வித நிலையிலும் மயங்கக்கூடாது. சிறுகதைத்துறை மட்டும் அதற்குப் பிறிதாக முடியுமா ?

மனித சமுதாயம் தோன்றிய நாள்தொட்டு பயமும், பத்தியும், காதலும், தியாகமுமாகிய உணர்ச்சிகள் சிரஞ்சீவியாக வாழுகின்றன. சாதி, இன, மதப் பூசல்களையும், வர்க்கப் போராட்டங்களையுமே பெரிதாகச் சித்தரித்து, ஏனையவை யாவும் நலிந்துவிட்டன என்பதிற் பொருளில்லை. காலப்போக்கில் நிரந்தரமானவை, உலகப் பொதுவுணர்ச்சிகளான பயம், பத்தி, அன்பு, காதல், தியாகம் ஆகியவையே. கொள்கை வழிபாட்டிற்காக பத்திக் கண்ணேட்டத்துடன் இன, மத, சாதி, வர்க்கப் பூசல்களைப் பெரிதுபடுத்தி எழுதப்படும் இலக்கியங்கள் விரைவில் இறந்துபடும். என் கதைகளில் உலகின் நிரந்தர உணர்ச்சிகள் அதிகமாக இடம்பெறுகின்றன. அவை காதலாகவும், தியாகமாகவும், பத்தியாகவும், பயமாகவும் எதுவாக இருப்பினும் நிரந்தரமானவையே. இதன் காரணமாக நிலப்பிரபுத்துவத்திற்கு, அல்லது

முதலாளித்துவத்திற்கு அடிபணியும் இலக்கியக்காரன் என என்னைக் கருதுபவர்களுக்காக உண்மையில் அனுதாபப்படுகிறேன். ஈழத்தின் தரமான இலக்கிய வளர்ச்சிக்குக் குந்தகம் விளைப்பவர்களின் குரலிதுவாயிருப்பினும், நாளும் பொழுதும் எனது பாதையில் நம்பிக்கையுடன் எழுத்துலகிற் போராடி வருபவர்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்று கூறுதற்குப் பெருமைப்படுகிறேன்.

முப்பது வயதினனுகிய யான் எழுத்துத்துறையில் செலவழித்த காலம் பதினைந்து ஆண்டுகளாகும். பதினைந்து ஆண்டுக் கால எல்லையுள்ள கதைகள் இத்தொகுப்பில் இடம்பெறுகின்றன. இக்கதைகள் பல்வேறு தரத்துத் தோற்றப்படுதற்கு இக்கால எல்லையின் அனுபவங்கள் பெரிதும் காரணமாகும். கதைகளைப் பத்திரிகைகளுக்கு எழுதுவது வேறு; நூலாகத் தொகுத்தளிப்பது வேறு. எனினும் இயன்றவரை இருவகை முயற்சிகளிலும் மொழி மரபையும், தூய்மையினையும் பேணுதற்கு ஒல்லும்வகை முயன்றிருக்கிறேன். அம்முயற்சியில் நிறைவான வெற்றி பெற்றுள்ளேனு என்பதினும், பெறல் வேண்டும், பெறத் தொடர்ந்து முயல்வேன் என்ற உறுதியே எனக்குப் பெருமையளிப்பதாகும்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னரும், அதற்கு முன்னருமே தமிழ் மொழி பீடும், பெருமையும் பெற்று விளங்கத் தன்மானத்துடன் உழைத்தவர்கள், உழைத்து வருபவர்கள் தமிழாசிரியர்களும், தமிழ்ப் பண்டிதர்களுமே ஆவர். இலக்கிய விழிப்புணர்ச்சி பெற்றுவிட்டதாக விதந்து கூறப்படும் இக்காலத்துத் தமிழ்ப் பண்பறியாதார், தமிழாசிரியர்களையும், தமிழ்ப் பண்டிதர்களையும் இழித்துப், பழித்துப் பொய்யுரை புகல்வது கண்டு மனம் கவல்கிறேன். வேற்றுமொழிப் புலமை காரணமன்று, அடிமைத் தனத்தின் எஞ்சிய சிறுகூறுன

சுபாவம் மனக்கிடக்கையாகக் கொண்டவர்களுக்கு, எதிர் காலம் நிச்சயமாக நற்புத்தி புகட்டுமென்பதில் ஐய மில்லை. யானும் ஒரு தமிழாசிரியன் என்ற முறையில், என் முன்னோடிகளான தமிழ்ப் புலமையாளர்களுக்கு என்னுளமார்ந்த அஞ்சலியை இந்நூல் வாயிலாக உரி மையாக்குகின்றேன்.

இச் சிறுகதைத் தொகுப்புக்கான என்னுரை சிறிது நீண்டுவிட்டதெனினும், சொல்லவேண்டிய சில கருத் துக்களை, அவசியம் சொல்லியே ஆகவேண்டுமெனும் உந்துதலாற் சொல்ல முயன்றேன். இந்நூல் சிறப்புற அமைதற்குக்காலாக இருந்தவர்களுக்கு, என் நன்றி யுரியது. கதைகளின் இரசனை உணர்விற்றோய்ந்து காவியநயம்மிளிர, அணிந்துரை எழுதிவழங்கிய பன் மொழிப்பண்டிதரும், கவிஞருமான, க. சச்சிதானந்தன் பி. ஏ. அவர்களுக்கும், மதிப்புரை அளித்துள்ள ஈழத் தின் முதுபெருஞ்சிறுகதை எழுத்தாளரான திரு. க. தி. சம்பந்தன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரி விக்கின்றேன்.

கதைகளனைத்தையும் தொகுத்து அளித்த எனது அருமைத் துணைவர் த. துரைசிங்கம் அவர்களுக்கும் குறுகிய காலத்தில் மிகச் சிறப்புறநூலை அச்சிட்டு வெளிக்கொணர்ந்த கலைவாணி அச்சகம், புத்தகநிலை யம் என்பவற்றின் உரிமையாளரான, சமாதான நீதிபதி, உயர்திரு. சு. வி. தம்பித்துரை அவர்களுக்கும் என்னுள மார்ந்த நன்றியுரியது. தமிழ்கூறு நல்லுலகின் வாசகப் பெருமக்கள் திருமுன்னிலையில் 'வாழ்வி' னைப் படைத்து, அவர்கள் பேராதரவினை வழங்கக்கேட்டு நிற்கின்றேன்.

வணக்கம்.

ஏழாலை வடக்கு,
சுன்னாகம் (இலங்கை)
**2 - 10 - 62**

'நாவேந்தன்'



# காணிக்கை

சிந்தையி லென்றும் நினைத்துயான் வணங்கச்
சீர்த்திய னமைந்தநல் லிருவர்
எந்தையின் ருயும், தந்தையுமாக
இலங்கியே எனக்கறி வளித்தோர்
அந்தமில்லமர ராருல கெய்தி
யழிவிலா வின்பமே நுகர்வார்,
கந்தநன் மலர்த்தா ளிக்கதை நூலைக்
காணிக்கையாக யான் படைப்பேன்!

# உள்ளடக்கம்


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | சகோதரி | ... | ... | 1 |
| 2. | அகலிகை | ... | ... | 14 |
| 3. | நம்பிக்கை | ... | ... | 21 |
| 4. | துறவியின் காதலி | ... | ... | 29 |
| 5. | உழைப்பு | ... | ... | 37 |
| 6. | சலனம் | ... | ... | 46 |
| 7. | விழிப்பு | ... | ... | 52 |
| 8. | வாழ்வு | ... | ... | 60 |
| 9. | ஒரு சொட்டுக் கண்ணீர் | ... | ... | 67 |
| 10. | ஆசைமயக்கம் | ... | ... | 72 |
| 11. | போட்டி ஒழிந்தது | ... | ... | 80 |
| 12. | பெண் | ... | ... | 88 |
| 13. | காதல் வென்றது | ... | ... | 96 |
| 14. | தவறு | ... | ... | 104 |
| 15. | சுடலையாண்டி | ... | ... | 112 |

# ச கோ த ரி

இரவு எட்டு மணிக்குக் கொழும்பிலிருந்து யாழ்ப் பாணம் புறப்பட்ட புகைவண்டி 'கட, கட' வென்ற சப்தத்துடன் 'அடித்துப் பறந்து' கொண்டிருந்தது. ஒரு மூன்ரும் வகுப்புப் பிரயாண வண்டியுள் ஏறி யிருந்த நான், எனது பெட்டி, படுக்கைகளைச் சரி செய்து ஒழுங்காக அமைத்த பிறகு காலை நீட்டிப் படுத்துக்கொண்டே, புகைவண்டிக்கு வரும்பொழுது வாங்கிவந்த ஒரு மாத சஞ்சிகையை எடுத்துப் படிக்க ஆரம்பித்தேன்.

நான் ஏறியிருந்த பெட்டியுள் ஒரே ஒரு பெரியவர் மாத்திரம் அமர்ந்திருந்தார். அவரும் வண்டி நகர ஆரம் பித்ததுமே மெதுவாகத் தூங்கத் தொடங்கிவிட்டார்.

கொழும்பிலே ஒரு தினப்பத்திரிகையின் நிருபராக நான் வேலைபார்த்தேன். இருந்தாற்போலிருந்து என்னை யாழ்ப்பாணப் பகுதிக்கு விசேட நிருபராகப் போகும் படி ஆசிரியர் உத்தரவிட்டுவிட்டார். வேறு வழியின் றிப் புறப்பட்டுவிட்டேன். எழுதிப் பிழைப்பவர்களின் வாழ்க்கை அத்தனை சுலபமான தல்லவென்றுதான் உலகத்துக்குத் தெரியுமே!

ஏதோ ஒரு தங்குநிலையத்தில் வண்டி நின்றது. ஆக மொத்தம் நாலோ ஐந்து பேரோதான் அங்கே பிரயாணமாகியிருப்பார்கள்.

நான் உட்கார்ந்திருந்த பெட்டியின் உட்பக்கமாக என் கண்ணோட்டத்தைச் செலுத்தினேன். வாட்ட சாட்டமான தோற்றமுடைய அந்த இளைஞன் முதல் முறையாக என் கண்ணில் பட்டான்.

கையிலேயுள்ள தலையணையை இருக்கைமேல், ஓர் அந்தத்தில் சாத்திவைத்து விட்டு இலாவகமாக அதன் மேல் சாய்ந்துகொண்டு ஏதோ எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். வாலிபனின் கவனத்தை என்பக்கம் திருப்புவதற்காக "ஏன் ஐயா, யாழ்ப்பாணந்தானே வருகிறீர்கள்?" என்று ஒரு கேள்வியைப் போட்டுவைத்தேன்!

"ஐயா, அகிலம் முழுதுமே எனக்குச் சொந்தந் தான். நான் எங்கே போகிறேனென்று எனக்கே இப்பொழுது தெரியாது".

தான் கூறிய பதிலில் ஏதோ ஒரு பெரிய உண்மையை வெளியிட்டுவிட்டவன்போல் அவன் உரத்துச் சிரித்தான்! எனக்குத் தலை சுழன்றது. போயும் போயும் ஒரு 'பைத்திய'த்துடனே ஒரு இரவைக்கழிப்பதென்றால் அவ்வளவு சுலபமான விடயமா அது?

"என்ன ஐயா, சிந்தனை செய்கிறீர்கள்? என் பேச்சு உங்களுக்குப் பைத்தியக்காரத்தனமாய்ப் படுகிறதோ? என்று கேட்டுவிட்டு அவன் மீண்டும் அதே பயங்கரச் சிரிப்புச் சிரித்தான்.

"இந்த உலகத்திலேயே நேர்மையாகவும், குழந்தை உள்ளத்தோடும் பழகுகிற எவனும் இன்றைய நாகரிக

மனிதர்களின் கண்ணில் பைத்தியக்காரனாகத்தான் தோன்றமுடியும்!".

நான் வாய்விட்டு இந்த வார்த்தைகளைக் கூறினேன்.

"ஆமாம் ஐயா, நீங்கள் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மை! நான் கூட இப்படி நடந்துகொண்டதாலேயே பைத்தியக்காரனாகி விட்டேன். என் குழந்தை உள்ளம் அவளை-என் சகோதரி சரசாவை அநியாயமாகச் சாகடித்துவிட்டது".

அவனுடைய துன்பமயமான வாழ்வுச்சரித்திரத்தையறிய என் மனந் துடி துடித்தது. சரசா அவள் உங்கள் உடன் பிறந்த சகோதரியா? உங்கள் குழந்தை உள்ளத்தினால் அவள் எப்படி அநியாயமாகச் சாக முடிந்தது ஐயா?" என்று என் வாய் தானாகவே கேள்விகளைக் கேட்க ஆரம்பித்துவிட்டது.

"சரசா, அவள் என் உடன் பிறந்த சகோதரியில்லை. ஆனால், நான் அவளை என் உடன் பிறந்த சகோதரியிலும் பார்க்க ஆயிரம் மடங்கு அதிகமான அன்புடன் நேசிக்கிறேன்.

"அப்பொழுது எனக்கு வயது இருபத்திரண்டு. யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்து ஏறக்குறைய இருபத்தொரு மைல் தொலைவிலிருக்கிறது நான் பிறந்த கிராமம். அந்தக் கிராமத்தில் செல்வச் சிறப்புடன் விளங்கிய எனது பெற்றோருக்கு நான் ஏக புத்திரன். ஆனால் காலதேவன் இன்ப, துன்பங்களைப் பகடைக் காய்களாக உபயோகித்துச் சூதாட்ட யரும்பொழுது செல்வர் வறியராகவும், வறியர் செல்வராகவும் மாறி விடாமல் என் செய்வர்? என் தகப்பனார் தமது வியா

பாரத்தில் நேர்ந்த ஒரு பெரும் மாற்றத்தின் விளைவு தெரியுமுன்னரே, மரணதேவனை நண்பனுக்கிக்கொண்டு மறைந்து விட்டார். அவர் இறந்த சோகத்திலேயே என் தாயும் ஒரு நாள் அந்தக் காலனுலகுக்குப் பயண மாகிவிட்டாள். என் இளம் உள்ளத்திலே அன்றுதான் சோகத்தின் சாயல் துளிர்விட ஆரம்பித்தது. கிடந்த நிலபுலம் எல்லாவற்றையும் விற்றுத் தகப்பனுர் பட்டு வைத்திருந்த கடனை அடைத்துவிட்டு யாருமற்ற அநா தையாகவே பட்டினத்திற்கு வந்துவிட்டேன். அதிலி ருந்து என் வாழ்வு நாடகத்தில் இரண்டாம் காட்சி ஆரம்பமானது.

பட்டினத்தில் என் வாழ்வு 'சப்'பென்ற நிலையி லேயே நகர்ந்தது. நான்கு வருடங்கள் உருண்டோ டின. ஆங்கிலம் எஸ். எஸ். ஸி. சித்தியெய்தியதுடன் அதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு ஒரு தமிழ் ஆசிரி யராக முயற்சித்தேன். அது சுலபமாகக் கைகூடிவிட் டது. ஆசிரிய கலாசாலையினின்று வெளிவந்ததும் ஒரு கல்லூரியில் தமிழ் உபாத்தியாயராக உத்தியோகம் பார்க்க ஆரம்பித்தேன்.

அப்பொழுதுதான் சரசா என் வாழ்வில் குறுக் கிட்டாள். நான் உத்தியோகம் பார்த்த கல்லூரியில் ஆண்களும் பெண்களும் சேர்ந்தே படித்தனர். பெண் கள் வகுப்புப் பிரதம தமிழ் ஆசிரியை சரசா. அவள் தோற்றமும் இனிய சுபாவமும் என் இளம் உள்ளத் தில் ஏதோ ஒரு இனந் தெரியாத உணர்ச்சியைக் கிளப்பிவிட்டன. பாடஞ் சொல்லிக் கொடுப்பது சம் பந்தமாக அவள் என்னுடன் உரையாடும் பொழுதெல் லாம் நான் விவரிக்கவொண்ணு மகிழ்ச்சியடைவேன். நாளடைவில் நாங்களிருவரும் மனம்விட்டுக் கதைக்கப் பழகிக் கொண்டோம். எங்களிடையே ஒரு "பாசம்" எதைக் குறிக்கோளாகக் கொண்டோ தெரியாது

தோன்றி நாளொரு வண்ணமும் பொழுதொரு புது மையுமாக வளர்ந்தது. அந்தக் கலாசாலையிலே நாங்களிருவரும்தான் உண்மை அன்புடன் ஒருவரோடொருவர் உரையாடுகின்ற மனிதப் பிறவிகள்,

மற்ற ஆசிரியர்களெல்லாம் நவ நாகரிகத்தின் "அவதாரங்க"ளாக ஏதோ ஆகாயத்திலிருந்திறங்கியவர்கள் போல ஒருவரோடொருவர் பட்டதும் படாததுமாய்க் கதைத்துக்கொள்வார்கள். அந்தச் சூழ்நிலையிலே சரசாவின் நட்பு எனக்கு இதமானதாக இருந்தது என்று கூறத்தேவையே இல்லை.

நாளடைவில் நான் சரசாவைப்பற்றியும் அவள் குடும்பத்தைப் பற்றியும் அவள் மூலமாகவே நன்கு அறிந்து கொண்டேன்.

எங்கோ ஒரு கிராமத்திலே ஏழைப் பெற்றோருக்கு ஏக புத்திரியாகப் பிறந்தவள்தானும் அவளும். உள்ளதையெல்லாம் விற்றுத் தமது ஒரே மகளை உத்தியோகமாக்கிய அவளின் தகப்பனார் ஒருநாள் இருந்தாற்போலிருந்துவிட்டு மரணமடைந்து விட்டாராம். தாபரிக்க ஒருவருமற்ற நிலையில் தாயையும் தன்னுடன் அழைத்துக்கொண்டுவந்து பட்டின வாசஞ் செய்வதாகச் சரசா கூறினள்!

ஏறக்குறைய அவள் கதையும் என் கதையும் எல்லா விதத்திலும் ஒற்றுமையாகத்தானிருந்தன. ஏன் எதிர்கால வாழ்விலுங்கூட அவளும் நானும் ஒற்றுமையாக, உடன் இருக்கக் கூடாது என்று, நான் எண்ணமிட ஆரம்பித்தேன். என் கதையும்தான் அவளுக்குத் தெரியுமே. அவள் இதை மறுக்கமாட்டாள். நீங்களிருவரும்தான் ஏற்ற சோடிகள் என்று என் மனம் என்னுள்ளே குதிபோட ஆரம்பித்தது.

என் எண்ணத்தை ஒருவிதமான துணிச்சலுடன் அவளிடமே ஒரு நாள் வெளியிட்டுவிட்டேன். அவளுக்குண்டான மகிழ்ச்சிக்கோ அளவில்லை. "நீங்கள் இன்றுதான் என் அன்பைப் புரிந்துகொண்டீர்கள்' என்று சொல்லிச் சிரித்தாள்!

காலம் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. எங்கள் நட்பும் நன்ருக இடைவெளியின்றிச் சமீபித்துக் கொண்டுவந்தது. ஒருநாள் அவள் கேட்டாள் "இத்தனை நாளாக நாம் அன்னியோன்னியமாகப் பழகுகிருேமே, ஒருநாளாவது என் வீட்டுக்கு வரக்கூடாதா?" என்று. நான் தடை சொல்வேனு? சம்மதித்துவிட்டேன்.

அன்று வெள்ளிக்கிழமை. மாலை ஐந்து மணியிருக்கும். நான் சரசாவின் வீட்டுக்குப் போனேன். வாசலில் என்னைக் கண்டதும் சரசா புன்னகையுடன் வரவேற்ருள். அவள் தாயாருக்கு என்னை அறிமுகப்படுத்திஞள். அவளும் தன் "வருங்கால மாப்பிள்ளையாகிய" என்னை உவகையுடன் வரவேற்ருள். அவர்களுக்குத் தெரியுமா காலச் சூழ்நிலைக்கேற்ப மனிதவாழ்வு பயங்கரமாகப் பாதிக்கப்படுகிறதென்று? உபசாரத்திற்குக் குறைவேயில்லை. எல்லாம் மிகச்சிறப்பாகவிருந்தது. அற்ப மனிதப்பிறவிகள் வாழ்க்கை நிலத்தில் மகிழ்ச்சி நீர் சிறிது ஊறியவுடன்தான் எத்தனை மனக்கோட்டைகள் கட்ட ஆரம்பித்துவிடுகிருர்கள்?

எங்கள் பேச்சு எங்கெல்லாமோ சுற்றிச் சுழன்று கடைசியாக முற்றிற்று. நேரம் இரவு பத்துமணி. விடுதிக்குப் புறப்பட நான் ஆயத்தமானேன். சரசாவும் தாயும் கெஞ்சி மன்ருடி என்னைத் தடுத்துவிட்டனர். இரவுச் சாப்பாட்டையும் அங்கேயே முடித்துக்கொண்டு படுத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

சரசாதான் உணவு பரிமாறினுள்! அது யுத்த காலம்!! மூன்று நேரமும் சோறு சாப்பிட ஏழைத் தமிழாசிரியர்களுக்கு ஏது வசதி? என்ருலும் நல்ல அரிசிமாவாலான 'இட்லி'யைச் சரசா என் இலேயில் வரிசையாக அடுக்கியபோது என்மனம் குளிர்ந்துவிட்ட தென்றே சொல்லவேண்டும். ஒவ்வொன்ருக எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தேன். நான்கு வருடங்களாக ஆரு மில்லாத அநாதையாக உணவுவிடுதியில் தின்று குமைந்துகொண்டிருந்த எனக்கு அந்த 'இட்லி'கள் தேவாமிர்தமாக இனித்தன. என் மனதில் கடந்தகால எண்ணங்கள் புற்றீசல்கள்போலக் கிளம்பின.

நான்கு வருடங்களுக்குமுன் இதே வெள்ளிக்கிழமை என்தாய் 'இட்லி'கள் நிறைந்த கோப்பையை என் முன்னே நகர்த்திவிட்டு "சாப்பிடடா தம்பி" என்று பாசம் பரவப் பணித்த காட்சி என் மனக்கண்முன் வந்து நின்றது. என்னையறியாமலே என் கண்கள் நீரைச்சிந்தின. வாய்விட்டு அழமுடியாத நிலேமை. இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. சரசா இதனே அவதானித்துவிட்டாள்.

"ஏன் சாப்பிடும்போது அழுகிறீர் கள்? அவள் குரலில் அன்பு—பாசம் நெளிந்து குழைந்தன. "ஒன்று மில்லே!" வேண்டுமென்றே ஒரு பொய்யைச் சிருட்டித்து விட்டேன். ஆனுல், சரசாவின் செய்கை எனக்குப் புதிராகவிருந்தது. ஓடோடியும் வந்து தன் முந்தானேச் சேலேயால் என் கண்ணீரைத் துடைத்தாள். அவள் செயல் படித்துப் பட்டம்பெற்று உத்தியோகம் பார்க்கும் ஒரு நவீன யுவதியின் செயலாக எனக்குப் படவில்லே. எண்ணத்தை வெளியிடும் சக்தியைக்கூட நா இழந்துவிட்டது. அடித்துவைத்த கற்சிலேபோல அசையாமலிருந்தேன். ஆனுல், மனம் மாத்திரம் ஏதோவெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தது. சரசா 'கோப்பி' போட்டுக்கொணர்ந்து தந்தாள். பேசாமல் வாங்கிக்

குடித்தேன். கடைசியாகப் படுக்கைக்குப் போகும் போது மாத்திரம் சரசா சொன்ன அந்த வார்த்தைகள் இப்பொழுதும் என்செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றை ஏழேழு யுக யுகாந்தரங்கள் மாறினுலும் என் செவிகள் ஒலித்துக்கொண்டு தானிருக்கும்!

"இந்த ஏழையை மறந்துவிடாதீர்கள்! நீங்கள் தான் என் துணைவர்—துணைவராக வேண்டும். என் வாழ்வு உங்கள் கையில் இன்றைக்கே வந்துவிட்டது"

"இப்படியும் ஒரு படித்த பெண் தன்னை ஒரு ஆடவனுக்குப் பூரணமாக "அடிமை" யாக்குவாளோ ? என்று என் மனம் அங்கலாய்த்தது. "அதுதான் பழந் தமிழ்ப் பெண்களின் வழிவந்த பண்பு—காதல்" என்று முழங்கியது அறிவு. பேசாமல் தூங்கச் சென்றுவிட்டேன்.

அடுத்த நாள் கல்லூரியில் ஒரு பெரிய அதிர்ச்சி எங்களைக் காத்திருந்தது. கல்லூரி அதிபர் சிறிது முகவாட்டத்துடனேயே அதை வெளியிட்டார். ஆம், அதுதான் சரசாவுக்கு மாற்றம்! நாட்டுப் புறத்திலேயுள்ள ஒரு பெண்கள் பள்ளிக்கூடத்திற்கு. கலங்கிய கண்களுடன் "என்னை மறந்து விடாதீர்கள் உங்களுக்காக எவ்வளவு கால மென்றுலும் காத்திருப்பேன், இரண்டே இரண்டு வார்த்தைகளுடன் சரசா என்னிடம் விடைபெற்றுக் கொண்டாள், அதற்குமேல் அவளால் பேசமுடியவில்லை, அந்த நிலைமையில்!

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள், மாதங்களாகி உருண்டு கொண்டிருந்தன. என் வாழ்வில் ஒரே அமைதி! சரசாவின் கடைசிக் கடிதம் அன்றுவந்தது. கண்ணீரால் நனைத்து எழுதப்பட்ட கடிதம் அது. சென்ற நான்கு மாதங்களுக்குள் அந்த அபலைப் பெண்ணின் வாழ்வில் நடந்த முக்கிய நிகழ்ச்சிகளை விவரித்தது.

இராசன் சரசாவின் தாயாருக்கு தூரத்து உறவு. அந்த நாட்டுப்புறத்திலே உள்ள ஒரு ஆங்கிலப் பாட சாலைக்குத் தலைமை ஆசிரியன். அவன் குறுக்கீடு சரசாவின் தாயாரை மாற்றி விட்டது! எங்கோ ஊர், பேர் தெரியாத என்னைக் காட்டிலும் அவனை மணந்துகொள்வது மிகவும் நல்லது என்று அவள் அடம் பிடித்திருக்கிருள். சரசாவின் மறுப்பு அவள் தாயாருக்கு 'வெறி'யை உண்டாக்கிவிட்டது. இராசனை மணந்துகொள், இன்றேல் என்னைப் "பிணமாகத்தான் காண்பாய்." சரசாவின் தாய் பயங்கரமாக உறுமினுள். இக்கட்டான நிலைமை. ஒரு புறம் காதல்! மறுபுறம் கடமை!! காதலுக்கும் கடமைக்கும் போட்டாபோட்டி. இறுதியில் கடமை வென்றது! இராசன் சரசாவை மணந்துகொண்டான். சரசா இராசனை மணக்க நேரிட்டது!"

கடிதத்தைப் புரிந்து கொண்டதும் நான் நீண்ட பெருமூச்சொன்று விட்டேன், கவலைகளையெல்லாம் வெளியே தள்ளுகிற நினைவில். மீண்டும் என் வாழ்வில் அமைதி - கோர அமைதி. மயானத்தில் நிலவுகிற மகா பயங்கர அமைதி!"

கோடைக்குப் பின்னே மாரி, மாரிக்குப் பின்னே கோடை, மாறி, மாறி வருவது இயல்புதானே. எனக்கு உத்தியோக மாற்றம் என்றதும் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். ஒரே இடத்தில் நெடுக அமர்ந்திருப்பவனுக்குத் தினவு எடுப்பதுபோல எனக்கும் அத்தக் கல்லூரி புளித்து விட்டது!

ஒரு சிங்களக் கிராமம்! அங்கு என்னை மாற்றிவிட்டார்கள். அங்கே நான் போனபோதுதான், நான் எதை விரும்பவில்லையோ அதை நான் கிட்டிவிட்டேன் என்று தெரியவந்தது! எனக்கு உத்தியோகமான அந்

தப் பாடசாலைக்கு தலைமை ஆசிரியனாக இராசன் வந்திருந்தான்! கல்லூரியிலிருந்து பாடசாலைக்குப் போவதைப் போலத்தான் அமைதியிலிருந்து சஞ்சலத்தை நோக்கி என் வாழ்வு நகர்ந்தது.

இராசன் ஒரு ஆடம்பரப் பேர்வழி என்பதைப் பழகிய ஒரு சில தினங்களுக்குள்ளேயே நான் அறிந்துவிட்டேன். பாடசாலை ஓய்வான நேரங்களிலெல்லாம் அவன் மிதமிஞ்சிய 'குடிவெறி'யில் தத்தளித்துக் கொண்டிருந்தான். மதுவின் போதையில் அவன் அறிவு ஒளி வரவர மங்கிக்கொண்டிருந்தது. எத்தனையோமுறை என்னைத்தன் வீட்டுக்கழைத்தான். பல முறை மறுத்தேன். ஆனால் மனிதசுபாவத்தை மாற்றி நெடுங்காலம் மறுக்கமுடியுமா?

ஒருமுறை அவன் வீடு சென்றேன். என்னை அழைத்துவிட்டு அவன் மதுவின் போதையில் எங்கோ போனவன், வரமறந்துவிட்டான். ஏகாந்தமான நிலைமையில் சரசா என்னைக் கண்டாள், என் கால்களைக் கட்டிக் கொண்டு அழுது தீர்த்தாள். மது போதையிலே இராசன் தன்னைப் படுத்தும் பாடுகளைக் கூறி மனம் வெதும்பினாள். "நீ என் சகோதரி; அவனைத் திருத்தி நன்றாக வாழுதல் உன் கடமை" என்று புத்திமதி சொல்லிவிட்டு வீடு திரும்பினேன்.

"அண்ணா என் மனதில் ஒருவருக்குத்தான் இடம் உண்டு. ஆனால்..........வழி தவறி நடக்கமாட்டேன். காலத்திற்கு வெம்பி விழும் கனியைப்போல துன்பச் சுமையினால் என்றோ என் உயிர் பிரிந்து விடும். அது வரையும் என்னை மறவாதீர்கள் அண்ணா! அடிக்கடி இங்கு வந்து போங்கள்."

அவள் வேண்டுகோளை என்னால் மறக்கமுடியவில்லை - என்மனம்தான் ஏற்கனவே சபலசித்தத்திற்குச்

சாவுமணி அடித்து விட்டதே. உண்மையான சகோதர பாசத்தோடு அவளுடன் பழகினேன். ஒத்தாசை செய்துவந்தேன்.

ஆனல்...............!

குருட்டுச் சமூகம்— அதன் கோர எண்ணங்கள், நேர்மையான உள்ளமுடைய ஒரு பெண்ணை எப்படி அணு, அணுவாய் அரித்துச் சாக்காட்ட முடியுமோ அதற்கு இலக்காக முடிந்தது சரசாவின் வாழ்வு!!

பாடசாலையிலும் வீட்டிலும், அவளும் நானும் பழகிய விதத்தைச் சமூகம் சந்தேகக் கண்களுடன் பார்க்க ஆரம்பித்தது. மதுவின் போதையிலே மதியை இழந்த இராசன், சரசாவைப் படாதபாடு படுத்தினன். கணவன் என்ற உரிமையினுல், அதன் விளைவு...........?

ஒருநாள் முரட்டுக் கணவனையும்' அன்புத் தாயினையும், உயிர்ச்சகோதரனுகிய என்னையும் பிரிந்து சரசா எங்கோ ஓடிவிட்டாள்!

எங்கே............? தெரியாது! ஆனல் திரும்பிவர முடியாத உலகிற்கு என்பது பலர் அபிப்பிராயம் உண்மையும் அதுதானே...........?

எனக்கு உலகமேவெறுத்து விட்டது. உத்தியோகத்தையும் விட்டுவிட்டு எங்கெல்லாமோ சுற்றினேன்; எங்கெல்லாமோ அடைபட்டுக் கிடந்தேன். இப்பொழுது மீண்டும் நாடோடியாக வாழ்நாளைக் கழிக்கின்றேன்? கதை சொல்வதை நிறுத்தினுன் வாலிபன்.

புகைவண்டி ஒரு நீண்ட பெருமூச்சொன்றைக் குரலாக ஒலித்துவிட்டு நின்றது. தலையை வெளியே நீட்டிப் பார்த்தேன்.சனங்கள்நெருக்கியடித்துக்கொண்டு

ஏறுவதும், இறங்குவதுமாக இயங்கிக்கொண்டிருந்த னர். "நான் இங்கே இறங்கப் போகிறேன் ஐயா" என்று சொல்லிவிட்டு, கைப்பெட்டியையும், தலையணை யையும் தூக்கிக்கொண்டு பதிலுக்குக் காத்திராமல் நெருங்கிநின்ற சனத்திரளினூடே மறைந்தான் வாலி பன். அவன் கதையும், தோற்றமும், சுபாவமும் எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. நெடுநேரம் விழித்திருந்து கதைகேட்ட அலுப்பு கண்ணைமூடியது. இருக்கையில் படுத்துத்தூங்க ஆரம்பித்துவிட்டேன். எவ்வளவு நேரம் தூங்கினேனோ எனக்குத்தெரியாது. நான் கதைகேட்டுக்கொண்டிருந்தபோது தூங்கிக் கொண்டிருந்த பெரியவர் என்னைத் தட்டி எழுப்பி ஞர், இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டதென்று. சோம்பல் முறித்துக்கொண்டு எழும்பிய என்னை யாழ்ப் பாண நிலையம் வரவேற்றது.

பெட்டி படுக்கைகளைத் தூக்கிக்கொண்டு இறங்கி நடந்தேன். பத்திரிகைக்காரப் பையனின் குரல் பின்னுக் கிழுத்தது. ஒரு பத்து சதக் குத்தியை விட்டெறிந்து விட்டுப் பத்திரிகையை வாங்கிப் புரட்டிப் பார்த்துக் கொண்டே நடந்தேன். முதற்பக்கத்தில் காட்சியளித்த புகைப்படம் என்னை ஒரு குலுக்குக் குலுக்கியது! யாருடைய கதையை இரவு முழுவதும் கேட்டுக்கொண் டிருந்தேனோ அவருடைய புகைப்படம்தான் அது. அதன் கீழே பெரிய எழுத்துக்களில் பின்வரும் செய்தி பிரசுரமாகியிருந்தது :

**"சித்தப்பிரமையினல் பீடிக்கப்பட்டிருந்த பிரபல எழுத்தாளர் சுகமுற்ருர்.**

மருத்துவமனையினின்றும் வெளியேறினர் !

— கொழும்பு, ஐப்பசி, 20

இலங்கையின் பிரபல தமிழ் எழுத்தாளர்களில் ஒருவரும் கடந்த மூன்று வருடங்களாக அங்கொடை மனநோய் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தவருமான திரு. "கனிமொழியார்" நேற்றுப் பிற்பகல் நான்கு மணிக்கு மனநோய் மருத்துவமனையினின்றும் பூரண சுகமடைந்தவராய் வெளியேற்றப்பட்டார். அவரை நமது நிருபர் பேட்டி கண்ட போது "தாம் இனிமேல் சுயேச்சையாகத் தமிழ்த்தொண்டு செய்து வரவிரும்புவதாகவும், பழையபடி ஆசிரியத் தொழிலில் ஈடுபட விரும்பவில்லையென்றும் கூறினர். அவர் வெளிப்பாடு தமிழ் இலக்கியத்திற்குள்ள மகத்தான அதிட்டத்தையே நிரூபிக்கிறது.

செய்தியை வாசித்து முடித்ததும் என் தலைசுழன்றது. இத்தகைய ஒரு மகாமேதையா இரவு முழுவதும் என்னுடன் பேசிக்கொண்டிருந்தார் என்று மனம் மகிழ்ந்தது. உடனே "பிரபல எழுத்தாளருடன் ஒரு இரவு" என்ற செய்தியை எழுதி எனது பத்திரிகைக்கனுப்ப விரைந்து நடந்தேன்.

# அகலிகை

மெல்லெனத் தவழ்ந்த தென்றற்காற்று அவன் மேனியிற் பட்டதும் அவன் துடியாய்த் துடித்தான். ஆயிரம் தீப்பந்தங்கள் ஒன்றுசேர்ந்து தன் உடலைத் தகிப்பதைப்போல அவன் நெளிந்து, உருண்டு, புரண்டு படுத்தான். அனிச்ச மலரினுலும் அன்னத்தின் தூவியினுலுமாய மெல் அமளியில் அவன் உடல் புரண்டு வருந்தியது. ஆயிரம் ஆண்டுகளாக அவன் கண்டறியாத மன வேதனை உள்ளத்தை அரித்துக்கொண்டிருந்தது. நறுமணம் வீசும் புது மலர்களும் சுகந்தம் மணக்கும் தெய்வ சந்தனக் குழம்பும் அவன் மனதின் ஆசையைத் தீர்க்க முடியாது தேடுவாரற்றுக் கிடந்தன. அரண்மனையின் அந்தப்புரத்தில் இந்திராணி "என் நாதன் ஏன் இன்னும் வரவில்லை?" என்று எண்ணியவளாய் ஏங்கிக்கிடந்தாள். ஆனுல், இந்திரன் சபா மண்டபத்தையடுத்த பளிங்கு மண்டபத்தில் ஏகாந்தமாக இங்ஙனம் கிடந்து துயருற்ருன். இவ்வளவுக்கும் காரணம் என்ன? "கிடைத்தற்கரிய பதவி, அழிவில்லாத வாழ்வு, அமர உலகம் இத்தனைக்கும் இறைவனுன இந்திரன் ஏன் இங்ஙனம் துயருற்ருன்? அவன்

மனவேதனையை வளர்த்தவர் யார்? இந்திரன் மனம் இவ்வாறெல்லாம் கற்பனை செய்து எண்ணத்தொடரைச் சிலந்தி நூல்போல இழுத்துக்கொண்டிருந்தது.

மகிழ்ச்சி, துன்பம்! இரண்டும் மாறிமாறி வருவது மனிதருக்கல்லவா? தேவர்களுக்கரசனுகிய இந்திரனையே ஒருநாள் அவை பற்றிக்கொண்டால் ...........? சிந்தனை சிதறியது.

அன்று நடந்த நாட்டிய விழாக் காட்சி அவன் மனத்திரையில் தோன்றியது. தேவ சபையின் நடுவே அரியாசனத்தில் கம்பீரமாக அவன் வீற்றிருந்த காட்சி அவன் பக்கத்தில் தேவகுருவான பிரகஸ்பதி, இசை முனிவன் நாரதன் முதல் யாவரும் இனிதமர்ந்திருந்த காட்சி, உள்ளத்தை அள்ளும் சௌந்தரியதோற்றத்துடன் உடல் நெளித்து ஊர்வசி நடனமாடிய காட்சி எல்லாம் தோன்றி மறைந்தது. அவன் மனம் கற்பனை செய்வதை நிறுத்திவிட்டு அன்று நடந்த நாட்டியவிழா நினைவுகளைத் தொடர்ந்து எண்ணத் தொடங்கியது. என்ன வாழ்வு? என்ன சுகம்? எல்லாமே துன்பம்! தேவர்க்கரசனுகிய இந்திரன் மனம் புழுங்கியது.

"ஆ, அந்த ஊர்வசி ஏனிந்த வார்த்தைகளைக் கூறி என் உயிரை வாங்கினுள்? சொர்க்க போகமும், காமதேனுவின் வளந்தரு வாழ்வும் என் மனதிற்கு மகிழ்ச்சி தரவில்லையே! ஐயோ, இது என்ன உலக மடா? அவளுக்கு நான் பரிசு கொடுத்தேன். ஆம்! நான் செய்தது தவறு? உள்ளத்தையும் உடலையும் ஒருங்கே மகிழ்ச்சிக் கடலில் மிதக்கச் செய்து என்னைப் பரவசப்படுத்தி, நடனமாடிய அந்தப் பச்சைப் பசுங்கிளிக்கு, நடனராணி ஊர்வசிக்கு நான் பரிசு கொடுத்துப் பாராட்டினேன். அதன் பலன் அவள் தந்த பரிசு என் உள்ளத்தையல்லவா கருக்கி வருத்து

கின்றது. "தேவர் தேவே, நீங்கள் என் அழகினை மிகைபடப் பாராட்டிவிட்டீர்கள். கேவலம்! ஒரு மானிடப் பெண், அதுவும் பழமும் காயும் தின்று முனிவரொருவருடன் காட்டில் வதியும் அகலிகை. அவள் அழகில் ஆயிரத்திலொரு மடங்குகூட எனக்கில்லையே. உங்கள் பாராட்டுரையும் பரிசும் என்னழகையல்லவா, ஏளனஞ் செய்கின்றன?" உணர்ச்சி மிகுதியினால் அவள் கூறிய வார்த்தைகள் என்னை உலைக்களத்திட்ட இரும்பைப்போலல்லவா உருகச் செய்துவிட்டது! என் மனம் இனி எங்ஙனம் ஆறுதலடையும்? அந்த அகலிகை — என் உயிர் பறித்த அகலிகை—அகில சிருஷ்டியிலும் அழகில் உயர்ந்த அகலிகை, அவளைக் காணாது, அவளுடன் பேசாது' அவளுடன் சேராது என் உயிர் பதைபதைக்கிறதே!ஐயோ, அகலிகை! அகலிகை!! அகலிகை!!!

தேவேந்திரன் வாய் திறந்து புலம்பினான். பளிங்கு மண்டபம் முழுவதிலும் அகலிகையின் அழகு உருவங்கள் பரிணமித்துக்கொண்டிருப்பதாக அவன் எண்ணினான். இந்திராணி - அகலிகை, முருக்க மலரும் முள்ளுரோசாவும் போலக் காட்சியளித்தனர். அவன் மனம் இந்திராணியை வெளியுலகத்துக்குப் போகுமாறு பலவந்தமாகப் பிடித்துத் தள்ளியது. அகலிகையின் அழகுருவம் அவன் இதயபீடத்தில் ஏகாதிபத்தியஞ் செலுத்திக்கொண்டிருந்தது. அவன் தேகம் ஒருமுறை சிலிர்த்தது. அகலிகையின் அழகினை அணு அணுவாகப் பிரித்து இரசிப்பதாகக் கற்பனை செய்துகொண்டிருந்தான் இந்திரன்.

முல்லை மொட்டுகளையொத்த பற்கள், உரோசாவைப் போன்ற சிவந்த உதடுகள், கடல்போன்ற கண்கள், பிறைபோன்ற நெற்றி, கலசம் போன்ற தனங்கள், அதற்குமேல் அவனால் கற்பனை செய்ய முடியவில்லை'

பஞ்சணைமீது வெயர்வை வெள்ளமாக ஓடியது! அவன் மனம் பூவுலகத்தை நாடிப் பறந்தது. அடுத்த கணம் ............!

நள்ளிரவில் வைகறை மலர்ந்தது. புட்கள் சிறகடித்துப் பறந்தன. காலை மலரும் மலர்கள் அப்பொழுதே முகை விரித்து மலர்ந்தன. வண்ணச் சேவல் 'கொக்கரக்கோ' என்று கீதமிசைத்தது. கௌதம முனிவர்படுக்கையினின்றும் சுருட்டி வாரிக் கொண்டெழுந்தார். காலைக் கடன் கழித்து வேத மந்திரங்களைச் செபிக்க விரைந்து நடந்தார். அகலிகை நித்திராதேவியின் அரவணைப்பில் கட்டுண்டு கிடந்தாள். நிச்சலனமான அவள் முகத்தில் அழகு ஒளி விட்டுக்கொண்டிருந்தது. சாந்தமும், அமைதியும் நிறைந்த சூழ் நிலையில் அவள் ஒரு அழகின் சிருட்டியாகத் துயின்றுகொண்டிருந்தாள்.

கௌதமமுனிவர் விரைந்துவந்தார். அவர் நடையில் வேகமிருந்தது. சாந்தியின் கோரச்சிதைவு அவர் முகத்தில் கறையாகப் படிந்து, அவலட்சணமாகச் சுடர் விட்டது. ஆனால் அவர் எதையும் இலட்சியஞ் செய்பவராகவில்லை. அவர் உடல் தகித்துக் கொண்டிருந்தது. தாங்கமுடியாத இன்பக் 'கத, கத'ப்பை நீக்க அவர் அகலிகையை நாடினார். பர்ணசாலையின் கதவை இறுக்கிச் சாத்திவிட்டு அகலிகையின்பக்கலில் வந்தமர்ந்தார். அகலிகை திடுக்கிட்டு விழித்தெழுந்தாள். முனிவரிருந்த நிலை அவளைத் திகைக்கச் செய்தது. 'சுவாமி' என்ற அவள்குரல் தொண்டையை விட்டு வெளிவருமுன்னர் கௌதமரின் கரங்கள் அவள் கழுத்தைச் சுற்றி வளைந்தன. பருவத்தின் இனிப்பில் சூழ்நிலையின் மயக்கத்தில் அவள் நினை விழந்தாள், அப்புறம்......

இன்பம், இன்பம்......ஊற்றெடுத்துப் பாய்ந்துகொண்டிருந்தது.

அகலிகை இன்ப வேதனையில் முனகினாள்! கலக்கத்தின் சாயல் அவள் குரலில் கலந்திருந்தது. இந்த இன்பம் கௌதமரோடு காதல் புரிந்த பத்து ஆண்டுகளில் அவள்சுவைத்திராத இன்பம். காயும், கனியும், கிழங்கும் தின்று உருவாகிய முனிவர் காட்டும் இன்பத்திற்கும், அமிர்தத்தையே புசித்து மதுக் கடலில் மூழ்கியெழும் அவன் காட்டும் இன்பத்திற்குமுள்ள வித்தியாசத்தை மட்டிட முடியாத பேதையா அவள்? ஆனால் அவளால் அதை மறுக்க - தடுக்க முடியவில்லை! இன்ப மயக்கத்தில் கிடந்து ஏதோ உழறினாள். கோட்டான் ஒன்று பயங்கர சப்தத்தில் குழறியது. அகலிகையின் உள்ளம் நடுங்கியது.

'அகலிகை' என்று ஆவேசமான குரலில் அழைத்துக்கொண்டே பர்ணசாலைக் கதவை இடித்துத் திறந்தார், கௌதம முனிவர். கோபத்தினால் அவர் தேகம் துடித்துக்கொண்டிருந்தது. கொடுங்குளிரில் நீரில் இறங்கி ஸ்நானஞ் செய்ததால் அவர் அணிந்திருந்த ஆடையினின்றும் நீர் துளித்துக் கொண்டிருந்தது. இந்திரன் செய்த துரோகத்தை எண்ணியபோது அவர்கண்கள் அனலாய் எரிந்தன. ஞான திருஷ்டியால் அவன் அநியாயத்தை அறிந்து ஓடோடியும் வந்ததால் அவர் நாசியினின்றும் காற்று வேகமாக வெளிவந்துகொண்டிருந்தது.

ஆபத்தான நிலைமையில் அகப்பட்டுக்கொண்ட அகலிகை செய்வதென்னவெனத் தெரியாது திகைத்தாள். கள்ளக் காதல் புரிந்த இந்திரன் ஒரு வெள்ளைப் பூனையாகப் பர்ணசாலைக் கதவிடுக்கின் வழியாக வெளியேற முயற்சித்துக் கொண்டிருந்தான். 'அடே

துரோகி இங்கே நில்லடா' என்று உறுமினர் முனிவர். 'ஐம்புலனும் நடுநடுங்க ஐராவதம் ஊர்ந்த இந்திரன் அடங்கியொடுங்கி நின்றன். ஆ லை ச க் கு இடம் கொடுத்து தேவர்களுக்கே இழுக்குண்டாக்கினய். அதற்குப் பரிசு, இதோ, "பிடி சாபம்" என்று கர்ச்சித்த முனிவரைக் கண்ணெடுத்தும் பாராது இந்திரன் தலை குனிந்து நின்றன். முனிவர் வாய் ஏதோ முணு முணுத்தது. அடுத்த கணம் அழகேயுருவான இந்திரனது மேனியில் ஆயிரம் கண்கள் - ஓட்டைகள், பித்துப் பிடித்தவன்போல இந்திரன் ஓடினன் — ஓடிக் கொண்டேயிருந்தான். கௌதம முனிவர் அவனைப் பார்த்துச் சிரித்தார். அவரது பயங்கரச்சிரிப்பை எதிரொலிப்பனபோல அடர்ந்து நெருங்கி வளர்ந்திருந்த தேவதாரு ம ர ங் க ள் ஒரு முறை 'சிலு சிலு'த்துக் கொண்டன.

அகலிகை இந்தக் காட்சியைக் கண்டு நடுநடுங்கினள். கௌதமரின் காலடியிலே விழுந்து கிடந்து அழுதாள். "தூர நில் பேயே" என்று எட்டி உதைத்தார் முனிவர். அழகேயுருவான அகலிகை படர் கொம்பற்ற முல்லைக் கொடிபோல முனிவரின் முன்னே துவண்டு விழுந்தாள்.

"மன்னியுங்கள் மதிமோசம் போய்விட்டேன், என்னை மன்னியுங்கள்!" என்று அரற்றிய அவளை முனிவர் வெறுப்போடு பார்த்தார். அவர் கோபம் சிறிது ஆறியிருந்தது.

"தவறுக்கேற்ற தண்டனையை அனுபவித்துத்தானகவேண்டும். மன்னிப்பிற்கும் ஒரு அளவிருக்கிறது. இதோ தண்டனை. முனிவர் வாய் முணுமுணுத்தது. அடுத்த நிமிடம் அழகேயுருவான அகலிகை ஒரு பெரிய கல்லாகிக் கிடந்தாள். பாவம்! முனிவர் குறிப்பிட்ட

காலம் வரைக்கும் அவள் கல்லுருவில் கிடந்து தானே யாகவேண்டும்.!

பர்ணசாலை களையிழந்து காணப்பட்டது. ஒரு சூறைக் காற்று முனிவர் கண் முன்னேயே அந்தப் பர்ணசாலையைப் பெயர்த்தெறிந்தது. அவர்சிரித்தார். அந்தச் சிரிப்பிலே அறிவின் ஆழம் புகைபோலத் தென்பட்டது. சுற்றுமுற்றும் ஒரு பார்வையை ஓட விட்ட முனிவர் தண்டுகமண்டலத்தை ஏந்தியபடியே திரும்பிப் பாராமல் வேகமாக நடந்தார்!

# நம்பிக்கை

குந்தன் ஒரு பெரிய மனிதனல்லன். பாராளு மன்றப் பிரதிநிதியுமல்லன். கடவுளையும் மனிதனையும் இணைத்துக்காட்டும் வைதீகக் குருக்களாக, மதகுரவ ராகக் கூட இல்லை! ஆனால் நான் அவனிலே அளவுக்கு மீறிய மதிப்பு வைத்திருந்தேன். ஏன் தெரியுமா?

அவன் வெள்ளை உள்ளம் படைத்தவன். சாதாரண மான ஒரு சலவைத் தொழிலாளி. அவனுடைய கரம் பட்ட துணி எவ்வளவு தூய்மையாகப் பிரகாசிக்கின் றதோ அந்த அளவு உள்ளத் தூய்மையை நான் அவ னிலே கண்டிருக்கிறேன். சிரித்த முகத்துடனும், பொலிவான தொந்தியுடனும் தோன்றி "எசமான்" என்று அவன் அழைக்கும்போது என் மனது குளிர்ந்து விடும். துண்டுச் சால்வையைத் தோளிற் போட்டுக் கொண்டு சற்று உப்பிப்போன முகத்தைத் திருப்பி "எசமான் வெள்ளிக்கிழமை வருகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போவானானால் வெள்ளிக்கிழமை வரத்

தவறினாலும் அவன் வரவு தவறாது என்று நிச்சயமாக நாம் நம்பியிருக்கலாம்.

அத்தகைய கடமையுணர்ச்சிமிக்க தூய்மை உள்ளம் படைத்த கந்தனுக்கு ஒருநாள் இருந்தாற்போலிருந்துவிட்டுப் பைத்தியம் பிடித்துக் கொண்டது! அதுவும் "விசித்திரமான" ஒரு நம்பிக்கையினாலேற்பட்ட பைத்தியம். அந்தப் பைத்தியத்திற்கு அந்த விசித்திரமான நம்பிக்கைச் சிதைவுக்குத்தான் ஒருநாள் அவன் தன் ஆருயிரையும் பலிகொடுத்தான். இந்தச் சம்பவத்தை நினைக்க நினைக்க எனக்கே பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது.

எடுத்தவுடன் எல்லாரையும் நம்பிவிடுகின்ற அபாயம் நம்மிற் பலருக்கில்லாமலிருக்கலாம். ஆனால் என்னைப் போன்ற "பிஞ்சு" எழுத்தாளர்கள் அப்படியிருக்கமாட்டார்களென்று சொல்ல முடியாது. ஏனென்றால் இந்த "நம்பிக்கைச் சுபாபம்" என்றோ ஒருநாள் எனக்கு நாசத்தைத்தான் தரும் என்று கந்தன் என்னைப் பலமுறை எச்சரித்திருக்கிறான். ஆனால் இறுதியாகக் கந்தன் எந்த "நம்பிக்கைச் சுபாபத்தை" எதிர்த்தானோ அதே சுபாபத்திற்கு அவன் பலியாக நேர்ந்ததுதான் பரிதாபகரமான வரலாறு.

கந்தன் எந்த விடயத்தையும் எடுத்தவுடன் நம்பமாட்டான். ஆனால் நம்பிவிட்டானோ பரம்பொருளான பரமசிவனே முன்னாலே குதித்து நின்று உன்னுடைய நம்பிக்கை தப்பானது என்றாலுங்கூட அவன் தனது நம்பிக்கையை விட்டுவிட மாட்டான். அவ்வளவு பிடிவாதக்காரனவன்.

கந்தனுக்கோ, இந்த உலகத்திலே ஆகக் கூடி இரண்டே இரண்டு பேரில் மாத்திரம்தான் அதிக நம்

பிக்கை. அந்த இரண்டு பேர்வழிகளில் ஒருவரை நான் மனித உருவத்தில், நடமாடுங் கோலத்தில் கண்டு களித்திருக்கிறேன், அவர் தான் சுப்பையாச் சோதிடர்.

எனக்கு இந்தச் "சோதிடம் கீதிடம்" என்பதிலெல் லாம் அவ்வளவு நம்பிக்கையில்லை. சோம்பேறிகள் வயிற்றுப் பிழைப்புக்காகக் கட்டி வைத்த சுயநல ஏடு கள்தான் "சோதிடக் களஞ்சியங்கள்" என்பது என் வாதம். ஆனால் கந்தனுக்கு அவற்றின் மேலே அபார நம்பிக்கை. "சுப்பையாச் சோதிடர் சொன்னுச் சொன் னதுதான். ஒருவார்த்தை பிழையாது" என்பான் கந்தன். "வெறும் பொய், புரட்டு, ஏமாற்றுவேலை" என்பேன் நான். பார்க்க வேண்டுமே கந்தனுக்கு வரும் கோபத்தை! "எசமான் என்னைப்பற்றி என்ன வேண்டுமானாலுஞ் சொல்லுங்கள்; பரவாயில்லை! ஆனால் சோதிடத்தை, அதன் புனிதத் தன்மையை மட்டும் குறைத்துப் பேசாதீர்கள்! நான் கண்ணுற் கண்ட கடவுள் சுப்பையாச் சோதிடர்தான். அவர் சொன்ன நாளிற்றான் என் மனைவி இறந்தாள். மகளுக்குப் பிள்ளை பிறந்தது. மகனுக்கு வருத்தம் மாறியது. அவர் என் குலதெய்வம்" என்று கூத்தாடுவான் கந் தன். அப்படிப்பட்ட சுப்பையாச் சோதிடர்தான் கந்த னின் அகால மரணத்திற்குக் காரண கருத்தர் என்பது என் விவாதம்!

"இரண்டு ரூபாயைக் கொடுத்து இரண்டு இலட்சம் ரூபாய்களைத் தட்டிக் கொள்ளுங்கள். அதிட்டம் உங் களை அழைக்கிறது. அதன் அரவணைப்பை அலட்சியப் படுத்தி இலட்சக் கணக்கான ரூபாய்களை இழந்துவிடா தீர்கள்". என்று சந்துபொந்துகளெல்லாம் அரசாங்கச் செலவில் விளம்பரம் செய்த கொழும்புத் திட்டக்காலம் அது. கந்தனுக்கும் ஒரு நப்பாசை! இரண்டு ரூபாய்

களைக் கொடுத்து இரண்டு இலட்சம் ரூபாய்களைப் பெறுவதென்றால் யாருக்குத்தான் ஆசை பிறக்காது! “கேவலம் இதற்கா யோசிக்க வேண்டும்? இரண்டு ரூபாய்க் காசுதானே. பேசாமல் விட்டெறிந்துவிட்டு ஒரு ‘அதிட்டச் சீட்டு’ வாங்கி விடலாமா” என்று யோசித்தான் கந்தன்.

ஆனால் ‘சட்’டென்று பிறந்த ஒரு எண்ணம் அவன் யோசனையைச் சிதறடித்து விட்டது. “அதிட்டம் இருக்க வேண்டாமா அதிட்டம். வீணாகப் போய் ஏன் காசைக் கொடுக்க வேண்டும்? இரண்டு ரூபாயென்றால் ஏதோ எளிதிற் கிடைத்து விடுகிறதா?” சுப்பையாச் சோதிடர் வீட்டை நோக்கி அவன் கால்கள் வேகமாக நடந்தன. வீட்டு முற்றத்தில் வெற்றிலை பாக்கை மென்று விழுங்கிக்கொண்டே ஒரு கயிற்றுக் கட்டிலில் குந்திக் கொண்டிருந்த சுப்பையாச் சோதிடர் கந்தனைக் கண்டதும் குசலம் விசாரிக்க ஆரம்பித்து விட்டார்.

“ஏனப்பா, நீ இந்த ஊரிலேதானே, இருக்கின்றாய்? எங்கே ஒரு நாளாவது வீட்டுப் பக்கம் வரவேண்டுமென்ற யோசனை உனக்கில்லாமற் போய்விட்டது! கலிகாலமல்லவா, அதிலே நீ என்னை மறந்து போவதும் ஒரு பெரிய தவறா?” நீட்டி முழக்கினார் சுப்பையாச் சோதிடர், “இல்லை எசமான். கொஞ்ச நாளாக எனக்கும் உடம்பு சரியில்லை. சும்மா வண்டிமாடு மாதிரி வயது அறுபதாகியும் உழைத்துக் கொண்டிருப்பதென்றால்...”.

“சரி, சரி உன்பாடும் கஷ்டம்தான்...இங்கு வந்த விசேடம்?” என்று வாயைத் திறந்தார் சுப்பையாச் சோதிடர்—கந்தனின் குலதெய்வம்!

"உங்களை ஒரு சங்கதி கேட்டுச் செய்யலாமென்று, இந்தக் கொழும்புத் திட்டமென்று ஒரு திட்டம் நடத்து கிறார்களாமே, அதிலே இரண்டு ரூபாய் கொடுத்து ஒரு 'சீட்டு' எடுத்தால் அதிட்டமும் இருந்தால் இரண்டு இலட்சம் ரூபாய்கள் அடித்து விடுமாமே. அதுதான் என் அதிட்டம் எப்படி என்று உங்களைக் கேட்டுச் செய்யலாம் என்று," "சரி, சரி எங்கே உன் கையை இங்கே கொண்டுவா பார்க்கலாம்". "அப்பா, பெரியாள் நீ. இந்தச் சித்திரை மாதம் பத்தாம் தேதிக்குள் நிச்சய மாக ஒரு இலட்சாதிபதியாகிவிடுவாய். அப்படியே கையிலே தனரேகை தேர்ச் சக்கரம் மாதிரி அடையா ளம் போட்டுக்கொண்டு கிடக்கிறது. எங்கே அதிட்டம் அடித்ததும் என்னை மறந்துவிடுவாயோ, என்னவோ?"

"மறந்து விடுவதா எசமான்! நானா உங்களை மறப் பேன். இல்லை! ஒரு நாளும் மறக்க மாட்டேன்" கந்தனின் கண்களில் கண்ணீர் சுரந்தது. "எசமான், அப்படியானால் இப்பொழுதே இரண்டு ரூபாயைக் கொடுத்து ஒரு அதிட்டச் சீட்டு எடுத்திடட்டுமா?"

"என்னடா, நான் சொன்ன பிறகுமா, சந்தேகப் படுகிறாய்? சுப்பையாச் சோதிடர் சொன்னாச் சொன் னதுதான். போ, உடனேயே ஒரு 'சீட்டு' எடுத்துக் கொள்!"

சமீபத்திலிருந்த அஞ்சல் நிலையத்தை நோக்கிக் குடல் தெறிக்க ஓடினான் கந்தன், அவசரம், அவசர மாக வேட்டித் தலைப்பில் முடித்து வைத்திருந்த காசு இரண்டு ரூபாயையும் அவிழ்த் தெடுத்து ஒரு 'அதிட்டச் சீட்டு' வாங்கிக் கொண்டான். இப்பொழுது அவன் மனதிலே ஒரு அமைதி. இரண்டு இலட்சம் ரூபாய் களின் சொந்தக்காரனாகிவிட்ட பேரமைதி. நிம்மதி யான மனதுடன் வீட்டை நோக்கி நடந்து கொண்டி ருந்தான்.

வாசிகசாலை முழுதும் எள் போட்டால் எள் விழாத அளவுக்குச் சனக்கூட்டம், ஏன் தெரியுமா? அன்று தான் கொழும்புத்திட்ட 'அதிட்டச் சீட்டு' எவனே ஒரு மனிதனுக்கு இரண்டு இலட்சம் ரூபாய்களைச் சொந்தமாக்கும். கந்தனும் கால் கடுக்க வெளியே நின்று கொண்டிருந்தான். என்னவோ முதற் பரிசு மட்டும் தனக்குத்தான் என்ற நம்பிக்கை அவனுக்குத் திட்டமாக இருந்தது. "சுப்பையாச் சோதிடர் சொன்னுற் சொன்னதுதான்" என்று அவன் வாய் முணுமுணுத்தது. அவனுக்கெங்கே தெரியப் போகிறது. இந்த அதிட்டச் சீட்டில் இருபது வாங்கி அடுக்கி வைத்துவிட்டுச் சுப்பையாச் சோதிடர் நித்திரை கொள்ளாது வானெலிப் பெட்டிக்கு முன்னுல் தவமிருப்பது?

வானெலியின் 'கர் புர்' ரென்ற சத்தம் கூடியிருந்தவர்களின் காதுகளைக் குடைந்தெடுத்தது. அந்த 'அகோர' உறுமலுக் கிடையில் "இது இலங்கை வானெலி, கொழும்புத் திட்ட அதிட்டச் சீட்டில் வெற்றி பெற்ற இலக்கம் (முதற் பரிசு) ஈ. வை. 0587".

எல்லோரும் அசடு வழியும் முகங்களுடன் தத்தம் சீட்டுக்களின் எண்களைத் திருப்பித், திருப்பிப் பார்த்தார்கள். ஒருவருக்கும் அந்தப் பரிசு கிடைக்கவில்லை. பாவம், கந்தன் தனது சீட்டின் எண்களைப் பார்த்தான். ஈ. வை. 0...5...8...!"

"பொய், பொய்! எனக்குத்தான் பரிசு, எனக்குத்தான் பரிசு! சுப்பையாச் சோதிடர் சொன்னுற் சொன்னதுதான். எனக்குத்தான் பரிசு, எனக்குத்தான் பரிசு!... ஆ...ஆ...ஆ... எனக்குத்தான் பரிசு!" ஆவேசக் குரலில் கத்தினுன் கந்தன். 'எங்கே என் பரிசை என்னிடம் கொடுங்கள்'.

கூடியிருந்த மக்களைப் பார்த்துக் கந்தன் கர்ச்சித்தான். சனங்கள் திகைத்துவிட்டனர். "பாவம், திடீரென்று பைத்தியம் பிடித்துக்கொண்டது. வீண் நம்பிக்கைச் சிதைவின் விளைவு" என்று பேசிக்கொண்டனர்.

கந்தன் எதையுமே இலட்சியம் செய்யவில்லை. எனக்குத்தான் பரிசு, எனக்குத்தான் பரிசு" என்றுகத்திக் கொண்டே ஓடிக்கொண்டிருந்தான். "நம்பிக்கைதான் வாழ்க்கையின் உயிர்நாடி. அந்த நம்பிக்கை — ஆசைக் கனவு என்று கோரமாகச் சிதைகின்றதோ, அன்றைக்கு மனிதன் பேயாக மாறிவிடுகிருன்". "நம்பிக்கைத் தத்துவ"த்தைப்பற்றி விரிவுரை செய்தார். கூட்டத்தில் நின்ற ஒரு படித்த இளைஞர்.

கந்தனைச் சுற்றிப் பல பள்ளிச்சிறுவர்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். அழுக்கடைந்த கந்தல் துணிகளை மூட்டை யாக்கித் தோளிற் சுமந்து கொண்டிருந்த கந்தன் அவர்களைப் பார்த்துப் பயங்கரமாகச் சிரித்தான்.

"எனக்குத்தான் பரிசு..."

"பைத்தியம் பரிசு கேட்கிறது" பள்ளிச் சிறுவர்கள் "கல, கல" வென்று சிரித்தார்கள்.

"முட்டாள்கள், இதோ நான் பரிசு வாங்கத்தான் போகிறேன். வாங்கிவந்தபிறகு மட்டும் என்னைப் பார்த்துச் சிரிக்கக்கூடாது! என்ன."

கந்தன் தெளிவான குரலில் அந்தச் சிறுவர்களைப் பார்த்துப் பேசினன். "எங்கே வாங்கிவா பார்க்கலாம்!" பள்ளிச் சிறுவர்கள் எல்லோரும் ஏகோபித்த குரலில் கத்தினர்கள்.

"இதோ வாங்கி வருகிறேன்..." 'தொபுக்...' கென்ற பலத்த சத்தம்! "ஐயோ, பைத்தியம் கிணற்றுக்குள் குதித்துவிட்டது" என்று கத்திக்கொண்டு ஓடினர்கள், பள்ளிச் சிறுவர்கள், அப்புறமென்ன...!

அந்தத் தூய மனம், படைத்த கந்தன் ... பைத்தியகாரக் கந்தனுகிக் கிணற்றுக்குள் குதித்துச் செத்துப் போனுன் என்று எழுத வேண்டுமா?

## 'துறவி'யின் காதலி

வரட்சி நிறைந்த சுழல் காற்று, தனக்கு எதிர்ப்பட்ட எல்லாப் பொருள்களையுமே வாரி இறைத்து நர்த்தனமாடியது. இந்த அண்டசராசரம் அனைத்தும் அதைப் படைத்த ஆண்டவனுக்கு முன் தூள், தூள் என்பது போல! கண்ணுக்கு எட்டிய தூரம் முழுவதும் ஒரே மணல் வெளி. பொட்டல் நிலம், ஈரப் பசுமை அற்ற தோற்றம், இரக்கமில்லாதவர்களின் இதயத்தைப் போல, மழையே காணுததால் நீர்வளமற்றுக் காய்ந்து கிடக்கும் சிறுச் சிறு குளம், குட்டைகள். பார்ப்பதற்குக் கொஞ்சமும் இரசனையற்ற காட்சிகள், ஆறுமுகம் வாத்தியார் விரித்த குடையுடன் வெயிலைப் பொருட்படுத்தாது 'விறுவிறென்'று நடந்து கொண்டிருந்தார். அவர் மனதில்எத்தனையோ எண்ணங்கள்! இந்தப்பரந்த உலகிலே தாம் ஒரு தனிக்கட்டையாக வாழ வேண்டி வந்த துர்ப்பாக்கிய நிலை பற்றி, மாங்கலியத்துடன் பிள்ளை குட்டிகளுடன் வாழக்கொடுத்து வைக்காத நிலை வந்ததே என்று, காதல், காதல் என்று தவிக்கிற உலகிலே காதலிக்க

ஒருவருமில்லாத கதி நேர்ந்ததே என்ற நெஞ்சேக்கத்து டன், அவர் உள்ளத்தின் உளைச்சல் அதிகரித்துக் கொண் டிருந்தது. சுடுமணலில் அவர் நடையும் வேகமாகிக் கொண்டிருந்தது. இத்தனைக்கும் ஆறுமுகம் வாத்தி யார் என்ன முற்றும் துறந்த முனிவரோ என்ருல் இல்லவே இல்லை. அவருடைய சகாக்கள் என்ன நினைவுடன் அவரைத் 'துறவி' என்றழைக்கிருர்களோ தெரியாது. ஆனுல் ஆறுமுகம் வாத்தியாருக்கு வாழ் வைச் சுவைக்க வேண்டும். மனைவி மக்களுடன் மகிழ்ச் சியாக வாழவேண்டும் என்ற ஆவல் — ஆசை மட்டும் அதிகம் என்பது முழு உண்மை. ஆனுல் அப்படி அவரால் வாழ முடியவில்லை! வேண்டாத பட்டமாக அவர் கருதினுலும், அவரைத் 'துறவி' என்றழைப் பதிலே அவரையறிந்தவர்கள் ஏதோ மகிழ்ச்சியடை யத்தான் செய்தார்கள்! என்ன செய்வது, இதுதான் வாழ்வோ...? அவர் நடந்து கொண்டே இருந்தார்.!

பாடசாலை ஆரம்பமணி அடித்ததும் பிள்ளைகள் எல்லோரும் ஒருங்கே எழுந்து நிற்பார்கள். ஆறு முகம் வாத்தியார் 'தேவாரம்' பாடச் சொல்லிப் பள் ளியை ஆரம்பித்துவைப்பார். பின்னர் பிள்ளைகள் தத் தம் வகுப்புகளுக்குச் சென்று அமர்வார்கள். பாடங் கள் நடைபெறும். இத்தனைக்கும் அது பெரிய பாட சாலையல்ல! மொத்தம் தொண்ணூற்ருறு பிள்ளைகளும் நான்கு ஆசிரியர்களும் கொண்ட கல்விக்கூடம் அது! மழை பெய்தால் வகுப்பே நடைபெறமுடியாது. அத னுற்ருன் அந்தப் பகுதியில் மழையே பெய்வதில்லையோ என்றுகூடஆறுமுகம் வாத்தியார் சில தடவைகள் சந்தே கித்திருக்கிருர். வீசுங்காற்றினுல் அள்ளுப்பட்டு வரும் தூசியும், மணலும் பாடசாலை ஆசிரியர், மாணவர்க ளின் சுவாசக் குழல்களைத்தடவி நம் நாட்டு அரசாங்க சுகாதாரப் பகுதிக்கே பெரிய சவால் விடுத்துத்தான் செல்லும்! இந்த அழகில் ஆறுமுகம் அந்தப்பாட

சாலைத் தலைமையாசிரியராக வந்து இரண்டு வருடங்களை ஒருவாறு நகர்த்திவிட்டார். எப்பொழுது மாற்றம் வருமோ என்று அவர் மனது எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தது. ஆனால், அவர் ஆசைப்பட்டுக்கொண்டிருக்கும் அந்த 'மாற்றம்' மாத்திரம் அவரையணுக அஞ்சியது! ஆறுமுகம் வாத்தியாரும் இப்பொழுது 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பண்டைத் தமிழன் பண்பாட்டைப் பின்பற்றி மாற்றத்தைப்பற்றி அவ்வளவாகச் சிந்திப்பதில்லை. காலம் ஒரு மாதிரியாக நகர்ந்து கொண்டிருந்தது. அவர் மன உளைச்சலும் அதிகரித்துக் கொண்டுதானிருந்தது. ஆறுமுகம் வாத்தியாரைப் பற்றி அவருடைய சக ஆசிரியர்கள் அவ்வளவு சிரத்தை காட்டுவதில்லை. காரணம் ஆறுமுகம் வாத்தியார் விரும்பியோ விரும்பாமலோ 'துறவி' யாகிவிட்டார்! ஒருவரோடும் நன்கு மனம் விட்டுப் பழகுவதுமில்லை! பேசுவதுமில்லை. தானுந் தன் பாடுமாக இருந்துகொள்வார். இதைக் காரணமாகக் கொண்டு அவர் உண்மையிலேயே துறவியாகிவிட்டார்' என்பதை அவர்கள் 'நிச்சயப்படுத்தி'க் கொண்டார்கள். பாவம். மனிதர் அந்த ஓட்டைப் பாடசாலைக்கட்டிடத்தில் படுத்துக்கொண்டு சாப்பாட்டுக்கு மூன்றுவேளையும், நேரத்துக்கு மூன்றுமைல் நடந்துதீர்க்கிறாரே என்று மாத்திரம் அனுதாபப்படுவார்கள். தமக்குள் பேசிக்கொள்வார்கள். ஆனால் ஆறுமுகம் வாத்தியாரோ அதையெல்லாம் சட்டைசெய்வதில்லை. இவர்களைவிட இன்பத்தின் மடியிலே கிடந்து கும்மாளமடித்தவர் அவர். காலம் மாறிவிட்டது. 'துறவியாகிவிட்டார்! அவ்வளவுதான்!!

திறந்துகிடந்த சாளரத்தின் வழியாக வீசிய வரட்சியான காற்று அறைக்குள் கிடந்து வெதும்பிய ஆறுமுகம் வாத்தியாருக்குச் சிறிது ஆறுதலளித்தது. அவர் மனதிலே மீண்டும் 'பழைய நினைவுகள்' தலைதூக்கின.

வானில் பவனிவரும் வெண்ணிலவின் ஒளிக்கதிர்களை உற்று நோக்கிய வண்ணம் அவர் படுக்கையில் கிடந்தபடியே சிந்தனையில் மூழ்கினார். பத்து ஆண்டுகளுக்கு முன்......!

ஆறுமுகம் வாத்தியார் அப்பொழுது இருபத்தைந்து வயது இளைஞன். ஆசிரிய கலாசாலையிலிருந்து அப்போதுதான் வெளியேறினவர். இளமையின் வாசற்படியில், அழகின் எடுத்துக்காட்டாக, இன்ப மயக்கத்துடன் காட்சியளித்த ஆறுமுகம் வாத்தியாரைச் சுற்றி வட்டமிட்ட 'வண்ணாத்திப்பூச்சிகளை' எண்ணமுடியாது! அப்போது ஒரு தமிழ் ஆசிரியர் என்றால் அவ்வளவு மதிப்பு, செல்வாக்கு. அவற்றுடன் அழகும், ஆட்களை மயக்கும் பேச்சும்கூட இருந்துவிட்டால், கேட்கவா வேண்டும்?

ஆறுமுகம் வாத்தியார் 'உம்.........' என்று ஒரு நீண்ட பெருமூச்சை வெளியே தள்ளினார். மனதின் பாரத்தை வெளியே தள்ளுவதுபோல! அந்த நேரத்தில் அவர் விரும்பியிருந்தால்......... நினைத்த மட்டும் இன்பத்தை உருசி பார்த்திருக்கலாம். முடியு மட்டும் அனுபவித்தபின் 'அருணகிரிநாதராக' மாறியிருக்கலாம். ஒல்லியிடை மெல்லியலாரின் கொவ்வைக்கனியிதழ்களை, கொஞ்சும்வதனத்தை வஞ்ச நெஞ்சத்தை மலர் மெத்தையாக்கிச் சுவைத்திருக்கலாம். இன்பக் கடலாடியிருக்கலாம்! ஆனால் அவர் தவறி'விட்டார். காதல் என்ற வலையிலே சிக்கிக் கட்டுப்பட்டார். 'ஒழுக்கம் உயர்விக்கும்' என்ற நம்பிக்கையில் சந்தர்ப்பத்தை இழந்தார். இன்று இன்பமே காணாத 'துறவி' அவர். இத்தனைக்கும் காரணம்! சுவர்ணா... அவள் மாத்திரம் ஆறுமுகம் வாத்தியாரை அந்தக்காலத்தில் காதலிக்கிறவள் போலக் காட்டியிராவிட்டால் இன்று அவர்... இன்பத்தின் சிகரத்திலே எல்லாப் போகபாக்கியங்களுடனும் வாழ்வார். ஆனால் அந்தச் சுவர்ணா...! ஆறுமுகம் வாத்தியாரை வட்டமிட்ட

வண்ணாத்திப் பூச்சிகளில்' சுவர்ணாவும் ஒருத்தி. நல்ல அழகி, ஆனால்...! ஆறுமுகம் அவளைத் தம் உயிரினும் மேலாகக் காதலித்தார். அந்த எண்ணத்திலே தம்மையே மறந்தார். அருமையான பெண்களை எல்லாம் 'வேண்டாம்' என்று நிராகரித்தார். எவ்வித பித்தல் பிடுங்கல் தொல்லையுமற்ற ஆறுமுகத்திற்கு சுவர்ணாவே உலகம், வாழ்வு, உய்விக்கும் தெய்வமாகத்தோன்றினாள். நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. கலாசாலையில் மலர்ந்த அவர்கள் காதல், ஆசிரியர்களாக அவர்கள் வெளியேறியதும் அம்பலத்திற்கு வந்தது. ஆறுமுகம்—சுவர்ணா அப்பொழுதைய உரோமியோ—யூலியத்து என்றால் கூட ஆச்சரியப்படுதற்கில்லை. அந்த அளவுக்கு அவர்கள் காதல் 'சர்வவியாபி'யாகி விட்டது. ஆனால் இந்த உலகத்திலே எதுவுமே நிச்சயமில்லை என்ற தத்துவம் ஆறுமுகத்தின் வாழ்க்கையில் உண்டாகிவிட்டது. உயிருக்கும் மேலாகத் தன்னைக்காதலிக்கிறவள் என்று யாரைக் கருதினாரோ, அந்த அவள் இப்பொழுது வேறொருவனைக் காதலிக்கிறாள் என்ற செய்தி ஆறுமுகத்தை ஒரு உலுக்கு, உலுக்கிவிட்டது.

நெஞ்சம் நிறைந்த வேதனையில் கிடந்து வெதும்பினார் அவர். யாரோ தமது காதலில் பொறாமை கொண்டவர்கள் கட்டிவிட்ட கதையோ என்று கூடச் சந்தேகித்தார். அப்படியிருந்தால் எவ்வளவு நலமாகும் என்று எண்ணினார். ஆனால் தெரிந்து கொண்ட உண்மை...அந்த இரவு 'பிளாசா' தியேட்டரில் அவர் கண்ட காட்சி...ஆ...அதை நினைக்கவே அவர் நெஞ்சம் வெடித்துவிடும் போலிருந்தது. அவர் அன்புக்குரியவள் வேறொருவனின் அணைப்பில் இருந்த நிலை, மோசமான அந்த ஆங்கிலப் படத்தின் முத்தமிடும் காட்சியையே தோற்கடிப்பது போல இருந்தது. படம் முடிவதற்கு முன்பே ஆறுமுகம் 'தியேட்டரை' விட்டு வெளியேறினார். அடுத்தநாள் அவளைச் சந்தித்துப் பேசினார். ஆனால் அவள் கூறிய வார்த்தைகள்!..........

ஆறுமுகம், நான் ஒருவரை விரும்புவதும், வெறுப்பதும் என்னுடைய சொந்த விடயம். அதில் தலையிட உங்களுக்கு உரிமைகிடையாது..." "என்ன! சுவர்ணுவா அப்படிச் சொல்கிருள்? தம்மை உயிருக்குயிராகக் காதலிப்பதாகக் கூறிய சுவர்ணுவா அப்படிச் சொல்கிருள்..." ஆறுமுகத்திற்கு இதய ஓட்டமே நின்றுவிடும் போலிருந்தது. மௌனமாகத் தமது போக்கில் நடந்தார். அன்றிலிருந்து அவர் பெண்குலத்தையே — இல்லை, மனிதவர்க்கத்தையே தமது பரம சத்துருவாக எண்ணிக்கொண்டார். நெருங்கிய நண்பர்களுடன் கூட அதிகமாகப் பேசமாட்டார். தாங்கமுடியாத வேதனை— காதலில் ஏற்பட்ட ஏமாற்றம் அவரின் வாழ்வையே விரக்தி நிறைந்ததாக மாற்றிவிட்டது!

நினைவுத்தீயில் பொசுங்கிக் கொண்டிருந்த அவருக்கு அன்றைய தபாலில் வந்த இரு கடிதங்கள் ஞாபகத்திற்கு வந்தன. ஒரு கடிதம் அங்கு புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு ஆசிரியையின் வருகை பற்றியது, மற்றது அவரது பழைய நண்பர் ஒருவர், அவரது சுகநலன் விசாரித்து எழுதியது, ஆனல் அடுத்த நாள் புதிதாக வரப்போகும் ஆசிரியை'யார் என்பதுதான் அவரது மனதில் எண்ண அலைகளை அதிகம் மோதவிட்டது. ஒருவேளை சுவர்ணுவாக இருந்தால்..."சீ இப்பொழுதும் அந்தத் துரோகியின் நினைவா ...?" தம்மைத்தாமே நொந்து கொண்டார்! "இல்லை, அவள் ஏன் இந்தப் பட்டிக்காட்டிற்கு வரப் போகிருள்......? எவளாயிருந்தாற்ருன் நமக்கென்ன? ஏன் விடிந்தால் தெரியுமே!" நித்திரை மயக்கம் கண்களைச் சொருகியது, அவர் தம்மை மறந்து தூங்கிவிட்டார்!

ஆறுமுகத்தின் கண்களை அவராலேயே நம்பமுடியவில்லை. அழகி சுவர்ணுவேதான் புதிதாக வந்

திருந்த ஆசிரியை! அவள் தோற்றத்தில் 'காலத்தின் கழிவு' கோல மிட்டிருந்தாலும் பழையசுபாபமொன்றும் மாறியதாகத் தெரியவில்லை. ஆறுமுகம் எதையும் வெளிக்காட்டிக்கொள்ளாதவராகத் தமது அலுவல்களைப் பார்த்துக்கொண்டிருந்தார். பாடசாலை விடும் நேரமாய்விட்டதை அறிவிக்கும் மணி ஒலித்தது. ஆசிரியர்களும், மாணவர்களும் தொடர்ந்து வெளியேறிக் கொண்டிருந்தனர். ஆனால் 'அவள்' நின்று கொண்டிருந்தாள்! அவளுடன் பேசுவதா...விடுவதா...? ஏதோ கடமைக்கு இரண்டொரு வார்த்தைகள்..."எங்கே தங்குவதாக முடிவு...?" முகத்தை வேறு திசையில் திருப்பிக்கொண்டு மெதுவாக முணு முணுத்தார் ஆறுமுகம். "நான் நேற்றே ஒரு வீடு கிராமத்தில் வாடகைக்குப் பார்த்திருக்கிறேன்." மெல்லிய புன்னகை, அரும்ப அவள் பதில் கூறினள். "நல்லது அவரும் உங்களுடன் தானே...கொஞ்சம் கட்டமான சீவியந் தானிங்கே...! என்றாலும் கடமையைச் செய்யத்தானே வேண்டும்..." என்ன பேசுவதென்றே தெரியாமல் ஆறுமுகம் பேசினர். பத்து வருட இடைவெளிக்குப்பின் மனம் விரும்பாத ஒருவருடன் பேசும் பேச்சு அது! ஆனல் அவளோ "கடமை... அதெல்லாம் முடிந்து விட்டது! நான் அவரை விவாகரத்துச் செய்து விட்டேன். வாழ்க்கை - அது என்ன என்றே தெரியாத மனிதர்களுடன் வாழ்வதைக் காட்டிலும்..." ஆறுமுகத்திற்கு அவளுடைய பேச்சொன்றும் தெரியவில்லை. தெரியாத நிலையில் அவர் நின்றூர்!

"நீங்கள்...?" அவள் கேட்டாள்!

"நான் நானகத் தானிருக்கிறேன்..." சட்டென்று பதில்சொன்னர் ஆறுமுகம்.

"அப்படியானல்...?"

"அப்படியானல்...!"

"நீங்கள் விரும்பினுல்"

அவள் அதற்கு மேல் பேசத் தயங்கினுள். ஆனுல் அவர் அவள் என்ன சொல்ல விரும்பினுள் என்பதைத் தெரிந்து கொண்டார். "நான் இப்பொழுது ஒரு துறவி!" அவர் வார்த்தைகளில் இது நாள் வரை இல்லாத வைராக்கியம்—உறுதி பளிச்சிட்டது, குடையை எடுத்துக்கொண்டு திரும்பியும் பாராமல் வேகமாக நடந்தார் ஆறுமுகம் வாத்தியார்!

பாவம், அந்த விசித்திரமான 'துறவியின் காதலி, என்ன செய்வாள்...? "சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தெரியாத மனிதர். அன்றும் சந்தர்ப்பம் வாய்த்தது, இன்றும் வாய்த்தது. ஆனுல் அந்த மனிதர் இரு தடவைகளிலும் தாமே பைத்தியக்காரத்தனமாக நடந்து கொள்கிருர், என்ன இருந்தாலும் அவர் அவர் தான். நான் நான் தான்!!! தனதுமனதைச் சமாதானப் படுத்திக் கொண்டு வெளியுலகை நோக்கி நடந்தாள். அவள் கண்ணுக்கெட்டும் வெகு தொலைவில் ஆறுமுகம் வாத்தியார் விரித்த குடையுடன் வேகமாக நடந்து கொண்டிருந்தார்!

# உழைப்பு

**வ**ண்டியைத் தள்ளிக்கொண்டு வந்து வளவுக்குள் நிறுத்திய நல்லான் மெல்ல நிமிர்ந்துபார்த்தான். அவன் குடிசை இருளில் அமிழ்ந்திக் கிடந்தது. தெரு விளக்கின் பிரகாசமான ஒளி, அடர்ந்து வளர்ந்திருந்த வடலிப்பனைகளுக்கூடாக அந்தப் பிராந்தியமெங்கும் மின்னற்கீறுகளாக மினுமினுத்தது. நேரம் எட்டோ, ஒன்பதோ என்று அவனால் மட்டுப்பிடிக்க முடியவில்லை. சகதொழிலாளிகள் தொகை அதிகமில்லாத திட்டுப்பூமி அது. நகரசுத்தித் தொழிலாளிகள் வதிவதற்கென்றே ஒதுக்கப்பட்ட அந்தப் பகுதியில் அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சரியாக ஆறு குடிசைகள் காட்சியளித்தன. அவற்றில் நல்லானுடையதும் ஒன்று. குடிசைக்குள் நுழைய நல்லானுக்கு மனம் வரவில்லை. அன்று முழுவதும் அவன் ஒரே பட்டினி. பசியின் கோரம் அணு, அணுவாக அவனை வாட்டிக் கொண்டிருந்தது. பகல் முழுவதும் கொளுத்தும் வெயி

லில் வண்டியில் இருந்து கிளம்பும் துர்நாற்றத்திற்கும் தாக்குப்பிடித்துக்கொண்டு தார்மெழுகிய வீதியின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை வலம்வந்த களைப்பு அவனை இப்பொழுது முற்ருகக் கௌவிக்கொண்டது. இவ்வளவு அசதிக்கும் மருந்து எங்கே என்பது அவனுக்குத் தெரியும். ஆனல், நேரம் என்னவோ எக்கச்சக்கமாகிவிட்டதுபோல அவனுக்குத் தோன்றியது. என்ருலும் மனதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. மத்தியானம் வாங்கிவைத்த மசாலைவடைகள் இரண்டும் கட்டைக்களிசான் பைக்குள் கிடந்து கனத்தன. இடுப்பில் சுற்றியிருந்த கிழிந்த துவாயை அவிழ்த்துத் தலையில் சுற்றியபடி நல்லான் இருள் மண்டிக்கிடந்த ஒழுங்கையைத் தாண்டிப் பிரதான வீதியில் மிதந்து வேகமாக நடந்துகொண்டிருந்தான்.

யாழ்ப்பாணப் பட்டினத்திலிருந்து ஏறக்குறைய ஏழு மைல் தொலைவிலுள்ளது அவன் தொழில் செய்யுமிடம். அதனைக் கிராமமென்ருே, பட்டினமென்ருே கூறிவிட முடியாது. இரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு நிலையில் அது கம்பீரமாக மிளிருகிறது. யாழ்ப்பாணத்திற்கே மதிப்பளிக்கும் இரு பெரிய பெண்கள் பாடசாலைகளும், வேதக்கோவிலும், ஒரு மைல் தூரத்தில் பிரபலமான சந்தையும், அதற்கு எதிர்ப்புறமாக சில நூறு யார்கள் தொலைவில் பிரசவ மருத்துவமனையும் படமாளிகையுமாகப் பட்டின நாகரிகத்தை எட்டிப் பிடித்துக்கொண்டிருக்கிறது. என்ருலும் கிராமச்சங்கப் பிரதேசம் என்ற முத்திரை மட்டும் அந்தப் பகுதியை விட்டகலமறுக்கிறது. ஏஞே? நல்லான் பிரதான வீதியை விட்டிறங்கிச் செம்மண் செறிந்த குறுக் கொழுங்கையில் நடந்துகொண்டிருக்கிருன். தூரத்தில் 'அரிக்கன் இலாந்தர் மினுமினுக்கிறது. இரண்டெட்டு எட்டிவைத்தால் கள்ளுக்கொட்டில், மனதின் நினைவூறல்கள் தம்பித்து நாவூற ஆரம்பிக்கிறது அவனுக்கு!

கள்ளுக்கொட்டிலில் நிசப்தம் கொடிகட்டிப் பறக்கிறது. 'என்ன இன்றைக்கு இவ்வளவு நேரமானது?' நிசப்தத்தை விரட்டிக்கொண்டு ஒலிக்கும் வினுவுக்குரியவன் கள்ளுக்கொட்டிற்காரன்; கறுத்தான்!

"என்னண்ணே செய்வது? நேரத்துக்கு வரவேண்டுமென்றுதான் நானும் 'முக்கிமுக்கி' இழுத்தேன். இப்போதுதான் முடிந்தது!"

"நேரத்துக்குப் பிந்திஞல் வைத்துக்கொண்டிருக்க ஏலாது. இன்றைக்கென்னவோ உனது அதிட்டம் கொஞ்சம் கிடக்கிறது." கறுத்தான் கொட்டில் மூலையில் இருந்த முட்டியை எடுத்துக் கொண்டுவர நல்லானும் ஒதுக்குப்புற ஓரத்தில் செருகியிருந்த பிளாவை எடுத்துக் கொண்டுவந்து நீட்டினுன். 'சளசள' வென்ற சப்தத்துடன் சற்று அதிகமாகப் புளித்துவிட்ட கள்ளு, பிளாவில் விழுந்து நுரைத்தது.

மத்தியானம் வாங்கிப் பத்திரப்படுத்தி வைத்த மசாலே வடைகளைக் கடித்துக்கொண்டே கள் குடிக்க ஆரம்பித்தான் நல்லான். அந்தக் கள்ளும் வடையும் தேவாமிர்தமாகச் சுவைத்தன.

"இன்னுங் கொஞ்சம் ஊற்றண்ணே!" குரலில் போதை தொனித்தது!

"மூன்று போத்தல் குடித்துவிட்டாய். இனிப் போதும் நல்லான். இங்கேயும் மண்டிதான் கிடக்கிறது. நீயும் தாங்கமாட்டாய். நாளைக்கு வா பார்ப்போம்!"

கறுத்தான் குரலில் அனுதாபம் இழையோடியது. "அந்தப் புளித்த கள்ளில் அரைப் போத்தல் விட்டாற்

போதும், இந்தக்காலத்து வாலிபர்கள் பிடித்துப் போட்ட இருலேப்போலச் சுருளத் தொடங்கிவிடுவார் கள். ஆனல், நகரசுத்தித் தொழிலாளியான நல்லான் மூன்று முழுப்போத்தல் விட்டும் உசும்பாமலிருக்கிறன். ஆளைப்பார்த்தால் காற்றுக்குப் பறந்துவிடுவான் போலி ருக்கிறது! என்ன தைரியம்?" அவன் தனக்குள் வியந்துகொண்டான். என்றாலும் மனதுக்குள் ஒரு பயம்! கொஞ்சம் அதிகமானலும் பாவம், எங்கே விழுந்தெழும்பி மண்டையை உடைத்துக்கொள்கிறனே, என்ற இரக்க உணர்ச்சி கறுத்தானைப் பேசவைத்தது! அவனும் இடக்குப் பண்ணவில்லை.

"சரி, நான் நாளைக்கு வருகிறேனண்ணை!" தள்ளா டியபடியே எழுந்து நடந்தான் நல்லான். அவனிருந்த இடத்தில் கிடந்த 'சில்லறையை' எடுத்துக்கொண்டு இலாந்தரையும் தூக்கிக்கொண்டு கொட்டிலுக்குள் போய்ப் படுத்துக்கொண்டான் கறுத்தான். அவன் ஒண்டிக்கட்டை. சகலமும் அவனுக்கு அந்தக் கள்ளுக் கொட்டிலே!

கோடை வெயிலின் அனல் அளைந்த காற்று மெல்ல வீசுகிறது. நல்லானுக்கு நிதானம் வழுக்கப்பார்க்கிறது. அந்தரத்தில் நடப்பவனைப்போல, கால்கள் நிலத்திற் பாவமறுக்கின்றனவா? எப்படியோ அடி சறுக்காமல் வரத்தான் அவனும் முயற்சிக்கிறன். அந்த இருள் ஒழுங்கையில் பிரதான வீதியை விட்டிறங்கிச் சொறி நாய்களின் கோரக் குரைப்புக்களுக்கு மசியாமல் நடந்துவந்து, சற்று மேற்குப் பக்கமாகத் திரும்பித் தனது குடிசையடிக்கு வந்துவிட்டான் நல்லான். நேரம் சாமமோ, என்னவோ அதையார் கண்டது? இருளில் அவன் குடிசை கோரமான அந்தகாரத்தில் குடியிருக் கும் சடாமுனியைப்போலக் குந்தி இருக்கிறது. அவன் அவளை எழுப்ப முயற்சிக்கிறன்!

"சின்னி, சின்னி...........!"

''கொஞ்சம் பொறுங்கள். விளக்கைக் கொளுத்தி விட்டு வருகிறேன்."

குப்பிவிளக்கைக் கொளுத்தி வைத்துவிட்டுத் தட்டிப்படலையை அவிழ்த்துக்கொண்டு வெளியே வந்தாள் சின்னி. ''இவ்வளவு நேரமாக எங்கே போய்த் திரிந்து விட்டு வருகிறாய்? எவ்வளவு நேரமென்று நானும் கண்ணை விழித்துக்கொண்டு இருக்கிறது!" அவள் அவன் கையைப்பற்றி உள்ளே கூட்டிக்கொண்டு போனாள்!

சட்டி நிரம்பிய சாதத்தையும், சுன்னாகச் சந்தையில் வாங்கிய பிஞ்சு மிளகாயையும் சேர்த்துச் சுவைக்கத் தொடங்கினான் நல்லான். அவள் அவன் சாப்பிடுகிற நேர்த்தியை இமை வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவளுக்கு வாளிப்பான உடல். எண்ணெயில் முழுகிய கருங்கல்லுப் போன்ற 'மளமளப்'பும் உறுதியும் அதில் திரண்டிருந்தன. இரண்டு வருடங்களுக்கு முன்புதான் நல்லான் அவளைக் கைப்பிடித்தான். கிராமச் சங்கப் பரிபாலனத்தில் வேலைக்குச் சேரமுன்பே நல்லானுக்கு அவளில் ஒரு கண். வேலையில் சிரத்தையின்றி ஊர்சுற்றித் திரிந்த அவனைப் பொறுப்புள்ளவனாக்கியது அவள் காதல்! முன்பெல்லாம் நல்லான் வேலைக்கு ஒழுங்காகப் போவதேயில்லை. ஊர்சுற்றிய நேரம் போக, விருப்பமான சமயத்தில் தனது நண்பர்களின் தொழிலுக்கு உதவுவான். அவர்கள் தருகிற தயவில் காலத்தைப் போக்குவான். ஆனால், சின்னியின் காதலுக்கு ஆளான பின்பு சுயமாகச் சம்பாதிப்பதன் அவசியத்தை உணர்ந்து கொண்டான். கிராமச் சங்கப் பரிபாலனத்திற்குட்பட்ட நகரசுத்தித் தொழிலா

ளர் குழுவில் இடம் பிடித்துக்கொண்டான். நல்லா னுக்குச் சின்னியைத் தவிர வேறு ஆளில்லை உறவு கொண்டாடுவதற்கு. உறவினர் என்ற சொல்லுக்கும் அவனுக்கும் வெகுதூரம்! சின்னியின் தகப்பன் கிழ வனுக்கு மகள்மீது மிகவும் ஆத்திரம். உற்றார், உறவி னர் ஆருமில்லாத நல்லானைக் கலியாணம் பண்ணிக் கொண்டாளே என்ற துக்கம். ஆனால், சின்னிக்கு நல்லான் மீது உயிர். கொஞ்சம் அவன் முகம் கறுத் தால் அவள் உயிர் அணுக்கள் எல்லாம் கறுக்கும்! எண்ணக் குதிர்களை ஒதுக்கிவிட்டு, 'சாப்பிட்ட வாயை அலம்பி'விட்டுப் படுக்கையிற் சாய்ந்தான் நல்லான். அவனருகில் அவள், குப்பிவிளக்கைக் கையாலணைத்து விட்டு அணைந்தாள். நேரம் போய்க்கொண்டேயிருந் தது. அவள் அவனிடம் இன்னும் நெருங்கிப் படுத் தாள். பெண்மை, ஆண்மையின் இணைவுக்குத் தன் னைத் தயாராக்கிக்கொண்டது. அவன் கரங்கள் அவள் உடலைப் பற்றி இறுக்கமாக அழுத்திப் பின்னிக் கொள்ளச் செய்தன. அங்கே மூடிக்கிடந்த விழிகள் நான்கு. இன்பம் அணு, அணுவாக அவர்கள் உடல்க ளெங்கும்மூட்டமிட்டுக் 'கத,கதத்து மோகக்கோட்ட மமைத்து வெற்றி கொண்டாடியது.

சிருட்டியின் இரகசியம் அவர்களுக்கு விளங்கி யதோ, என்னவோ! ஆனால், அது அவர்களுக்கு எட் டாததாகவில்லை. பகலிற்றான் இன்பம், ஒளியிற்றான் இன்பம் என்று யார் சொன்னது? இருளுக்குள் இன் பம், மன இருளுக்குள் இன்பம் என்பதை அவர்கள் அனுபவித்தே விட்டார்கள்!

சாமக்கோழி உரத்த குரலெடுத்துக் கூவியது. அவர் கள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர். நெகிழ்ந்த ஆடைகள், தளர்ந்த உடல்கள், வாழ்வு என்பதே இதுதானா?

ஏழைகளுக்குப் பகல் துன்பமா? இரவு இன்பமா? பதில் தருவார் யார்? ஒளிபிறக்கும் உதயகாலத்தைக் காண அவர்கள் ஏன் அஞ்சுகின்றனர்?

காலம் ஏன் அவர்களைக் கவனிக்கப்போகிறது! நீண்ட இரவு தன் கடையாமத்தைச் சுருக்கிக்கொண்டது. வைகறைப்பொழுது தலைகாட்டத் தொடங்கியது. பறவைகள் விழித்துக்கொண்டன. எல்லாச் சீவராசிகளும் விழித்துக்கொண்டன. மெல்ல மெல்ல விடிந்துகொண்டிருக்கிறது. சின்னி கண்விழித்தாள்!

விடிந்தால் தீபாவளி. அவள் மனதில் எத்தனையோ எண்ணங்கள்! கலியாணத்தின் பின்னர் ஏற்பட்ட பணமுடைக்குப் பலியாகாமல் அந்த இரண்டு சீவன்களும் கஞ்சி குடிப்பதற்காக நல்லான் அவளது ஒரே பொக்கிஷமான கழுத்துச் சங்கிலியை யாழ்ப்பாணத்துப் பெரியண்ணன் செட்டியார் கடையில் அடகு வைத்திருந்தான். போன தீபாவளியின்போதே சின்னிக்கு மனது 'குறுகுறு'த்தாலும் வாயைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள். 'எப்படியும் மச்சான் அதை மீட்டுத் தருவான்' என்ற நம்பிக்கை அவளுக்கு! "அடகு வைத்ததைத்தான் மீட்கவில்லை, வட்டிக்காசையாவது கொடுத்திருக்கிறேன். எப்படியும் அடுத்த தீபாவளிக்குச் சங்கிலியை மீட்டுத்தருவேன்" என்று நல்லான் வேறு தைரியஞ்சொல்லியிருந்தான் "அதுதான் இராத்திரியும் மச்சான் நேரஞ்செல்ல வந்தவர். பட்டினம் போய் வந்தவராக்கும்" எதற்கும் எழுந்தவுடனே கேட்டுக்கொள்ளலாம்!"

தனக்குத் தானே நம்பிக்கையூட்டிக்கொண்டாள் சின்னி. காலைச்சூரியனின் ஒளிக்கதிர்கள் கிடுகுத்தட்டியின் நீக்கல்களுக்கூடாக அந்தக் குடிசை முழுவதும் வியாபித்துக்கொண்டிருந்தன. சின்னி எழுந்து

அடுப்பை மூட்டித் தேநீர் தயாரித்தாள். நல்லான் இன்னும் எழுந்திருக்கவில்லை.

"மச்சான், மச்சான்......!"

அவள் குரலில் வார்த்தைகளில் அடங்கித் தீராத பாசமும் பரிவும் குழைந்துநின்றன.

"நேரம் மத்தியானமாகப்போகிறது. நல்ல நாளி லேயா இப்படிக் கிடந்து புரள்வது......?

நல்லான் எழவேயில்லை. தேநீர்ச் சிரட்டையுடன் படுக்கையடிக்கு வந்தாள். மண்டியிட்டு அவன் பக் கத்திலமர்ந்தாள். ஒரு கையில் தேநீர்ச்சிரட்டையை வைத்துக்கொண்டு, மறுகையால் அவன் தோள்மூட் டைப் பற்றி உசுப்பினுள். அவன் அசையவேயில்லை. சற்றுப் பலமாக ஆட்டி அசைத்துப் பார்த்தாள். அவள் நெஞ்சு வெடித்துவிடுவது போல அடித்துக்கொண் டது.

'மச்சான்...........!' அவள் அலறினுள்.

'பீளை' தள்ளிய கண்களும், 'ஓ' வெனத் திறந்த வாயுமாக உணர்வற்று ஒருபக்கமாக 'ஒருக்களித்து'க் கிடந்த அந்த உருவத்தைக் கட்டித் தழுவிக்கொண்டு, கதறினுள்.

அவளால் நம்பவே முடியவில்லை. அதற்குள்ளா கவா இந்தக் கோரமான சாவு, சித்திக்க வேண்டும்!

செத்துக்கிடந்த நல்லான் தலையைத் தூக்கி, நிமிர்த்தி, நெஞ்சோடு நெஞ்சாக அணைக்கப் போன வள், அவன் தலைமாட்டில் கண்டுகொண்டாள், அவன் சாவின் இரகசியத்தை! மூப்பது பத்துரூபாய் நோட்

டுக்கள்! நகரசுத்தித் தொழில் செய்கிற நல்லானுக்குச் சுளையாக முந்நூறுரூபா எப்படிக் கிடைத்திருக்கும்? திருடவோ, கொள்ளையடிக்கவோ, அவன் அதிமூளை சாலியல்லவே!

இரண்டு வருடங்கள் அவன் உயிரின் உயிராய் விளங்கிய அவளுக்கா தெரியாது; அவனியல்புகள்?

“ஐயோ, மச்சான்.........! இந்தப்பாவியின் சங் கிலியை மீட்கப் பட்டினி கிடந்து உயிரை எமனிடம் அடகு வைத்தாயே......! என் இராசாவே ........... எத்தனை நாளிதற்காய்ப் பசி கிடந்தாயோ.........!”

உலகத்துத் துயரமெல்லாம் ஒட்டுமொத்தமாகப் பிரதிபலித்து நின்றது அவள் ஒப்பாரியில், ஒப்பா ரியா அது? உடம்பின் ஒவ்வோரணுவும் நைந்து பெருக்கும் உதிரக்கண்ணீரன்றோ அது!

பாவம்! உழைத்து, உழைத்து, இளைத்தும் உரிய ஊதியமின்றி உழலும் அந்த மனிதப் பிராணிகளுக்கு இம்முறை ‘தீபாவளி’ கொண்டாடவும் முடியவில்லை.

அந்த ஆறு குடிசைகளும் ஒரு குடிசையாகி அந்தத் தீபாவளித் திருநாளில் அழுதுவடிந்துகொண்டிருந்தன; நல்லான் என்ற அந்த நல்லமனிதனின் சாவுக்காக!

## சலனம்

புவனுவுக்குக் கண்ணேடு கண் மூடவில்லே. இரவு ஒரு மணியாகியும்நித்திரை அவளே யணுகியபாடில்லே. இப்படி எத்தனே இரவுகள்........,கண்ணேடு கண் மூடாமற் பருவ நினேப்பால், உலகில் தன்னேப் போன்ற இளம் பெண்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் இன்ப வாழ்வைப்பற்றி எண்ணி யெண்ணி மனதைப் புண்ணுக்கிக் கொண்டாள்!

ஒரு காலத்தில் பிரபல எழுத்தாளர் - பேச்சாளர் நடராசனேக் கணவனுகக் கைப்பிடிக்கப் போகிறுேமேயென்ற குதூகலத்தில் மிதந்துகொண்டிருந்த புவனுவா இப்பொழுது வாழ்க்கையும் வேண்டாம், ஒரு வடிவும் வேண்டாம் என்று விரக்திக் குரலில், வேண்டா வெறுப்பாகப் பேசுகிறவள்? என்ன ஆச்சரியம்! காலதேவன் ஓட்டப்பந்தயத்தில் எத்தனே விதமான இன்ப, துன்ப மைல் கற்களேத் தாண்டிக் கொண்டு ஓடுகிறுன்!!

நடராசனுக்கும் புவனுவுக்கும் திருமணம் நிகழ்ந்தபோது புவனுவுக்கு வயது இருபது. தன்னிலும் அழகனுன நடராசனை - அதுவும் ஒரு சிறந்த எழுத்தாளனைக் கணவனுகவரித்துக்கொண்டதிலே புவனுவுக்குச் சொல்ல முடியாதபெருமை. ஆனுல்...... இன்று அந்தப் பெருமை யெல்லாம் வெறும் கானல் நீர்போல் வியர்த்தமாவதை என்னும்போது அவள் பெண்ணுள்ளம் சலன மடையத்தான் செய்தது!

இத்தனைக்கும் நடராசன் கூடாத குணமுள்ளவனல்லன். நல்ல சுபாபம் உள்ளவன். ஆனுல் அவன் இதயத்தில், பெண்ணுள்ளத்தின் தவிப்பைப் புரிந்து கொள்ளக் கூடியசக்தியில்லவேயில்லை. அவன் வாழ்ந்த சூழ்நிலையும், அவனை இயந்திர மனிதனுக வாழவே உதவிசெய்தது. ஆசை மனைவி - அழகும், இளமையும் ததும்ப அவன் அணைப்பை - அன்பான வார்த்தைகளை எதிர்பார்த்து ஏங்கிக்கொண்டுகிடக்கிருளே என்று எண்ணித் தன் மனைவியுடன் இரண்டொரு அன்பான வார்த்தைகள்தானும் பேசுவதற்கு அவன் அறிவில் - அவன் வாழ்ந்த சூழ்நிலையில் இடமிருக்கவேயில்லை, இந்த நிலைமையில் புவனுவின் மனம் சலன மடைய ஆரம்பித்ததில்யாரும் தவறு சொல்லுதல் முடியவே முடியாது. இரவு பகல் இருபத்திநாலுமணித்தியாலமும் பேனுவும் கையுமாக உட்கார்ந்து பொழுதைப் போக்கிக்கொண்டிருக்கும் ஒருவனுக்கு மனைவியாவதில் எந்தப் பெண் தான் இன்பமடைவாள்?

ஒரு பிரபல தினசரிப் பத்திரிகைக்கு நடராசன் விசேட நிருபர். அத்துடன் அவன் கதைகள், கட்டுரைகளுக்காக எத்தனையோ பத்திரிகைக் காரியாலயங்களிலிருந்து கடிதங்கள் வந்து குவிந்துகொண்டிருக்கும். அத்தனைக்கும் கதைகளும், கட்டுரைகளும் எழுத வேண்டியது அவன் கடமை. எழுதிப் பிழைப்

பவன் அல்லவா அவன்? சும்மா இருந்துவிட்டால் வாழ்க்கை வண்டி நகரமாட்டாதே!

அடிமேலடி வைத்துப் புவனு நடராசன் பேனுவும் கையுமாக உட்கார்ந்திருக்குமிடம் வந்து சேர்ந்தாள். அவள் நெஞ்சு 'பட்பட்'டென்று அடித்துக்கொண்டது. காலடியோசை கேட்டு நடராசன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். சுண்ணும்புக்கரண்டகம் போன்ற பத்தொன்பதாம் நூற்ருண்டுக் கடிகாரம் அவன் கையை அலங்கரித்திருந்தது. மணி ஒன்றரை என்பதை ஒலித்துக்கொண்டிருந்தது. வெறுப்புப் போர்வை முகத்தில் திரையிட நடராசன் "என்ன வேண்டும் புவனு" என்று கேட்டான்.

"ஒன்றும் வேண்டியதில்லே. இப்படியிருந்து உடம்பை அலட்டிக்கொள்கிறீர்களே."

"புவனு ஒரு முறை சொல்லிவிட்டேன்! பேசாமல் நீ உன் வேலேயைப் பார்த்துக்கொள். என்னேக் கஷ்டப்படுத்தாதே, போ—போய்ப் பேசாமல் தூங்கு!"

அதற்கு மேலும் அங்கு நின்று நடராசனின் கோபத்திற்குத் தூபம் போடப் புவனு தயாராயில்லே. பெண்மையின் சக்தியை விட்டுக்கொடுத்து வாய் திறந்து கேட்கவும் அவள் நாணிஞள். அவள் ஒரு தமிழ்ப் பெண்ணல்லவா? பொங்கிவரும் கண்ணீரைப் புடைவைத் தலேப்பிற்குள் புதைத்துவிட்டுப் போய்ப் படுத்துக் கொண்டாள். ஆஞல் நித்திரைதான் வந்தபாடில்லே. அவள் உள்ளத்தில் எண்ண அலேகள் ஒன்றன் மேலொன்ருக வந்து மோதின. கமலநாதனேப்பற்றிச் சிந்தனே செய்யக்கூடிய சந்தர்ப்பம் இப்பொழுதுதான் அவளுக்குக் கிடைத்தது. கமலநாதன் நடராசனின் அத்தியந்த நண்பன். அந்த மட்டில்தான் கமலநாதனேப்பற்றி புவனுவுக்கு அறிமுகம். ஆஞல்......!

அவன் பேச்சும், பார்வையும் புவனுவுக்கு வேதனை யளித்தன. நடராசனைப் பார்ப்பதென்ற சாட்டில் வீட்டிற்கு வரும்போதெல்லாம் அவன் தன்னைப் பார்த்துப் பல்லையிளிப்பதும் சைகை செய்வதும்... சீ, பண்பாடில்லாத மனிதன் அவன்!

புவனுவின் மனம் கொந்தளித்தது. என்னதானிருந்தாலும் இவர் போக்கு ஒன்றுக்குமே உதவாது. அழகான மனைவி வீட்டிலிருக்கிருள். — அதுவும் தனது அன்பணைப்பை எதிர்நோக்கியிருக்கிருளென்று தெரிந்துமா இவருக்கு இவ்வளவு அசட்டை! கர்வம் பிடித்த மனிதர்தான். கமலநாதன் இவரிலும்பார்க்க இந்த விடயத்தில் எவ்வளவோ திறம்போல இருக்கிறதே. கட்டைப் பிரமசசாரியாக இருக்கும்போதே இவ்வளவு ஆட்டம் போடுகிறவன், ஒருத்தியைக் கைப்பிடித்துவிட்டால்...... சதா அவளைச் சுற்றிக்கொண்டிருக்க மாட்டானு? நான் மட்டும் இவரைச் சுற்றிக்கொண்டிருக்க இவர் ஏனே......?

சிந்தனை ஓட்டத்தின் வேகத்தைச் சிறிது நிறுத்திளுள் புவனு. என்னென்னவோ எண்ணங்களிஞல் அவள் மனம் குழம்பிக்கிடந்ததால் முகம் விகாரமாகக் காட்சியளித்தது. ஆனுல், கமலநாதன் மட்டும் புவனுவின் உள்ளத்தில் வேண்டியோ வேண்டாமலோ, ஒரு சிறு பகுதியைக் கைப்பற்றிவிட்டான். இனிமேல்......?

அன்று நடந்த சம்பவம் புவனுவை மயிர்க்கூச்செறியச் செய்துவிட்டது. தன்சலன உள்ளம் எத்தகைய துரோகச் செயலுக்குத் தன்னை ஆளாக்கப் பார்த்தது என்பதை எண்ணி, அவள் மனம் பொருமினுள்.

கணவனின் நண்பன் என்பதற்காகக் கொஞ்சம் மனம்விட்டுப் பழகினுல் இப்படியா தப்பர்த்தம் புரிந்து

கொள்ளவேண்டும்? இத்தகைய நவநாகரிக வாலிபர்களி னுலேதான் இன்றைய பெண்ணுலகம் களங்கமடைகி றது.

சிறிது சிரித்துப் பேசிய உடனேயே "கற்கண்டே, என் தேனே, காதல் இரசமே" என்று வருணித்துப்பெண் களின் கற்பைச் சூறையாட முயற்சிக்கும் காமுகர்களை என்னவென்று கூறுவது?

புவனுவின் உள்ளம் நாகபாம்பைப்போலச் சீறி யது!

நடராசன் அப்பொழுது வீட்டிலில்லை. எங்கோ எந் தப் பிரமுகரையோ பேட்டி காணப் போயிருந்தான். வழக்கம்போல நடராசன் வீட்டிற்கு வந்த கமலநாதனைப் புவனு வரவேற்ருள். சேமலாபங்களை விசாரித்து வழக் கத்தைவிட கொஞ்சம் குதூகலமாகவே சிரித்துக் கதைத்தாள்.

பருவ நினைப்பால் துடிக்கிறவர்களுக்கு பிறருடன் கதைப்பதுகூட ஆற்றுப்படையாக அமைகிறது போலும்!

கமலநாதனுக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. நாலு வார்த்தைகூட வழக்கமாகப் பேசாத புவனு மணித் கணக்கில் தன்னுடன் பேசுவதென்ருல்.........!

அவனுள்ளம் ஆனந்த நர்த்தனத்தில் திளைத்தது. தான் என்ன செய்கிருேம் என்பதையே மறந்து புவனு வைத் தன்னிருகைகளாலும் வாரி அணைக்கப் போனுன். அவன் முன்னம் இந்த உலகமே சுழன்று கொண்டிருந்தது. கால்கள் நிலத்தில் பாவவில்லை மின் னல் மின்னியது. ஆகாயத்தில் எங்கோ பறப்பது

போன்ற உணர்ச்சியை அவன் அனுபவித்துக்கொண் டிருந்தான்!,,

"படா"ரென்ற சப்தத்துடன் கன்னத்தில் விழுந்த அடியினால் கமலநாதன் நீட்டிய கைகளையெடுத்துக் கன்னத்தைத் தடவிக்கொண்டான். அவன் முன்னம் இந்த உலகம் மீண்டும் அசுர வேகத்தில் சுழன்றது!

"என்னை யாரென்றடா நினைத்தாய், அயோக்கிய நாயே!"

புவனா கண்ணகி போலக் கர்ச்சித்தாள். வாயில் விழுவதற்குத் தேன் சொட்டுத் தயாராகத் தேங்கிநிற்கும் போது வேப்பங்காயை வலியவெடுத்து வாயிற் போட்டு மென்றுகொண்டவன் போலக் கமலநாதன் மூச்சும் விடாமல் வேகமாக வெளியேறினான்! தவறுக் கேற்ற தண்டனையை அடைபவர்கள் என்னதான் பேச முடியும்?

நடராசனைக் கண்டதும் புவனா அவன் கால்களைக் கட்டிக்கொண்டழுதாள். தனது சலன உள்ளம் எத்த கைய தப்பிதத்தைப் புரியத் துணிந்திருந்தது என் பதை நினைக்கும் போது அவளிதயம் வெடித்துவிடும் போலவிருந்தது.

விடயம் புரியாத நடராசன் "வெல வெல" த்துப் போய் நின்றான்.

அழுகையின் மத்தியில் தான் புரியவிருந்த தப்பி தத்தை நடராசனிடம் கூறினாள் புவனா.

நடராசனுக்கு அறிவு துளிர்விட்டது.

பிறகு..................!

புவனா என்றுமே நடராசன்மேற் குறைப்படா வண்ணம் அவன் கவனித்துக் கொண்டான்!

## விழிப்பு

நள்ளிரவின் மரண அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒலித்த அந்த வார்த்தைகள் திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளின் செவிப்பறைகளைத் தாக்கி மடிந் தன. மாதொருபாகன் விழிப்பு நிலையடைந்தான். கருப்பக் கிருகத்தின் இருள் மண்டிய மூலையில் ஒளிக் கதிர் உமிழப் போராடிக் கொண்டிருக்கும் திரு விளக் கின் தேய்ந்த பிரகாசத்தில் ஆதிதேவன் சோம்பல் முறித்துக் கொண்டான். உமை அவன் பரந்த மார் பில் இன்னும் அறிதுயில்கொள்ளுகின்ருள். யுகயுகாந் தரமான காலப் பெருவெளியில் கோடானு கோடியில் ஒரு கணம், அந்த மனிதப் புழுக்களைப் பற்றிச் சுடலை யாண்டி எண்ணுகிருளு? "நிச்சயமாக மன்னிப்பார்!" அந்த வார்த்தைகள் அமராவின் தொண்டைக் குழிக் குள் நின்று சுழன்றன.

விடிய ஆறு மணிக்குக் கோயிலில் முகூர்த்தம்! அந்த நினைவுச் சுழலில் என்னென்னவோ கனவுகள் கண்டு கொண்டிருந்த மனிதப் பிறவிகள், தூங்காமல், தூங்கிக்கொண்டிருந்த அந்த இல்லம் இப்பொழுது

விழித்துக்கொண்டது. ஒரே ஆரவாரம், வைகறைப் போதின் நிசப்தம் கரைந்தது. மேளமும், நாதசுரமும் ஒலித்தன. ஆட்கள் அங்குமிங்குமாகப் போய்க்கொண் டிருந்தனர். ஊர்வலத்திற்கான எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தியாகி விட்டன. முகூர்த்தவேளை கிட்டிவிட்டது. சுகந்த நறுமணம் எங்கும் பரவியது. பன்னீரும், சந்தனமும், குங்குமமும் கலவையிட்டன. பட்டாடை கள் 'சரசர'த்தன! குதூகல உரையாடல்கள் கிளம்பின. ஊர்வலம் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது, கோவிலை நோக்கி!

மணிகள் ஒலிக்கின்றன. குருக்கள் வேத மந்திரங் களை முணுமுணுக்கிருர். அகிலும், நெய்யும், அறுகும் தர்ப்பையும் சேர்ந்து கனன்ற புகையெழுந்து, பரந்து, மண்டலமிட்டு, வளைந்து, வளைந்து மேலே செல்கிறது. விவாகச் சடங்குகளின் உச்சக்கட்டம். கொட்டு மேளம் முழங்கியது. மாப்பிள்ளை தாலியைக் கையில் வாங்கி மணமகளின் கழுத்தில் சூட்டுகிருன். அவன் கரத்தில் கொதிநீரின் வெம்மை படர்கிறது. என்ன அது? அவள் முகத்தைப் பார்க்கிருன். உயிரற்ற, உணர்ச்சி யற்ற பொம்மையாக, அவள் ஏனிப்படி மிரள மிரள விழிக்கிருள்? அவனுள்ளத்தில் ஆயிரமாயிரம் எண்ணங் கள் வியப்பு, வேதனை, விரக்தி இத்தியாதி உணர்ச்சிச் சேர்க்கைகளின் கலவைகளாக உருவெடுக்கின்றன!

அதற்குள், கலியாண ஊர்வலம் ஆரம்பித்து விடு கிறது. சுடலையாண்டி மெல்லச் சிரித்தான். 'ஏனிப் படிச் சிரிக்கிறீர்கள்!' என அதட்டிக் கேட்பவள்போல உமை அவன் கழுத்தைச் சுற்றித் தன் கரங்களைப் படரவிடுகிருள், வெகுளித் தனத்துடன். ஊர்வலம் மேலே, மேலே செல்கிறது.

வாழ்க்கைத் தோட்டத்தில் காலச் சருகுகள் உதிர் கின்றன. அவனும் அவளும் வாழ்கின்ருர்கள்! ஒரு

வரை ஒருவர் ஏமாற்றிக் கொண்ட நினைப்பில், எங்கே நிறைவு மலரப்போகிறது? அவனுக்கு அவளைத் தெரிகிறது. ஆனால் வாய்திறந்து...கேட்க முடியவில்லையோ! பாவம்; அவன் நேரமில்லாதவன். அரசியல், இலக்கியம், சமூக சேவையென்று ஒய்வு ஒழிச்சலில்லாமல் ஓடித்திரிகிற அவனுக்கு இதையெல்லாம் விசாரித்துக் கொண்டிருக்கும் வாய்ப்பெங்கே? சில சமயங்களில் தொடர்ந்து இரண்டு மூன்று நாட்கள் அவன் வீட்டுக்கே வராமலிருந்து விடுவதுண்டு. அந்த வேளைகளிலெல்லாம் அவள் குமுறுவாள். மனச்சாட்சி அவளைத் துளைத்தெடுத்து விடும்! "பாவம் ஞானி, எவ்வளவு நல்லவராக இருக்கிறார்! போயும் இவருக்குத் துரோகஞ் செய்தேனே!" என்று வாய்விட்டுப் புலம்புவாள்!

கணவனின் பாராமுகம் கடவுள் தன்னை மன்னித்து விடாததன் எதிரொலியா? இல்லையே; அவர் வீட்டிலிருந்தாற்கூட அவருடன் தன்னால் சரியான முறையில் பழகமுடியவில்லையே. உலகம் புகழும் கவிஞர், எழுத்தாளர், அரசியல்வாதி என்னும் பெருமைக்குரிய அவரை மணந்து கொண்டதன் பயன்தான் என்ன? என்னால் அணுவளவு இன்பம் கூட அவரடைவதில்லையே! அவர் என்ன துறவியா? தத்துவஞானியா? எண்ணங்கள் அவளைக் குடைந்தெடுத்துக்கொன்று கொண்டிருந்தன.

"அமரா......!"

அந்தச் சொல் நாராசமாக ஒலித்தது அவள் செவிகளில்! அவன் அவள் முன் நின்றான். அதே பழைய வார்த்தைகள், பழைய கதைகள்...! அவளுக்குப் பிரபஞ்சமே வெறுத்துவிட்ட நிலை. மனச்சாட்சியைக் கொன்று கொண்டு எத்தனை நாளைக்கு வாழ்வது?

"அமரா உன்னை மறந்து என்னால் வாழமுடியாது அமரா, வாழமுடியாது!"

'அதற்காக...!' கிரகண காலத்துப் பைத்தியம் ஒன்று பேசுவது போலவிருந்தது அவள் பேச்சு.

"அமரா மறந்து விட்ட அந்தக் காதல் விரகத்தை, உன் மணநாளின் முதல்யாமத்தில் நீ வளர்த்துக் கொள்ளவில்லையா? அந்தக் கண நேர வாழ்வில் உலக இன்பமனைத்தும் சுவைத்துவிட்ட பெருமிதத்துடன் நாம் கண்மூடிக் களிக்கவில்லையா? எதற்காக அமரா இப்பொழுது என்னை வெறுக்கிறாய்...?" சந்திரனின் குரலில் மோகாவேசம் குமுறியது!

"சந்திரன், என்னை வாழவிடுங்கள்! வாழ்வா...? எனக்கு இனி இல்லையே! இளமை மயக்கத்தின் உணர்வுப் போதையில் அழியாக் களங்கத்தை அறுவடை செய்து கொண்ட இந்தப்பாவிக்கு இனி வாழ்வு எங்கே? சந்திரன், அந்தச் சில நிமிட நேரங்கள் மட்டும் நீங்கள் மனிதனாக மாறியிருந்தால், காமத்தால் கண்ணிழந்த இக்கபோதியின் வாழ்வில் வளஞ் சேர்த்திருக்கலாம். ஆனால்...!" அவளால் மேலே பேசமுடியவில்லை.

அலறினாள்! அவள் உடல் நடுநடுங்கியது. தலையிலும்மார்பிலும் கைகளாற், படார், படார் என அறைந்து கொண்டாள்.

'அமரா', உனது கழிவிரக்கத்திற்காக நான் இரங்குகிறேன். ஆனால், அதனால் நீ வாழ்ந்துவிட முடியுமா? காலமெல்லாம் கண்ணீர் சிந்திக் கருகுதற்காகவா நாம் காதலை வளர்த்தோம்? அமரா, வீணாக வருந்தாதே! வாழ்வைச் சுவைப்போம்! ஒழுக்கம், உண்மை, கற்பு, கடமை, எல்லாம் நமது இன்பவாழ்வைத் தடுக்கும் தடைக்கற்கள். அவை வெறும் கானல் நீர்த்தோற்றம்

காதல் ஒன்றே நித்தியமானது!" சந்திரன், சந்திரனாகவே விளங்கினான். அவள் நெஞ்சம் பொருமியது.

"காதல்! அது வெறும் பிரமை! வாழத்துணிபவரை வாழாமதற்றடுக்கும் வன் கூற்றம். சந்திரன் உங்கள் வஞ்சப் பேச்சில் மயங்கி என் கற்பைப் பலி கொடுத்தேன்; அறிவிலி, இனித்தவறமாட்டேன். என் அறிவு, உள்ளம் இப்பொழுது விழித்துக்கொண்டது. காதலிக்கத்தெரிந்த உங்களுக்கு என்னை மணமுடிக்க வலியில்லை, துணிவில்லை! பழியையும், தவறையும் பழைய சந்ததி மேற் சுமத்திவிட்டு நாம் செய்தபச்சை விபச்சாரத்திற்குப் பரிகாரமுண்டோ? உலகை நாம் ஏமாற்றிக் கொள்ளலாம். உண்மையை, மனச்சான்றை ஏமாற்றமுடியுமா?

ஞானி! என் கணவரைப் பாருங்கள்! எவ்வளவு நல்லவர். உங்களைப் பார்க்கிலும் எவ்விதத்திலும் குறைந்தவரல்லர். மிகச்சிறந்தவர். அழகில், அறிவில், ஆற்றலில்......! ஆனால் ஆண்டவனே, களங்கப்பட்ட உடலும் உள்ளமும் கொண்ட எனக்கு அவரைக் கணவர் என்று கூறுகிற அளவுக்குத் தகுதில்லையே!" அமரா தேம்பினாள்.

"அமரா, மிகக் கிழவியாகி விட்டாய்! வேதாந்தம் பேசுகிறாய். பல்கலைக் கழகத்திலே நாம் படித்த நூல்களிலே இவையுமுண்டென்று எனக்குத் தெரியவில்லையே!" அவன் என்ன பரிகசிக்கிறானா...? அவள் வாய் குழறினாள்......!' நாம் படித்த மாப்பசானும், எமிலிசோலாவும் எழுதிக் காட்டுகிற பாத்திரங்களைவிட நாம் மிகமோசம்! வைதீகம் மிக்க பழைய சந்ததி புதுயுகத்தின் நல்வாழ்வுக்குத் தடைக்கல்லென்று கூறிய நாம், அந்தக்கண நேர வாழ்வுக்குக் கொடுத்த மதிப்போடு அந்தப் பழைய சந்ததியினரையே மிக நல்ல

வர்களாக்கி விட்டோம்! பெண் மிகப் பலவீனமானவள் என்பது முழு உண்மைதான். அந்தப் பலவீனத்திற்கு நானுளாகி விட்டபோது நீங்கள் மிகமிகச் சின்ன மனிதராகி விட்டீர்கள். என் நல்வாழ்வையே குழி தோண்டிப் புதைத்து விட்டீர்கள்.

சந்திரனுற் பொறுக்க முடியவில்லை. "தமிழ்ப்பெண் களே இப்படித்தான். கலியாணமானதும் மெத்தமாறி விடுகிருர்கள்!" அவன் முணுமுணுத்தான்.

"அதெல்லாம் சரிவராது அமரா, என்றும் என்னிட மிருந்து உன்னைப் பிரிக்கமுடியாது!" வெறி கொண்ட வனைப்போல அமரானவை அணைக்கத் தாவினுன். "சந் திரன்" அச்சத்தால் அவள் அலறினுள். அவன் பிடிக் குள் அகப்படாமலிருக்க அறையின் மூலைக்கு, மூலை ஓடினுள். அவன் தன்னைப் பலாத்காரமாக அணைத்த போது திமிறினுள், நெட்டித் தள்ளினுள், எப்படியோ அவன் அறைக்கு வெளியேபோய் விழுந்தான். எழுந்து உழறிக்கொண்டு போனுன்.

'பிசாசு!' அவள் தன்னைத்தானே வெறுத்தாள். வேதப் புத்தகத்திலிருந்து சாத்தான் உவமை கூறுவது போலவா இவ்வளவு நாளும் இவன் பேசினுன்...? எவ்வளவு பயங்கரமானவன்? அவன் மட்டுமா பயங் கரமானவன்? நான்...? எத்தனைமுறை தொல்லை தந்து விட்டான்...! ஞானி என்றேனும் இந்த நீச நாடகத்தை நேரடியாகக் கண்டுவிட்டால்...?

அவளிதயம் எரிமலையாய்க் கனன்று, புகைந்து, கருகிக்கொண்டிருந்தது!

இப்பொழுது உமை சிரித்தாள்! நீலகண்டன் எதற் காகச் சிரிக்கிருய் என்று அவளை அதட்டினுன், குறும் புப்பார்வையுடன்.

ஆன்மா தனக்குத்தானே எதிராகப் போராடத் தொடங்கிவிட்டால் உலக ஆசாபாசமனைத்தும் அழிந்து விடும். மனச்சாட்சியின் அதீதத் தாக்குதலுக்குட்பட்ட மனிதப்பிறவி யாரும் அமைதியடைய முடியாது. மூன்று வருடங்களாக மனச்சாட்சியைக் கொன்று கொண்டு வாழ முயற்சித்த அமராவுக்கும் அதே நிலை தான் ஏற்பட்டது. அவளுள்ளத்தில் அமைதியில்லை, வாழ்வில் இன்பமில்லை, யாரையுமே அவளுக்குக் காணப் பிடிக்கவில்லை, மனம் உந்தித் தள்ளிக்கொண்டிருந்தது. "போ, போ, எங்காவது போய்த்தொலை! உனக்கென்ன வாழ்வு? சாவைத்தவிர வேறு எதுவுமே சாந்தியளிக் காது...போ, போ...!"

அமராவினால் முடியவில்லை. பதைபதைத்தாள். "சாகவா...? சாகத்தான் வேண்டுமா? சமாதானம் கிடைக்குமென்றால் செத்தொழிந்தாலென் என்ன?" தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள். 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்று கிறித்தவ வேதநூலில் வாசித்த பகுதி அவள் நினைவில் மிதந்தது. சந்தேக மில்லை; அவள் ஒரு பாவிதானே!

இரவு பத்து மணிக்கு மேலாகி விட்டிருந்தது. ஞானியின் கார் அசுரவேகத்தில் வீட்டுவாசலில் வந்து நின்றது. எந்தக் கூட்டத்திற்குப் போய்ப் பேசிவிட்டு வருகிறானோ? வீட்டு ஞாபகமென்ற ஒன்று அவனுக் கிருப்பதே பெரிய அதிசயம். வீடு ஒரே இருள் கப்பிக் கிடந்தது. மின்விளக்குகள் இருந்த அடையாளமே தெரியவில்லை. 'அமரா, அமரா!' அவளை அழைத்து அலுத்துவிட்ட அவன், கார் முன் விளக்குகளை எரிய விட்டுக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றான். மின்விளக்குகளை எரியச்செய்து பின்னர் காரை நிறுத்து மிடத்துக்கு எடுத்துச் சென்றான்.

'அவள் எங்கே?'' என்ற கேள்வி அவனிதயத்தில், தானே தோன்றியது. எத்தனையோமுறை அழைத்து அலுத்துவிட்டான். வீடு முழுவதும் சல்லடை போட்டான்; காணவில்லை. பக்கத்து வீடுகள் அமைதியிலாழ்ந்துகொண்டிருந்தன. யாரிடம் விசாரிப்பது? ஒருதடவை மீண்டும் தேடுகை. வீடு, முற்றத்துப் பூஞ்சோலை. பின்வளவு, எல்லாம் தேடிக் கிணற்றடிக்கு வந்தான். எட்டி உள்ளே பார்த்தான், அங்கே அவள் கிடந்தாள்; பிணமாக, ஆ...!' அலறியே விட்டான். அந்தக் கூச்சலுடன் ஆட்கள் வந்தனர். ஞானி உள்ளபடியே விவரித்தான். கிணற்றுக்கட்டில் கைவைத்த ஒருவர் 'கடிதம்' ஒன்றை எடுத்துக்காட்டினர், நின்றவர்களிடம். யாவுமுணர்ந்தவர் தம் உள்ளங்கள் விழித்தன.? பிறகென்ன சம்பிரதாயமாக நடக்கவேண்டியவை எவையோ, அவை நடந்து முடிந்தன.

"ஞானி-அப்பாவி,'' என்ருள் உமை. அப்படியா? என்று கேட்டுச் சிரித்தான் திரிசூலன். அவன் முகத்தில் திரிபுரமெரி செய்த காலாக்கினி கனன்று மடிந்தது ஒரு கணம்!

# வாழ்வு

எனக்கு ஒரே ஓர் ஆசை. எண்பது வருடங்கள் தூல சரீரத்துடன் இந்த உலகத்தில் உலாவும் சிதம்பரம் என்றைக்காவது ஒரு நாள் சாகவேண்டியதென்னவோ நிச்சயம். அப்படிச் செத்துப்போன பின்புதான் என் ஆசை நிறைவேறவேண்டும். "அப்பனே, ஆனை முகத்தனே இந்த ஏழையின் ஒரே ஆசையை நிறைவேற்ற மறந்துவிடாதே!"

கோவில் மணியின் புளகாங்கித சப்தத்துடன் ஆனைமுகனைப் பக்தி சிரத்தையுடன் பணிந்தெழுந்தேன். உடல், உள்ளம் எல்லாம் இலேசாகிவிட்ட உணர்ச்சி! விருத்தெரிந்த காலந் தொட்டு, விருத்தாப்பியதசை கப்பிக்கொண்ட இந்நாள்வரை கரிமுகக் கடவுளிடம் கணமும் நான் வேண்டும் வரம் இந்த ஒன்றுதான்.

அந்த ஒரு வரமும், நான் உலகத்தில் வாழ்வதாக மற்றவர்கள் நினைத்துக்கொண்டிருக்கும்போது எனக்கு வேண்டியதில்லை. என்றோ இம்மாய உலகைவிட்டு மறைந்த பின்புதான் எனக்கு அது வேண்டும்.

நினைத்து, நினைத்து வேண்டுதல் செய்து பழகிப் போன மனம் கரிமுகன் சந்நிதியில் மீண்டும் மீண்டும் அதையே கூறி ஓலமிட்டது. கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஒழுகியது. மண்ணுலக நினைவுகள் கொஞ்சங் கொஞ்சமாக மங்கி மறைந்துகொண்டிருந் தன. இப்படி எவ்வளவு நேரம் இருந்தேனோ தெரியாது. கோவில் குருக்கள் குரல் கொடுத்தபோதுதான் என் நிட்டை கலைந்தது.

'சிதம்பரம்...... என்ன அழுகிறுயா?'

"இல்லைச் சுவாமிகாள்......!"

என் குரல் தழுதழுத்தது. ஏனோ......?

அருச்சனைக்குப் பணம் இல்லாவிட்டால் பரவாயில்லை. நான் அருச்சனை பண்ணித் தருகிறேன்!"

கோவில் குருக்களின் அன்பு மொழிகளில் என் இதயம் மீண்டும் நெக்குருகியது; விம்மியது. உதடுகள் உணர்விழந்தன. நான் என்னை இழக்கலானேன். குருக்களின் ஈரநெஞ்சத்தின் தண்மையில் என்னிட மிருந்த வறுமை என்றோ பூண்டற்றுப் போய்விட்டது. ஆனைமுகனை அருச்சனையோடு சந்திக்க வழியற்று வருந் திய போதெல்லாம் குருக்கள் என் நெஞ்சைக் குளிர் வித்தார். இன்றும் அதேபோல நினைத்துவிட்டார்.

"மன்னிக்கவேண்டும் சுவாமி! அருச்சனை இன் றைக்கு வேண்டியதில்லை. இன்றுடன் என்னையே அவ னுக்கு அருச்சனையாக்கிக் கொண்டேன்!"

என் உடல் கிடுகிடுவென நடுங்கியது. என்றுமில் லாத பிரேமையில் மனம் சிக்கிக்கொண்டதா? பேசுவது நானு, அல்லது வேறென்று......?

குருக்கள் மௌனமாக மெல்லடி எடுத்து வைத்துத் திருவுள்ளைக் கடந்து வெளியே நடந்தார். சிறிது நேரம் மீண்டும் அதே மௌன நிலையில் நின்றுவிட்டு நான் வீடு திரும்பினேன். வயது எண்பதல்லவா உடலுக்கு? ஒரே அசதியாக இருந்தது? வீடு வந்ததும் விழுந்து படுக்கத் தோன்றியது. மனம் மாத்திரம் மண்ணிலிருந்து விண்ணுக்குத் தாவிக்கொண்டிருந்தது!

நான் விழித்துக்கொண்டபோது, எல்லாம் புதுமையாக இருந்தது. வீட்டின் மையத்தில் கிடந்த கட்டிலைச் சுற்றிப் பத்துப் பதினைந்து பேர் பெண்கள், ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தனர். அட, அது நான் படுத்துக்கொண்ட கட்டிலல்லவா? பக்கத்தில் சென்று பார்த்தேன். அங்கு நானு படுத்திருக்கிறேன்......? அழுகைக் குரலதிகரித்தது! ஈதென்ன மாயமோ? உள்ளுக்குளிருக்க எனக்குப் பிடிக்கவில்லை. 'சட்'டென்று வெளியே வர எண்ணினேன். எண்ணி முடியவில்லை. வெளியே வந்துவிட்டேன். தள்ளாத வயதில் எப்படி என் பார உடம்பு இதற்கெல்லாம் வளைந்து கொடுக்கிறது? உற்றுக் கவனித்தேன்; எனக்கொன்றும் அப்படி ஒரு உடலிருப்பதாகவே தெரியவில்லை! எள்ளுக்குள் எண்ணெயாகவிருந்து எண்ணெய்க்குள் எள்ளாக மாறிவிட்டேனு? என்னவோ ஒரு கட்டுக்குள்ளிருந்து விடுதலை பெற்றுவிட்டதைப் போன்றதோருணர்ச்சி என்னை ஆட்கொண்டது! அத்துடன் சுற்றிவர நிகழும் செயல்களைக் காண வேடிக்கையாகவும், ஆவலாகவுமிருந்தது.

நான் இவ்வளவு நேரமாக, வெளிப்படையாகத் திரிகிறேனே, ஒருவரும் என்னைக் கவனிக்கிருர்களில்லையே! கவனிக்காவிட்டாற் போகட்டும்! எனக்கென்ன பெரு நட்டமா விளையப்போகிறது......? மீண்டும் சுற்றி வந்து ஒரு நோட்டம் விட்டேன். அடே, அப்பா! எனக்

குத் தெரிந்த எத்தனை மனிதர்கள், பெண்கள், பிள்ளைகள் கூடியிருக்கிறார்கள். என்ன விசேடமோ? அதோ, என் மூத்த மகன் அழுதுகொண்டு போகிறானே! அவனுக்குக் கூடவா அழுகை வருகிறது? அட, எமகாதகப் பயலே! அங்கே பாருங்கள்! என் மனைவி எதற்காக அழுது தொலைக்கிறாள்? என்னிடம் வந்த காலந்தொட்டு ஐம்பது வருடங்களுக்கு மேலாக அழுகிறாள், அழுகிறாள் இன்னும் இந்த அழுகையில் சலிப்புத் தட்டவில்லையா இவளுக்கு......?

எங்கிருந்தோ சுகந்த வாசனை மிதந்து வந்து என்னைத் தாக்கியது. நேரே அங்கு பறந்தேன்!

தோல் நீக்கிய உருளைக்கிழங்கைப் போன்ற மழுங்கச் சிரைத்த தலை மனிதர் ஒருவர் ஏதோ மந்திரங்களை முணுமுணுத்துக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றியுள்ளவர்கள்—எல்லோரும் எனக்குத் தெரிந்தவர்கள் தான். வெகு பக்தி, சிரத்தையுடன் கண்ணீர் மல்கத் தேவார திருவாசகங்களைப் பாடிக்கொண்டிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தனிவாழ்வில் ஒவ்வொரு வகையினர்! என்னவோ திடீரென்று இப்படி மாறி விட்டார்கள்.

நடுவிலே அனல் ஒளிவிட்டு எரிந்துகொண்டிருந்தது. சுகந்தவர்க்கங்கள் அதில் அர்ப்பணிக்கப்பட்டு நறிய வாசனையைப் பரப்பிக்கொண்டிருந்தன. எங்கு நோக்கினும் மக்கள் ,கச,முசவென்று ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர். என் பிள்ளைகள் கூட என்னைக் கவனியாமல் துக்கந் தோய்ந்த முகபாவத்துடன் செல்கிறார்களே! ஏன்......?

அதோ என் வயது நண்பர்கள் மாணிக்கமும், அம்பலம் வாத்தியாரும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். என்ன பேசுகிறார்களோ......?

"அட கடவுளே, இப்பத்தானே விடயம் புரிகிறது! "நான் இறந்துவிட்டேனும்......" நன்ருய்ச் சொன்னுர்கள்! பைத்தியக்கார மனிதர்கள். இதோ, அவர்கள் முன்பு அவர்கள் பேசுவதையே கேட்டுக்கொண்டிருக்கிறவனைச் செத்துப்போனுன் என்று கதையளக்கிருர்கள்! நான் செத்தாபோனேன்......? சதையுணர்வில் பிறந்த இவர்களுக்குச் சதைப்பிண்டமற்ற அருவவாழ்வு அறியாத ஒன்றுதானே! நிகழும் சம்பவங்களையும், கூடி நிற்கும் மனிதர்களையும் காண எனக்கு ஒரே வேடிக்கையாக இருக்கிறது. எவ்வளவு நேரம் இப்படித் 'தடபுடல்' செய்யப்போகிருர்கள்? எனது அன்புக்குரிய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் ஒவ்வொருவரையும் காண வேண்டுமென்ற ஆசை என்னை அலைக்கழித்தது! ஒவ்வொருவராகக் கவனித்துக்கொண்டு சென்றேன். அவர்களுக்குத்தான் என்னைப் பார்க்கச் சகிக்கவில்லைப் போலும்.

அத்த வீட்டுத்திண்ணையின் தென்கோடியில் ஓர் இளம்பெண் தலைவிரிகோலமாகத் தன் கரங்களுக்குள் தலையைப் புதைத்துக்கொண்டு 'தாத்தா, தாத்தா' என்று கரைகிருளே! அவள்தான் என் பேர்த்தி பத்மா! மூத்த மகனின் மகள். நல்ல பெண்! அவளுக்குச் சற்றுத் தூரத்தில் சிந்தனை தேங்கிய முகத்துடன் காட்சியளிக்கிருனே ஒரு வாலிபன், பத்மாவின் கணவன் அவன்.

சமீபகாலமாகப் பெண் வீட்டாருடன் மனத்தாபமாக இருந்துவிட்டு, இன்று தான் 'என்சாவீட்டுக்கு' வந்திருக்கிருனும். பத்மா உரத்து அழுவதற்கு என்மீது கொண்ட அன்பு மாத்திரமல்ல, பெற்ருேரின் பிடிவாதத்தால் கணவனைப் பிரிந்திருந்த வேதனையும்கூட ஒருவேளை காரணமாகலாம்! பாவம் பத்மா! இனியாவது கணவனுடன் குடித்தனஞ் செய்ய வழிபிறக்கட்டுமே.! என் வாழ்த்துப் பலிக்குமோ?

மேலே கவனித்துக் கொண்டு சென்றேன். என்ன விசித்திரம்! நான் உயிருடன் இருக்கிறவனைக் கருதப் பட்டபோது அணுவளவும் ஆதரவு காட்டாதவர்கள் கூட இப்பொழுது உயிரை மாய்த்துக் கொண்டல்லவா புலம்புகிறார்கள்! எனக்குப் பசித்தபோது, பணம் தேவைப்பட்டபோது, தேக நலமற்றிருந்தபோது திரும்பிப் பார்க்கவும் விரும்பாதவர்கள் இன்றைக்குக் காட்டுகிற அருவருப்பு நிறைந்த அன்பைக் காண என்னால் சகிக்க முடியவில்லை. மனிதனுக்குச் செத்தபிறகுதானா சிறப்புத்தேவை? நல்ல சித்தாந்திகள் இவர்கள்! யார், யாரையோ பிரிந்த துக்கத்தையெல்லாம் நான் செத்துவிட்டதாகக் கருதி இங்கே அழுது தீர்க்கிறார்கள்.

திடீரென்று அழுகைக் குரலதிகரித்தது. பறை மேளம் வானமேயதிரக் கொட்டிமுழக்கியது. சுகந்த வர்க்கங்களின் வாசனைப் புகை மூட்டமிட்டது. சனங்கள் ஊர்வலமாக நடக்க ஆரம்பித்துவிட்டனர். அவசரம், அவசரமாக அந்தப் பக்கம் சென்றேன்! பாடையைத் தூக்கிக்கொண்டு கிளம்பிவிட்டனர்! அந்தப் பாடைக்குள் பழைய மனிதன் சிதம்பரம் இறுதி யாத்திரை செல்கிறான். 'செத்தாரைச் சாவார் சுமந்து' செல்ல ஆரம்பித்து விட்டார்கள். நாடகமே உலகமல்லவா? அவர்களைத் தொடர்ந்து செல்ல எனக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் போய் வரட்டும்! நான் வீட்டிலேயே தங்கிவிட்டேன்!

மாலை மயங்கி இருள் கவியத் தொடங்கி விட்டது. சத்தம் ஓய்ந்து விட்டது. கூட்டம் குறைந்து விட்டது. பகல் முழுவதும் அழுது புரண்ட அலுப்புடன் வீட்டாரிற் பலர் சோர்ந்து, துவண்டு, சுருண்டு துயின்று கொண்டிருந்தனர்!

மின் விளக்கின் ஒளி வெள்ளம் இருளைப் பிளந்து சிரித்துக் கொண்டிருந்தது. அந்த விசித்திர ஆசை மீண்டும் என்னுள் தலையெடுத்தது.

"பத்மாவும் கணவனும்.........?"

ஒருவேளை அவன் 'இழவு' காரியம் முடிந்ததும் போயிருப்பானோ.........? எதற்குத் தயங்க வேண்டும். என் நடமாட்டத்தை யார் கவனிக்கப் போகிறார்கள்?

ஒவ்வொரு அறையாகப் பார்த்துக் கொண்டு வந்தேன். கடைசி அறையில் கைவிளக்கு மங்கி எரிந்து கொண்டிருந்தது. பேச்சுக் குரல் கேட்டது. உள் நுழைந்தேன்.........! அதோ பத்மாவும் கணவனும் ஒரே படுக்கையில்.........!!

எல்லையற்ற மகிழ்ச்சி என்னை ஆட்கொண்டது. இனிப்பத்மாவும் கணவனும் ஒரு போதும் பிரியமாட்டார்கள்.

"தாத்தா, தன்னைக் கொடுத்து எங்களை இணைத்து விட்டார்!"

கணவனை அணைத்தபடியே பத்மாவின் பவள உதடுகள் முணு முணுத்தன. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா? வாழ்க அவர்கள்.

வெளியே வந்தேன். சாவிலே வாழ்வு மலர்கிறது! புதிய சீவகளை உயிர்க்கிறது- ஏன் சஞ்சலப்பட வேண்டும்?

# ஒரு சொட்டுக் கண்ணீர்

பாடசாலை ஆரம்ப மணி அடித்தோய்ந்தது. ஆசிரியர் கந்தசாமி வியர்க்க விறுவிறுக்க நடந்துவந்து வகுப்பினுள்ளே நுழைந்தார். "ஏ, எங்கே சுற்றித்திரிகிறீர்கள்? மணி அடித்தது காதில் விழவில்லையா?" என்று அவர் போட்ட சத்தம் அங்குமிங்கும் சிதறுண்டு திரிந்த பையர்கள் காதில் இடியோசையாக வந்துவிழ, அவர்களின் கும்மாளம்மெல்ல அடங்கியது. அடுத்த நிமிடம் ஆளாளாய் ஓடிவந்து "சித்திரப்பாவையின் அத்தகவடங்கி' வகுப்பிலே உட்கார்ந்து கொண்டார்கள்.

"எங்கே, பத்தாம் வாய்பாடு, பாடமாக்கச் சொன்னேனே, பாடமாக்கியவர்கள் கை உயர்த்துங்கள்!"

"உம்............"

ஒரு கைகூட எழும்பவில்லை. "பாடமாக்குங்கள். பாடமாக்கிச் சொல்லாமல் இன்றைக்கு விடமாட்டேன்" என்ற கட்டளையைப் போட்டுவிட்டுக் கந்தசாமி, ஒரு முஃஉ நிமிர்ந்து உட்கார்ந்தார். 'மூ ஒன்று மூன்று

மூவிரண்டுஆறு' — மூன்றும்வாய்பாட்டினை நீட்டி முழக்கி அசைபோட்டுப் படிக்க ஆரம்பித்தனர் மாணவர். கந்தசாமி தனது உப்புச்சப்பற்ற வாழ்க்கைப் போக்கின் விசித்திரத் தன்மைகளை எண்ணிப் பார்ப் பதில் தன்னை மறந்து, தானிருக்கும் சூழ்நிலையை மறந்து சொக்கிப்போய்க் கிடந்தார்.

கந்தசாமி இப்பொழுது தனது ஆசிரியசேவைக் காலத்தில் பத்து ஆண்டுகளைக் கழித்து விட்டார். ஆனால், இந்தப்பத்து ஆண்டுகளில் அவரடைந்த அனு பவங்களோ மிகப்பல. வாழ்வின் இன்பதுன்பங்களை யெல்லாம் பெருமளவுக்கு அவர் அனுபவித்துவிட்டார். இப்பொழுது வாழ்க்கை அவருக்கு ஒருமாதிரி இருந் தது. வேதாந்திகள் சொல்கிற 'தாமரையிலை மேல் தண்ணீர்போல' வாழ்கிற தன்மைக்குக் கந்தசாமி இப் பொழுது ஆளாகிவிட்டார். காலை எழுந்ததும் அவச ரமவசரமாகக்காரியாதிகளை முடித்துக்கொள்வார். ஏதோ கிடைத்ததை வாயில் அள்ளிப்போட்டுக்கொண்டு வசு நிலையத்தை நோக்கிஓடுவார். அப்பப்பா,என்ன வேதனை அங்கே? கந்தசாமியின் அவசரத்திற்கேற்கவா அங்கே வசு விடுகிறார்கள்? ஒன்று, இரண்டு, மூன்று வசுக் களில் அவருக்கு இடம் கிடையாது.

புத்தகமேட்டினை அணைத்தபடி ஒயிலாக நடந்து வந்து வசுவுக்குக் காத்துக்கொண்டிருக்கும் வனிதா மணிகளைக் கண்டால் மாத்திரம் ஏனோ இந்த வசு அனுப்புபவர்களுக்கு இதயம் பாகாக உருகிவிடுகிறது! ஆனால், கந்தசாமியைப் பொறுத்தவரையில் அவர்கள் இதயந்தான் இரும்பாகக் கெட்டிபட்டுப் போய்விடு கிறதே! ஏதோ ஒருவகையாக இந்தச் சங்கடங்களுக் கெல்லாம் தவறிக் கந்தசாமி வசு வண்டியிலேறிவிட் டாரென்றால் பின்னர் அவரை எந்தப் பிரம்மாவும் அசைக்கமுடியாது!

"வாத்தியாரே, எனக்கு எல்லாம் பாடமாகிவிட்டது!"

கந்தசாமி கனவு நிலையிலிருந்து திடுக்கிட்டு விழித்தார்.

"ஓ! எல்லாரும் பன்னிரண்டாம் வாய்ப்பாட்டைப் பாடமாக்குங்கள்!" தொடர்ந்து அவர் எண்ணக்கடலில் மூழ்கினார்.

பத்து வருடங்களுக்குமுன்னே...... கந்தசாமி அப்பொழுதுதான் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலிருந்து வெளியேறியிருந்தார். அவர் மனதில் எழுந்த கற்பனைக் கோட்டைகளுக்கோ ஓரளவில்லை. சாகாத சிரஞ்சீவித் தன்மைபெற்று அவை நனவுலகிற் காட்சியளிக்க வேண்டுமென்று அவர் எண்ணினார். இரண்டு வருடங்கள் இந்தக் கற்பனை இன்பத்திலேயே வேகமாகக் கழிந்தன.

மூன்ருவது வருடத்திலே கந்தசாமிக்குத் திருமணம் நிகழ்ந்தது. பருவதம் கந்தசாமியின் தரும பத்தினியாக வாய்த்தபோது கந்தசாமி தான் கண்ட கனவெல்லாம் நனவாகிவிட்டதென இதயப் பூரிப்படைந்தார். ஆனல் என்ன ஏமாற்றம். மேட்டு நிலத்திலும் ஒரு காலத்தில் வெள்ளம் வரத்தான் செய்கிறது. ஆனல் அங்கே வெள்ளம் நிலைத்து நெடுங்காலம் நின்றுகொண்டிருப்பதில்லை. கந்தசாமியின் வாழ்வும் இந்த நிலையைத்தான் பிரதிபலித்தது. ஆசையும் நேசமும் நிறைத்து அவர் வாழ்விலே இன்பமழை சொரிந்த பருவதம் தாலிகட்டிய ஆரும் மாதத்திலேயே கந்தசாமியைத் தனியனுக விட்டுப் போய்விட்டாள். ஒண்டிக்கட்டையான கந்தசாமிக்கு இந்த உலகத்திலேயே ஒருவகையான விரக்தி ஏற்பட்டுவிட்டது. அவரைப் பெற்றுவளர்த்துப் பெரியவனுக்கிய வித

வைத் தாயும் கந்தசாமிக்குக் கலியாணமான இரண்டாம் மாதத்திலேயே எவருக்கும் சொல்லிக்கொள்ளாமல் திடீரென்று எமனுலகுக்குப் பிரசாவுரிமை பெற்றுக்கொண்டாள். இதனால் இப்போது கந்தசாமி ஒரு தனி மனிதர். ஊரெல்லாம் என் உறவினர்கள் என்று சொல்லிக்கொண்டு அரசியல், சமூகசேவைத்தத்து வார்த்தம் பேசிக்கொண்டு பிறர் புகழைப் பங்குபோடுவதிலோ, பெரிய மனிதனாக நடிப்பதிலோ கந்தசாமிக்கு அவ்வளவு பரிச்சயமில்லை. அதனால் அவர் இந்த உலகிலே தனக்கென ஒருவருமில்லாத தனியராகிவிட்டார். தானுண்டு, தன்பாடுண்டு என்று சீவிக்கத் தொடங்கினார். வாழ்க்கை அவருக்கு முடியாத ஒரு பிரயாணமாக, தீராத ஒருகவலையாகப்பட்டது.

''வாத்தியாரே, நான் உமாவாசகத்திற்குக் காசு தந்தேனே, வாங்கிக்கொண்டு வந்தீர்களா?''

உம்... நாளைக்குக் கேள்!''

உமாவாசகம் கேட்ட சிறுபெண் பின்னர் ஒன்றும் பேசவில்லை. ஒன்று, இரண்டு எனப்பாடங்கள் முடிவதை அறிவித்துக்கொண்டு மணி ஒலித்துக்கொண்டிருந்தது.........

நேரம் இரண்டு மணி. பாடசாலை விடும் மணியும் அடித்துவிட்டது. கந்தசாமி கதிரையில் கிடந்த தனது அங்கவஸ்திரத்தை எடுத்து உதறித் தோளிற் போட்டுக்கொண்டார். வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டார். தேய்ந்து, தேய்ந்து இற்றுப்போய்க் கந்தலான செருப்பைக் காலிற் கொழுவிக்கொண்டார். கந்தசாமி இப்பொழுது பாடசாலையிலிருந்து வசுவைப் பிடிக்க நடந்துகொண்டிருக்கிறார். அவர் மனம் அலுத்துவிட்டது. ஒருநாளா, இரண்டுநாளா இந்தப்

பாடு? காலை எழுந்ததும் அவசரமாக வசுவைப் பிடிக்க வேண்டும். வசுவை விட்டிறங்கியதும் பின் ஒரு மைல்தூரம் நடக்கவேண்டும். பின்னேரமும் இதே நிகழ்ச்சிதான். ஒரு தமிழ் ஆசிரியனுக இருப்பதற் காகவா இந்தப்பாடு!

என்ன அநியாயம்! இந்த வசுவண்டிக்குத்தான் மூளையில்லையென்ருல் அதை ஓட்டுகிற 'சாரதி' களுக் குமா மூளையில்லாமற் போய்விட்டது? பத்து யார் தூரமிருக்காது கந்தசாமி வசுவைப்பிடிக்க. பாவி சாரதி விட்டுவிட்டுப் போய்விட்டானே! கந்தசாமியின் உள்ளம் உலையாய்க் கனன்றது. பசி குடலைப் பிடுங் கியது. சுற்றுமுற்றும் பார்த்தார். அடுத்த வசு வர இன்னும் முக்கால் மணி நேரம் செல்லுமே!

பசி அகோரத்திலே உலகமே இருண்டுவிட்டதாகப் பட்டது அவர் கண்களுக்கு. எதிரே இருந்த தேநீர்க் கடைக்குள் புகுந்தார். கடைக்காரன் இலையைப் போட் டுச் சாதம் பரிமாறினுன். கந்தசாமி ஒருபிடி சோற்றை எடுத்து 'அவுக்' கென்று விழுங்கினுர். கண்கள் பிதுங் கின. அவர் கழுத்தை யாரோ பிடித்து நெரிப்பது போன்ற வேதனை உணர்ச்சி, பக்கத்திலிருந்த பாத்தி ரத்தை எடுத்துத் தண்ணீரைத் தொண்டைக்குழிக்குள் விட்டு நனைத்துக்கொண்டார். கந்தசாமியின் கண்களி லிருந்து ஒருசொட்டுக்கண்ணீர் தெறித்துச் சாப்பாட்டு இலையில் விழுந்து சங்கமமாகியது. அவரது மதிய போசனமும் ஆரம்பமாகியது.

# ஆசைமயக்கம்

'ஐயா!'

மெல்லிய அந்த உருவத்தின் வேகமான நடை தளர்ந்தது. மெல்லப் பின்னுக்குத் திரும்பிப் பார்த்தார், ஆறுமுகம் ஆசிரியர்! அவர் கண்கள் அகல விரிந்தன. அந்த அசட்டுப்புன்னகை இதழ்க்கோடியில் நெளிந்து மறைந்தது.

"ஈஸ்வரி......நீயா.........!" என்று இழுத்தார். என்னுள்ளம் அலைமோதியது. மெல்லப் புன்னகைத்தபடியே 'என்ன ஆசிரியரே என்னை மறந்துவிட்டீர்களா ......?' என்று கேட்டுவைத்தேன்.

"மறந்துவிட்டேனா...........? இல்லை, இல்லை......... சும்மா......!" அவரின் சுபாவமே இப்படித்தான்! தனியே சந்திக்கிறபொழுது பாவம், இரண்டொரு சொற்களைத் தானும் முழுதாக வெளியிட முடியாது, அவரால். ஆனால் மேடையில் ஏறிவிட்டால் அமுதத் தமிழின்ப வெள்ளத்தில் அனைவரையும் ஆழ்த்திவிடும் வாசாலகமான மனிதர். ஐந்து வருடங்களுக்கு முந்திய சம்பவ

எண்ணச் சுழல்கள் குமிழ்விடத் தொடங்கின இதய ஆழத்தில். இருவரும் அருகருகாக நடந்துகொண்டிருந்தோம், வசுநிலையத்தை நோக்கி!

'ஈஸ்வரி இப்பொழுது எங்கேயிருக்கிருய்.........?' ஆசிரியர் கேட்டார்.

'ஊரில்தான்!' இரத்தினச் சுருக்கமாக நான் பதிலளித்தேன். தொடர்ந்து — 'உங்கள்பாடு எப்படி ஐயா?' என்ற கேள்வியையும் எழுப்பினேன்.

'பரவாயில்லை ஈஸ்வரி......!' அவர் அளித்த விடை இது! பேசுவதற்கு வார்த்தைகளுக்கும், பஞ்சம் வந்துவிட்டதா? அவர் நடந்தார், நானும் நடந்துகொண்டிருந்தேன்!

ஐந்து வருடங்களுக்கு முன்பு—

நான் கல்லூரி மாணவி. எஸ். எஸ். ஸியில் படித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுதுதான் ஆறுமுகம் ஆசிரியர் கல்லூரியில் ஆசிரியராக வந்து சேர்ந்தார். எடுத்த எடுப்பிலேயே அவருடைய பேச்சும், தோற்றமும், படிப்பிக்கும் பண்பும் என்னுள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக அவருடைய கவர்ச்சிகரமான பேச்சிலேயுள்ள, காந்தத் தன்மையில் கல்லூரி மாணவர் அனைவருமே கட்டுண்டனர். அவர் எங்கள் சங்கத்தில் பேசுவதென்ருல் எங்கள் எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி! போட்டி போட்டுக்கொண்டு அவர் பேச்சைப் புகழ்வோம். நாளாக, ஆக அவர்மீது எனக்குத் தனியான ஒரு அபிமானம் ஏற்பட்டது. என்ன காரணத்தாலோ! அவர் ஒரு எழுத்தாளருங்கூட என்று தெரிந்தபின்பு அவரை 'என்னுடையவர்' என்று நினைக்கும் பழக்கமே எனக்கேற்

பட்டுவிட்டது. என்ன நினைத்துக்கொண்டாரோ, அவர் என்னைக் கவனிக்கும்பொழுதும் ஒரு மாதிரியாகத்தானிருந்தார். 'ஒருபோதும் வளர்ந்த பெண்களை ஆண் ஆசிரியர்களிடம் கல்வி பயில விடக்கூடாது' என்று இதற்காகத்தான் சொல்கிறார்களோ, என்னவோ!

ஒரு நாளைக்கு அவர் தப்பித்தவறி வகுப்புக்கு வராவிட்டால் என் மனம் படும் பாடு! பெண்களின் உள்ளமே விசித்திரமானதுதான். என்னிதயத்தின் ஒலித்துடிப்பு ஒன்றுக்கு இரண்டாகப் பக்கத்து மாணவிகளிலும் ஒலிக்கின்றதா?

பார்வதி ஒரு நாள் கேட்டாள்!

"நீ என்னடி, ஆறுமுகம் ஆசிரியரை அப்படிப் பார்க்கிறாய்......?"

எனக்கென்னவோ உள்ளத்து நினைவுகள் யாவையும் ஒருமித்துக் கொட்டிவிட வேண்டும் போலிருந்தது!

எல்லாவற்றையும் உளறித்தள்ளிவிட்டேன்! பயம் பற்றிக்கொண்டது பின்புதான்! பார்வதி ஒருவேளை மற்ற மாணவிகளிடம் இதைக் கூறிவிட்டால், அவர்கள் ஆசிரியைகளிடம் கூறிவிட்டால், அவர்கள் அதிபரிடம் கூறிவிட்டால்.........! அப்பப்பா, எவ்வளவு பயங்கரம்! 'பார்வதி.........!'

'பார்வதி! அவளுக்கென்ன......?' ஆறுமுகம் ஆசிரியர் கேட்டார். என்ன வேடிக்கை! பழைய நினைவுத் தாக்கங்களினால், நிகழ்காலத்தை மறந்து வாயைத் திறந்துவிட்டேன்!

"ஒன்றுமில்லை ஐயா! அந்தக்காலத்தில், கல்லூரி வாழ்க்கையில்......... அந்தச் சம்பவங்கள் நினைவுக்கு வந்தன!"

'அந்தக் காலம்......! மறக்க முடியாத நாட்கள்!!' உணர்ச்சிவசப்பட்டவர்போல் வார்த்தைகளை உதிர்த்த ஆசிரியர் மீண்டும் மெல்ல மௌனமானுர்.

ஒரு நாள்!

பட்டினத்தில் நிகழ்ந்த களியாட்ட விழா வைபவம் ஒன்றிற்கு எங்கள் கல்லூரி மாணவர் எல்லோரும் போகவேண்டியிருந்தது. எங்கள் வகுப்பு மாணவிகளைக் கூட்டிக்கொண்டு போய்வர வேண்டிய பொறுப்பு ஆறுமுகம் ஆசிரியருக்கும், இன்னொரு ஆசிரியைக்குமாகக் கிடைத்தது. இரவு நேரம்! எட்டு மணியிருக்கும். களியாட்ட வைபவத்திலிருந்து காரில் வந்துகொண்டிருந்தோம். காரில் ஆறுமுகம் ஆசிரியரும், ஆசிரியையும், நானும், வேறு மூன்று மாணவிகளுமாக இருந்தோம். ஆசிரியர் முன் இருக்கையிலிருந்தார். குளிர்ந்த காற்று வீசியது. தெருவிளக்குகள் வாலைக்குமரியரின் மந்தகாசப் புன்சிரிப்புதிர்த்து நின்றன. என்னுள்ளத்தை என்னவோ கிள்ளியெடுத்துக் கொண்டிருந்தது. கார் கல்லொன்றில் ஏறிக் கீழேயிறங்கியபோது 'பொல பொல' வென்றதிர்ந்தது. 'என்னவோ ஏதோ' என்ற அச்சத்திஞல் 'பின்னிருக்கை'யிலிருந்த எல்லோரும் 'முன்னிருக்கை'யை இறுகப் பற்றிஞேம். என்கை விரல்களுக்கு இடையே என்னவோ ஒன்று 'கிளு கிளு'த்தது. என்னவோ அது? அப்பாடா, இப்போதுதான் புரிந்தது! என்ன துணிச்சல் இவருக்கு! ஆறுமுகம் ஆசிரியரின் முகத்தில் வெயர்வை முத்துக்கள் மினுமினுத்தன. அவரது பஞ்சுக்கரத்தின், பவளவிரலின் ஸ்பரிசத்தைப் பறிகொடுக்க நான் இன்னும் தயாராயில்லை. நெஞ்சகம் விம்மித் தணிந்தது. கார் அள்ளி அடித்துக் கொண்டு பறந்தது!

இதற்குப் பிறகு—

கல்லூரி என்றால் எனக்குக் கரும்பு! சனி, ஞாயிறு நாட்களைச் சபித்துக்கொண்டிருந்தேன். ஆசிரியரும், நானும் பேசாவிட்டாலும் எங்கள் விழிகள், உதடுகள் ஒவ்வொன்றும் என்னென்னவோ பேசிக்களிக்கும். ஆனால், இந்த நிலை நீடிக்கவில்லை. பார்வதி என்ற பொறுமைப் பிண்டம் பற்றவைத்துவிட்ட தீ பரவி விட்டது, கல்லூரி முழுவதும். என்னிதயந் துடிதுடித் தது. அவரை நினைக்க நினைக்க உயிரைப் பிரிவது போலவிருந்தது. அதிபர், அவரையும் என்னையுந் தனித்தனி அழைத்துப் புத்திமதி கூறி அனுப்பினார். எப்படி நாங்கள் பேசாமலிருக்கமுடியும்? மல ரிடம் வண்டை யழையாதே என்றால் —, வண்டே மலரை அண்டாதே என்றால்—நிலவே ஒளியைப் பொழி யாதே என்றால் — நீரே தண்மை தாராதே என்றால் நிக ழுமா இந்த நினைப்பு?

கரும்பாக இனித்த கல்லூரி கசக்கத் தொடங்கி யது. அந்தப் போதையூட்டும் விழிகள், காவியச் சுவை யைப் பிழிந்து தரும் வார்த்தைகள், வெள்ளையுள்ளத் தின் பளிங்குத் தன்மையைப் பிரதிபலிக்கும் அகன்ற முகம், பிரேமையில் வீழ்த்தும் அந்த மெல்லிய உரு வம்! ஐயோ, ஐயா, எப்படி மறப்பேன் உங்களை? பேசாதீர்கள் என்றல்லவா பேசவைத்துப் பிரலாபிக்கச் செய்கிறார்கள்!

"ஈஸ்வரி, நீ ஏன், எனக்குக் கடிதம் எழுதுவதைத் திடீரென்று துண்டித்துக் கொண்டாய்?" ஆசிரியர் கேட்டார். என்ன......? ஆசிரியரும் என்னைப் போலத் தான் கடந்தகாலச் 'சொர்க்க பூமியில்' சுற்றுப்பிரயா ணஞ் செய்கிறாரா?

நெஞ்சம் நைந்திடும் அந்த வேதனைக் கும்பலை எப்படி வெளியிடுவேன், என் ஆசிரியருக்கு!

ஐயா......, அது பெரிய கதை......!

'சொல்ல விருப்பமில்லையா உனக்கு......?'

"சொல்லாமல்........."

கல்லூரிக்குச் செல்லாமல் விட்டபின்னர், என் வாழ்வே முற்றிலும் தாறுமாருகி விட்டது. என் தமையன்மார்கள் இருவரில் ஒருவர் 'ஈஸ்வரி நீ படிக்க வேண்டும்' என்ருர். மற்றவர் 'படித்தது போதும், இனி இல்லறத்தில் ஈடுபடுக' என்ருர். வெள்ளையுள்ளம் படைத்த என் பெற்ருர் எனது இல்லறவாழ்வையே விரும்பினர், வஞ்சக நெஞ்சுகொண்ட அண்ணனின் அந்தரங்கத்தை அறியாது! 'படிக்க வேண்டும்' என்றவர் மௌனியாஞர். இளைய சகோதரனின், நெருங்கிய நண்பன்' என்ற தொடர்புடன் அறிமுகப் படுத்தப் பட்ட ஒருவருக்கு நான் மனைவியானேன். அல்ல மனைவியாக்கப்பட்டேன். அன்றிலிருந்தே என் வாழ்வு நரகமாகிவிட்டது. மூன்று வருடங்கள் அணு, அணுவாக அரிக்கப்பட்ட என் வாழ்வு முடியமுன்னமே, தாலியைக் கட்டிய ஒரு பெருங்கைங்கரியத்திஞல் கணவஞன அந்த மனிதர் மண்டையைப் போட்டுவிட்டார்! ஆசிரியரே, நான் மணமுடித்த அன்றிலிருந்து இன்றுவரை உங்களுக்குக் கடிதமெழுதவேயில்லை. எப்படி எழுத முடியும் ஐயா......?

வாழ்வே நரகமாகிய பின்னர், குடிகாரக் கணவன், நோயாளி, வாழ்வு அவனுக்கு ஒரு எச்சில் இலை! சொறி நாய்க்கும், எச்சில் இலைக்கும் உள்ள பொருத்தம், எனக்கும், என் கணவருக்குமிடையே எப்படி ஏற்படும் ஐயா? 'இல்லறம்' நடத்திய மூன்று வருடமும் நான் மௌனியானேன். அதன் கருத்து உங்களை மறந்ததன்று ஐயா!

அவர் என்னை விழித்துப் பார்த்தார்! நான் உள்ளம் திறந்து உணர்ச்சியோடு பேசுகிறேனுக்கும்.

இப்பொழுது நான் விதவை. இதயத்தின் ஓர் மூலையில் கல்லூரி வாழ்வும், நீங்களும் மறையாத ஒளியாக ......... உங்களை என்றும் என்னுல் மறக்க முடியாதென்பது உண்மைதான். ஆனுல், பயனற்ற உண்மை! வெறும் ஆசைமயக்கம். நினைவில் இனிக்கும் ஒரு உணர்ச்சி! அவ்வளவுதான் ஐயா......!

"ஈஸ்வரி, நீ சொல்வதென்னவோ உண்மைதான். நான்கூட 'முன்னையை'ப் போலில்லை. மணமாகி மூன்று குழந்தைகளுக்குத் தகப்பனுகி விட்டேன். ஆனுல், வாழ்வு சுவைக்கவில்லை. காரணம்......? மனம், பொருள், இலட்சியம் எல்லாம் ஒன்றக் கிடைக்கும் இல்லறம் என்பது ஆயிரத்தில் ஒருவருக்குத்தான் கிடைக்கிறது. நீயும் நானும் அதிலே 'கோட்டை' விட்டவர்கள்!'

ஆசிரியரின் பேச்சு எனக்கு வியப்பளிக்கவில்லை. அவரும் உண்மையைத்தானே பேசுகிறுர்!

வசு நிலையம் வந்துவிட்டது. ஆசிரியரும் நானும் பிரியப்போகிறேம். எப்படியோ பிரியத்தானே வேண்டும்!

"ஈஸ்வரி, நான் வரட்டுமா.........?

அதே குரல், ஐந்து ஆண்டுகளாகியும், என்னுள்ளத்துள் ஒலித்துக்கொண்டிருக்கும் அதே குரல், அதே முகம், அதே பார்வை, அழியாத நினைவுச் சுவடுகளை ஆழப்பதித்த மெல்லிய அந்த உருவம்.... "வாருங்கள் ஐயா!"

என்விழிகளின் விளிம்பில் நீர் கட்டி மெல்லப் பனித்தது. அவர் அதோ போய்க்கொண்டிருக்கிறுர்.

ஐந்து ஆண்டுகளுக்குப்பின் — அரிதாக — ஒரே ஒரு தடவை சந்தித்துவிட்ட அந்த ஆசை முகம் மறைந்து கொண்டிருக்கிறது. கடைசியாக ஆசிரியர் வேறு பாதையிலும் நான் வேறு பாதையிலும் கால் வைத்து விட்டோம். வெவ்வேறு வசுவண்டிகளில் போய்க்கொண்டிருக்கிறோம். கல்லூரி வாழ்க்கையில் துளிர்த்த எங்கள் ஆசை, அதே - ஆசை இன்னும் அப்படியே கன்னி கழியாத இளமையைப் போல, எண்ணுந்தோறும் இன்பமளித்துக்கொண்டிருக்கிறது. இன்றுள்ள நிலையில் அதுவே எனக்கும், ஆசிரியருக்கும் போதுமானது போலும். வாழ்க அந்த "ஆசை மயக்கம்!"

*

# போட்டி ஒழிந்தது

"ஏ அப்பா, எத்தனை நாளாகத்தான் என் பிழைப்பிலே மண்ணைப் போட்டுக்கொண்டிருப்பாய், இன்னுமா உன் மனது இளகவில்லை......?"

"சரிதான் உன்வேலையைப் பார்!"

"வரவர உன் கருவம் அதிகமாகிறது. பாவிப்பயலே, காலையிலே வந்த ஒரு சவாரியைக்கூடத் தட்டிக் கொண்டு ஓடுகிறுயே, நீ நன்ருக இருப்பாயா......?

"நான் நன்ருக இருப்பதும், கெட்டுக் கிடப்பதும் உன் கணக்கிலே இல்லை. உன்பாட்டை நீ பார்த்துக் கொள்!"

இழுவைவண்டி நிலையத்திற்கு வந்ததுமே, சவாரி கிடைத்த சந்தோசத்தில் சண்முகம் இழுவைவண்டியை இழுத்துக்கொண்டு காற்ருய்ப் பறந்தான். அதைப் பார்த்த நாகப்பன் உள்ளம் அனலாய் எரிந்தது. வயது தொங்கிப்போன காலத்திலே நாளைக்கு இரண்டு ரூபாயாவது உழைக்காவிட்டால் அவர்கள் வாழ்வதுதான்

எப்படி? அவர்கள் என்பது நாகப்பனும் அவன் ஒரே புதல்வியான தங்கத்தையுஞ் சேர்த்துத்தான். எந்தத் தொழிலுக்குமே போட்டி உண்டுதான். ஆனால் ஏழைகள் மத்தியிலே எழுகிற போட்டியைப் போன்ற வேதனை தரும் நிகழ்ச்சி வேறொன்றிருக்கமுடியாது. நாகப்பனுக்கு இப்பொழுது வயது அறுபத்தைந்தை யடுத்துவிட்டது. அவன் வாலிபம் தொடங்கிய நாட்களிலிருந்து முதுமை முத்திரையிட்டுள்ள இந்நாட்கள் வரை செய்துவந்த தொழில் ஒன்றே ஒன்றுதான். இழுவைவண்டி இழுப்பது!

அந்த நாட்களில் எல்லாம் நாகப்பன் வண்டியிலே சவாரி செய்ய வழக்கறிஞர்கள், வர்த்தகர்கள் முதல் சகலருமே போட்டியிட்டுக்கொண்டு வருவார்கள். அவ்வளவு வேகம், ஓட்டம் ஓடுவான் நாகப்பன். இப்போதென்றால் அத்தனை வேகம் அவனுக்கில்லை. அவனுடலுக்கில்லை. அதனாலே அவனிடம் சவாரியை நாடுபவர்களும் குறைந்துவிட்டனர். போதாக் குறைக்குத் தொழிலில் போட்டியிட வேறு ஆட்களும் வந்துவிட்டனர். அந்தப் பட்டினம் காரையும், இரயிலையும் காணாத காலத்திலிருந்து நாகப்பனின் இழுவைவண்டியைக் கண்டிருக்கிறது. எப்படியிருந்துதான் என்ன? இப்பொழுது தான் கார்கள், குதிரைவண்டிகள் என்பவற்றுடன் சவாரிக்காரர்கள் திருப்தியடைகிறார்களே போதாதற்குப் பொலிகாளைகள் போன்ற தடியர்களும் இழுவைவண்டி வைத்துக்கொண்டு வந்துவிட்டார்கள், நாகப்பனுடன் போட்டியிட! பிழைப்பு, என்ன பொத்துக்கொண்டா வந்து விழும்?

வேதனைத் தீ பற்றி எரிய ஒரு இலைச்சுருட்டினை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டே நாகப்பன் வண்டி

யில் சாய்ந்துகொண்டு எண்ணமிடலானுன். அவன் ஆத்திரம் எல்லாம் சண்முகம் மேலேதான். "அவன் என்னதான் 'வசியம்' வைத்திருக்கிருனே! வருகிறவர்க ளெல்லாம் அவனிடமல்லவா சவாரி பேசுகிருர்கள்'' என்று அவன் மனம் அடித்துக்கொண்டது. மறுபுறம் பிழைப்பே அரிதாய்ப்போன இந்தக் காலத்திலே 'மள மள'வென்று வளர்ந்து, கதிர் ஈனத் தயாராக நிற்கும் குரக்கன் பயிரைப்போலக் கலியாணத்திற்குக் காத்து நிற்கும் தாயில்லாப் பெண்ணுனை தங்கத்தை நினைக்க அவனுள்ளம் நிலைதடுமாறியது. எரிந்து முடிந்த சுருட் டுத் துண்டை எறிந்துவிட்டுக் கண்ணை மூடிக் கொண்டான்.

அவன் கண்ணை விழித்தபோது கண்ட காட்சி......! ஆச்சரியத்தால் உள்ளம் ஒரு முறை விரிந்து சுருங்கி யது. மறு கணம் "தங்கம்!" அவனையறியாமலே அந்த அழைப்புப் புறப்பட்டுவிட்டது. தங்கம் அவனை நோக்கி அடியெடுத்து நடந்து வந்தாள். சண்முகம் ஒன்றுமறி யாதவன்போல வண்டியை இழுத்துக்கொண்டுபோய் மரநிழலில் நிறுத்திவிட்டு நிம்மதியாக உட்கார்ந்து விட்டான்!

"தங்கம், அவனுடன் உனக்கென்ன பேச்சு!"

ஒன்றுமில்லையப்பா, உன் அப்பா தூங்கிக்கொண் டிருக்கிருரே, நீ என்ன அவருக்குக் காவலிருக்கிருயா?" என்ருர். "நான் காவல் இருக்கவில்லை. அவருக்குக் கஞ்சி கொண்டுவந்தேன்" என்றேன். "அப்படியா, அவரிடம் சொல், வீணுக என் மேலே துள்ளிக்குதிக்க வேண்டாமென்று! நான் ஏன் அவர் பிழைப்பைத் தட்டிப் பிடுங்கப்போகிறேன்" என்ருர். அவ்வளவுதான்! நீங்கள் கூப்பிட்டீர்கள், வந்துவிட்டேன்."

"அவன் கிடக்கிறான் தலைக்கனம் பிடித்தவன். நீ கஞ்சியை ஊற்று" கஞ்சியைச் சிரட்டையில் வாங்கி "மடக், மடக்" கென்று குடிக்கத் தொடங்கினான் நாகப்பன்.

"ஏனப்பா, அவரைத் 'தலைக்கனம் பிடித்தவன்' என்று ஏசுகிறீர்கள். அவர் அப்படி ஒன்றும் கெட்டவராகத் தெரியவில்லையே!"

"பின்னே என்ன பிள்ளை, காலையிலே எனக்கு வந்த ஆள் அவனைக் கண்டதும் அவனிடமல்லவா சவாரி போகிறார். இப்படியே எல்லா நாளும் நான் 'காக்கா' கலைத்தால் வண்டி வாடகைக்கே திண்டாடவேண்டுமே......"

"அதற்காக அவரைத் திட்டி என்ன காண்பது? எல்லாம் நமது காலம்!"

"சரி பிள்ளை, நீ வீட்டுக்குப் போ. இதிலே நின்றால் இன்றைக்கு அரைக்காசுகூடக் காணமுடியாது. நான் புகையிரதநிலையப் பக்கமாகப் போய்ப் பார்க்கிறேன்."

தங்கத்தை வீட்டுக்கு அனுப்பிவிட்டுப் புகையிரத நிலையப் பக்கமாக வண்டியை இழுத்துக்கொண்டு நடந்தான் நாகப்பன்.

அடுத்து இரண்டு நாட்களாக நாகப்பனையே அந்தப் பக்கம் காணவில்லை. சண்முகம் கூட "ஏது, அவர் கூட இப்படித் தாமதிக்கிறாரே" என்று தனக்குள் ஆச்சரியப்பட்டுக்கொண்டான். அன்று காலை தங்கம் தலையில் காய்கறிக் கூடையைத் தாங்கிக்கொண்டு நடப்பதைக் கண்டதும் அவனுக்கு 'எங்கே உன் அப்பா' என்று கேட்டுவிடலாமா என்று தோன்றியது! முன்பின்

யோசியாமல் அப்படியே கேட்டும்விட்டான். தங்கம் முதலில் வாயே திறக்கவில்லை. இரண்டாம் முறையும் அவன் அதே கேள்வியைக் கேட்கவே அவள் வாய் திறந்தாள்.

"அவர் காய்ச்சலாகக் கிடக்கிறார், இரண்டு நாளாக! அன்றைக்கு மழையிலே நன்றாக நனைந்துவிட்டார்!" அப்படிச் சொல்லும்போதே தங்கத்தின் கண்கள் நீரைச் சிந்தின.

"பாவம், அவர் ஏன் இப்படிக் கஷ்டப்படவேண்டும்? உனக்கு ஒரு கல்யாணத்தைச் செய்து வைத்துவிட்டால் அவர் நிம்மதியாக இருக்கலாமே!" சண்முகத்தின் பேச்சில் இனந்தெரியாத ஒருவகைக் குறும்பு இழையோடியது!

கலியாணப் பேச்சை எடுத்ததும் அவள் முகம் நாணத்தால் சிவந்தது. "நான் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு 'விர்'ரென்று நடக்கத் தொடங்கினாள், அவனைச் சட்டை செய்யாதவள் போல.

அவள் வாளிப்பான உடலும், கொள்ளை அழகும் சண்முகத்தின் மனதை அப்படியே அள்ளிக்கொண்டு போய்விட்டன!

"ஏ, பிள்ளை, உன் அப்பாவுக்கு ஏதாவது ஆபத்தென்றால் என்னிடம் சொல்ல மறந்திடாதே. நான் என் ஞானத்தைச் செய்யப்பார்க்கிறேன்.

தொலையில் நடந்து கொண்டிருந்த தங்கத்தின் காதுகளில் இவ்வார்த்தைகள் 'வேய்ங்குழல்' பொழி கீதமாகப்பட்டது. ஏனென்றால் சண்முகத்தின் ஆண்மை ததும்பும் உடலமைப்பில், கவர்ச்சிகரமான முகவெட்

டில், அரும்பு மீசையில், கரும்புப்பேச்சில், மின்னலென ஒளிரும் புன்சிரிப்பில் அவனை முதன்முதல் கண்ட பொழுதே அவள் உள்ளத்தைப்பறி கொடுத்து விட்டாள்.

"மங்கைதான் வாராளோ, என் மையலைத் தீராளோ" என்று பாடிக் கொண்டே சண்முகம் இரண்டுநாள் களை வண்டி இழுப்பதில் கழித்து விட்டான். தங்கத்தை அந்தப்பக்கமே காணவில்லை. நாகப்பனின் கதியும் என்னவாயிற்று என்று தெரியவில்லை. 'போயாவது பார்க்கலாமா?' என்று கூடச் சண்முகம் ஒருதடவை எண்ணினான். "சே, எப்படி இருந்தாலும் நம்மைத் துரும்பாகக்கூட மதிக்காத அந்த மனிதன் வீட்டுக்கு எப்படிப் போவது?" அவன் மனம் பின்னுக்கிழுத்தது. இந்தமனப் போராட்டத்தில் மூன்றும் நாளுடன் அவன் மல்லாடிக் கொண்டிருந்தான். இருட்டும் நேரமாகிவிட் டது. சில்லென்ற குளிர்காற்று மயிர்த்துவாரங்களில் ஊசி கொண்டு குத்துவது போல, ஊளையிட்டுக் கொண்டுவீசியது. 'பட், பட்' டென்று மழைத்துளிகள் பூமித்தாயின் மடியில் 'பொல பொலென்று' உதிர்ந்தன. 'இனி'யார் சவாரிக்கு வரப் போகிறார்கள் என்ற எண் ணத்துடன் சண்முகம் வண்டியை இழுத்துக் கொண்டு புறப்பட ஆயத்தமானான். தூரத்தில் யாரோ ஒருபெண் ஓட்டமும் நடையுமாய் வருவது அவன் கண்களிற் பட்டது. தங்கந்தான் வருகிறாளோ?

கொஞ்சநேரம் தாமதித்தான் சண்முகம்.

அவன் எண்ணியது பிழைத்துப் போகவில்லை. தங்கம் அவனிடமேவந்து கொண்டிருந்தாள்!

"என்ன தங்கம், என்ன அவசரம்? இப்படி ஓடிவரு கிறாயே..............."

அப்பா மிகவும் கட்டப்படுகிருர். பட்டினத்து மருத்துவரை அழைத்துப் போனேன். ஊசிபோட வேண்டும். பத்துரூபா இல்லாவிட்டால் முடியாதென்று போய்விட்டார். நான் என்ன செய்வேன்........"

அவள் கண்கள் நீரை ஆருய்ப்பெருக்கின. தேகம் 'படபட'த்தது. "தங்கம் பயப்படாதே. நீவீட்டுக் ருப்போ; நான் இதோ அவரை அழைத்துக் கொண்டு வருகிறேன்".

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் வண்டியை இழுத்துக் கொண்டு ஓடினுன் சண்முகம்!

மருத்துவர் வந்தார். ஊசிபோட்டார். "பயப்பட வேண்டியதில்லை, குணமடைந்து விடும்" என ஆறுதல் சொன்னர். சண்முகம் வண்டியிலேயே அவரை அழைத்துக் கொண்டுசென்ருன். நேரம்போய்க் கொண்டிருந்தது. சப்தநாடியும் அடங்கிக்கிடந்த நாகப்பனுக்கு உணர்வுவந்தது. தங்கம் நடந்தவற்றை யெல்லாம் ஒன்றும்மறைக்காமற் சொன்னுள். நாகப்பன் ஒன்றுமேபேசவில்லை. "சண்முகம் இப்பொழுது வரு வானு?" என்று கேட்டான்.

"வருவார்!" என்ருள் அவள். ஆனுல் சண்முகம் வரவேயில்லை! அந்த இரவு முழுவதும் தங்கத்திற்கு நித்திரையும் வரவேயில்லை.

விடிந்ததும் நாகப்பன் தங்கத்தை அழைத்து சண்முகத்தைக் கூட்டி வருமாறு கூறினுன்.

"அவர் வரமாட்டேன் என்ருல்", அவள்கேட்டாள்.

"நான் அழைத்துக் கொண்டுவரச் சொன்னதாகச் சொல். அவன் வருவான்!"

தங்கம் நடந்தாள், ஓடினாள், இல்லை; பறந்தாள்! மனதிற் கொண்ட மணாளன் கிடைக்கப்போகிறான் என்ற மகிழ்ச்சியில்!

சண்முகம் வந்தான்.

“இப்படிவா, சண்முகம்.........!” நாகப்பனின் குரலில் பாசம் இழையோடியது. தங்கம் இப்படி வா.........” நாணம் நடமிட, நாகப்பன் பக்கம் நகர்ந்து நின்றாள் தங்கம்.

“சண்முகம் — தங்கம்” இருவர் கரங்களையும் முதுமைபடர்ந்து நிற்கும் நாகப்பனின் கரங்கள் ஒன்று சேர்க்கையில் அவன் உதடுகள் ‘போட்டி ஒழிந்தது’ என்று முணுமுணுத்தன.

# பெண்

மழைத் தூறல்கள் இங்கொன்றும் அங்கொன்று மாகப் பொட்டுப் பொட்டாக விழுந்து கொண்டிருந்தன. இரவு முழுவதும் பொழிந்துதள்ளிய பேய் மழையை அவை இன்னும் ஞாபகப்படுத்திக்கொண்டிருந்தன. தெரு வோரமாக உள்ள தமது அறையில் உட்கார்ந்து 'வெண் சுருட்டு' ப் புகைத்துக் கொண்டிருந்த எழுத்தாளர் ஏகாம்பரநாதன் முன், ஒரு கட்டுக் கடிதங்களைப் போட்டுவிட்டு வெளியே நடந்தான் தபாற்காரன். உடம்பு முழுவதும் போர்த்துக் கொண்டுகிடந்த போர் வையை மெல்ல நீவிவிட்டு கடிதங்களில் கண்ணேட்ட மிட்டார் எழுத்தாளர். பத்திரிகைகள், சில கடிதங்கள், பத்திரிகை ஆசிரியப் 'பெரியார்களால்' தமது திற மைக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் எனத் திருப்பி விடப்பட்ட சில கதைப் பிரதிகள் என்பன அக் கடிதக் கும்பலில் சங்கமமாகிக் கிடந்தன.

எழுதுவதுதான் அவர் தொழில்! பொழுது போக் கிற்காகவோ, முற்போக்கு, பிற்போக்கு இலக்கியம் பண்ணுவதற்காகவோ அவர் எழுதுவதில்லை. எழுது வது நின்றுவிட்டால் அவருக்கு வாழ்வில்லை. எனவே

எழுதுகிறுர். பத்து ஆண்டுகளுக்கு மேலாக எழுதுகி றுர். எழுத்துலகில் அவர் பெயர் நன்கு அறிமுகமாகி விட்ட பொழுதிலும் அதற்கேற்ற மதிப்பு அவருக்கில்லே. பாவம், எந்தப் பத்திரிகையாசிரியரையும், பிரபல எழுத்தாள அதிதியையும் 'பாதபூசை' பண்ணிப் பிரபல மடையத் தெரியவில்லே அவருக்கு, அதனுல் இன்றைக் குக்கூட அவர் கதைகளிற் சில பத்திரிகை ஆசிரியர் களால் திருப்பியனுப்பப்படத்தான் செய்கின்றன. தரத் தில் குறைந்த கதைகள் அளவுக்கு மீறிய விளம்பரத் துடன் முக்கிய பத்திரிகைகளில் பிரசுரமாகும்போது தரமுள்ள அவர் கதைகள் திரும்பி வந்தால் மனம் வருந்தத்தானே செய்யும். அது தமிழ் வாசகர்களுடைய துரதிட்டம்! ஏகாம்பர நாதனுக்கு இதெல்லாம் பழக் கப்பட்ட சங்கதிதான்! எனவே, 'அரசினரின்' மேற் பார்வையில் பட்டணப் பிரவேசம் பண்ணிவந்த கதைப் பிரதிகளே ஒதுக்கிவிட்டுக் கடிதங்களேப் படிக்கத் தொடங்கினுர். அந்த ஒரு கடிதம் மாத்திரம்—அதி லுள்ள வசனங்கள் மாத்திரம், அவர் மனதில் குத்திட்டு நின்றன. ஏன் என்பது அப்பொழுது அவருக்கே தெரியவில்லே!

எழுத்தாளர் ஏகாம்பர நாதனுடைய எழுத்துக்க ளேச் சிலர் மதிக்கிறுர்கள், சிலர் மிதிக்கிறுர்கள் என்பது உண்மைதான். இந்தப் புகழ்ச்சி, இகழ்ச்சிகள் அவர் மனதை ஒருபோதுமே திணறவைத்ததில்லே. ஆனுல் அந்தப் பெண் எழுதிய கடிதம் என்னவோ அவர் மன தில் 'கிசு, கிசு'மூட்டி, உற்சாகமதுஊற்றி அந்தரத்தில் பறக்க அல்லவா வைக்கிறது. திரும்பவும் அந்தக் கடிதத்தைப் படித்தார்!

"அன்பார்ந்த...ஆசிரியருக்கு,

" உங்கள் படைப்புக்கள் அனைத்தையும் தவருது படிப்பவள் நான். "மல்லிகை" மாத இதழில்

தாங்கள் அண்மையில் எழுதியுள்ள 'மனிதன்' சிறு கதை என்னைக் கவர்ந்து விட்டது. இத்தகைய பண்புள்ள எழுத்தாளரான தங்களை நேரிற்கண்டு என் பாராட்டுக்களைத் தெரிவிக்கவும், பேசவும் மிக்க ஆவலுடனிருக்கின்றேன்.

—"சுலோ எம். ஏ"

இரசிகர்களுக்கு பதில் எழுவது என்றாலே 'எவரெத்துக்கு' ஏறுவதாக நினைத்துக்கொண்டு காலம் கடத்தும் ஏகாம்பரநாதன் கையோடு கையாய் அன்றைக்கே அவரது அபிமான இரசிகை சுலோ எம். ஏக்கு கடிதம் எழுதினார். "உங்கள் இதயங் கவர்ந்த எழுத்துக்களை நான் எழுதவில்லை. உங்கள் போன்றோர் தரும் உற்சாகமே அதை எழுதுகிறது. ஏழை எழுத்தாளனான என்னைக் கண்டு பேச எண்ணியமைக்கு நன்றி. எப்பொழுதும் எனது 'அலுவலக'த்தில் தங்களை (வீடும் அதுதான் என்பதை எழுதவில்லை) வரவேற்கக் காத்திருக்கிறேன்!" தபாலில் கடிதத்தைச் சேர்த்ததும், நிம்மதியான பெருமூச்சொன்றுடன் தமது எழுத்து வேலைகளில் ஈடுபட்டார் ஏகாம்பரநாதன்!

எழுத்தாளர் ஏகாம்பரநாதன் என்னவோ அனுபவசாலி, முதிர்ந்தவர் என்று எண்ணினால் அது அவரை நாம் சரியாக அறியவில்லை என்றாகிவிடும். வயது முப்பதிற்கு மேலாகியும் 'பிரமச்சரிய' விரதங்காத்து வருபவர் அவர். எங்கோ ஒரு ஒதுக்குப்புற ஊரிலே பிறந்து வளர்ந்து இன்று, வாழும் ஊருக்கு வந்து சேர்ந்தவர். அவர் சுபாவமே அலாதியானது! ஊரிலே அவரை ஒரு 'விநோதப் பிறவி' யாகவே கருதினார்கள். அதனால் அவர் தமது பிறந்த ஊர்ப்பக்கமே போவது அரிது! பாவம், நன்றாகப் படித்து ஆசிரியனாக வேலைபார்த்துச் சுளை. சுளையாகப் பணம் உழைக்கும் நிலையிலுள்ள அவர் எழுதித்தான் பிழைப்பேன் என்றால் அவரை

யார் மதிக்கப் போகிருர்கள்? எழுதுகிறவர் எல்லாம் இலட்சாதிபதியாக வாழவேண்டாம். மூடையின்றி வாழ இந்த நாடு என்ன அமெரிக்காவா? இங்கிலாந்தா? ஏகாம்பரநாதன் இதையெல்லாம் சட்டை செய்யவில்லை. அவரும் அவர் எழுத்துமாகப் புறப்பட்டுவிட்டார். எப்படியோ எழுத்துலகில் அறிமுகமாகியும் விட்டார்.

தெருவில் 'ஊதுகுழல்' சத்தம் கேட்டது. அதில் என்ன புதுமை தினசரி நிகழ்வதுதானே! ஏகாம்பர நாதன் தொடர்ந்து வாசித்துக் கொண்டிருந்தார். யாரோ அறைக் கதவைத் தட்டுவதுபோல, வெறும் பிரேமையா.........? தெரு ஓரமாக அறை எடுத்திருந்தால் இப்படித்தானிருக்கும். தெருவால் போகிற ஆடு மாடுகள் எல்லாம் அவர் அறைக்கதவைத் தட்டிப் பார்த்துச் செல்கின்றன.

"திருவாளர் ஏகாம்பரநாதன்......!"

"ஆம்......"

எழுத்தாளர் துள்ளிப் பாய்ந்துசென்று அறைக் கதவைத் திறந்தார்.

'நீங்கள்.........?'

"செல்வி சுலோ எம். ஏ, உங்கள் இரசிகை" 'முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும் முழுமதியோ என்ற ஐயம் எழுத்தாளருக்கு! அவரென்ன கவிஞரா? கவிஞராக முடியவில்லையே என்றதுக்கம் ஏகாம்பரநாதனுக்கு அப்பொழுதுதான் ஏற்பட்டது. 'சுலோ' என்ற வார்த்தையில் இந்த அகிலத்து அழகெல்லாம் அடக்கம். ஆச்சரியம் அவர் வாயை அடைத்தது. மகிழ்ச்சி அவர் மனதை நிறைத்தது. அவள் அவர் இரசிகை அல்லவா?

"ஏன் இப்படிப் பார்க்கிறீர்கள்.........? சுலோ கேட்டாள்.

"ஒன்றுமில்லை சுலோ, வா! இப்படி இருந்து கொண்டே பேசலாம்."

எழுத்தாளரது ஏகாசமான அந்த நாற்காலியில் சுலோ அமர்ந்தாள். எழுத்தாளர் மேசையோடு நின்றூர். அவளது அழகும் பேச்சும் அவருக்குச் 'சொர்க்கானுப' வமாக இருந்தது. அவரது குழந்தைப் போக்குச் சுலோவுக்கு வியப்பாக இருந்தது! என்ன மனிதரிவர் என்று அவள் தனக்குள் அதிசயித்தாள்.

அவர்கள் என்னவெல்லாமோ பேசினூர்கள். அவளுக்கு அவரை மிகவும் பிடித்தது. அவரும் அவளை விரும்பினூர். நேரம் போவதே தெரியாமல் பேசிக் கொண்டிருந்த அவர்கள் ஒருவாறு பேச்சை முடித்தார்கள்.

'போய் வருகிறேன்' எனச் சுலோ விடைபெற்ற போது ஏகாம்பரநாதன் கண்கள் கலங்கின. அவள் முகமும் என்னவோ விகாரப்பட்டுத்தானிருந்தது. ஒரு 'புதுவித' உறவு, அவர்கள் மத்தியில் முகிழ்த்திருந்தது என்பதற்கு அவை சான்ருமோ?

இப்பொழுதெல்லாம் சுலோவும் ஏகாம்பரநாதனுஞ் சந்தித்துப் பேசுவது சகசமாகிவிட்டது. சுலோ பக்கத்துஊர்க்கல்லூரி ஒன்றில் ஆசிரியையாக இருந்தாள். படித்த பெண்ணல்லவா? அதிலும் எம். ஏ. பட்டதாரியான அவள் கார் ஓட்டிச் செல்வதற்கும் நினைத்தபோது நினைத்த இடங்களுக்குச் செல்வதற்கும் கட்டுப்பாடு ஏது.........? அவள் மனத்திலே எழுத்தாளர் ஏகாம்பரநாதன் தனியிடம் பெற்று விளங்கினூர். பெண்மனம் ஒரு புதிர் என்பது உண்மையோ, பொய்யோ! எப்படியானுலும் ஏகாம்பரநாதன்மீது அவளுக்கிருந்த கவர்ச்சி நாளடைவில் வலுத்து வந்த

தது என்பதுண்மைதான். காதலைப்பற்றி அவள் படித்திருக்கிருள் முன்னமே என்ருலும், இப்பொழுதுதான் அதன் மகத்தான சக்தியை அவளால் உணரமுடிகிறது. சுலோ மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் திணறிஞள். ஏகாம்பரநாதனிடம் எப்படித் தன் காதலைக் குறிப்பிடுவது என்று அவளுக்குத் தெரியவில்லை. அப்படி அவள் குறிப்பிட்டாலும் அந்த விநோதமனிதர் என்ன சொல்கிருரோ என்ற அச்சம் ஒருபுறம்! நேரிற் கண்டு பேசிஞற்ருனே பயம். கடிதமாக எழுதிஞல்.........! என்னவோ ஒரு துணிவு அவள் மனதில்.

கடிதத்தை எழுதி அனுப்பிவிட்டு மறு நாள் மாலை அவரைக் காணச் செல்லவேண்டுமென்று இருந்தாள். அவள் அவரைக் காணச் சென்றபோது அவர் முன்னமே போலத்தான், எவ்வித மாற்றமுமில்லாமல் இருந்தார். சிரித்துச் சிரித்துப் பேசிஞர். அவள் மாத்திரம் பயந்து, பயந்து பேசிஞள். அவர் ஒன்றும் கண்டிப்பாக இல்லை என்று கண்டபின்னர் 'அந்தக் கடிதம்' என்று தொடங்கிஞள். 'பத்திரமாகக் கிடைத்தது' என்ருர் ஏகாம்பரநாதன்.!

"கிண்டல் செய்கிறீர்களா......?"

சுலோவின் குரலிலே வேதனை தொனித்தது. ஏகாம்பரநாதன் சிரித்தார்.

சுலோ அழுதாள் !

"குழந்தை மாதிரி அழுகிருயே சுலோ! வெட்கமில்லையா........."

அவர் கரங்கள் அவள் கண்ணீரைத் துடைத்தன. அந்த மெல்லிய கரங்களை இறுகப்பற்றியபடியே சுலோ கேட்டாள்.........!

"என்னை ஏற்றுக்கொள்ள மாட்டீர்களா?"

ஏகாம்பரநாதன் மீண்டுஞ் சிரித்தார். சுலோவுக்கு பைத்தியம் பிடித்துவிடும்போல் இருந்தது. 'ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கத்தினுள்.

"சுலோ, அவசரப்படாதே. அசாதாரண அழகினைப் பெற்றுள்ள நீ அற்ப உணர்ச்சிகளுக்காளாகி அந்த அமர அழகை அழித்துவிடாதே. நீ பெண்ணல்ல. அழகின் தெய்வம். உனது பரிசுத்தமான அழகை மனிதக் கரங்களால் கறைப்படுத்திக் கொள்ளாதே. நான் உன்னைக் காதலிக்கிறேன். ஆம் உன்னையல்ல, உன் அழகை, அதனை எனக்கு விளையாட்டுப் பொருளாக்க அல்ல, எனது மனதார்ந்த, பூசனைக்குரிய புனிதப்பொருளாக, தெய்வீக தீபமாகக் காதலிக்கிறேன் சுலோ!"

அவர் கண்களிலிருந்து வடிந்த நீர் கன்னங்களில் முத்துக்களாகப் பளபளத்தது. அவர் மெலிந்த உடல் மெல்ல நடுங்கியது.

சுலோ விம்மினுள்! என்ன சொல்கிறீர்கள்? நானும் பெண்தானே, எனக்கு இதயமில்லையா, உணர்ச்சிகளில்லையா? உயிரில்லையா? சிற்பி வடித்த கற்சிலையா நான்? ஏன் என்னை இப்படிக் கொல்லாமற் கொல்கிறீர்கள்?" வெறி பிடித்தவள்போலக் கத்தினுள்.

அந்த விநோத மனிதர் மௌனமாக இருந்தார். சுலோவின் வேதனைக்குரல் அவர் இதயத்தைத் தொடவில்லையா? அல்லது வேண்டும் என்றுதான் மௌனஞ் சாதிக்கிருரா?

விம்மல் ஒலி அடங்கியபாடாக இல்லை. தீர்க்கமான குரலில் ஏகாம்பரநாதன் பேசினுர்.

"சுலோ, என்னுடைய முடிவு இதுதான். இந்த முடிவினை நான் உயிருள்ளவரை மீறமாட்டேன். கடவுளின் அழகுக் கரங்களை என் புன்மை மனதால், உடலால் கறைப்படுத்துவதைக் காட்டிலும் நாம் என்றுமே சந்திக்க முடியாத தூரத்தில் வாழ்வது நன்று!"

காரின் கதவுகள் படாரென்று சாத்தப்படும் ஒலி ஏகாம்பரநாதனின் செவிப்பறைகளை மோதி மடிந்தது. நெஞ்சப் பொருமலை எதிரொலிப்பதுபோல் தார் மெழுகிய வீதியில் கார் ஒன்று பேயிரைச்சல் கிளப்பியபடியே வேகமாகப் பறந்தது. எங்கோ? ஏகாம்பரநாதன் ஏதோ ஒரு புத்தகத்தைத்தேடுவதில், தன்னறை முழுவதும் நிரம்பி வழிந்த அச்சுப்பதித்த கடதாசிக் கும்பலில் மூழ்கினர்.

# காதல் வென்றது

அநுரதபுரத்து வானளாவிய இராசகோபுரத்தில் நந்திக்கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருந்தது. எல்லாளமன்னனின் பெருமையை எட்டுத்திக்கும் எடுத்துக்காட்டுவதுபோல! காலைக்கதிரவனின் பொன்னொளிபட்டு, நகர் முழுமையும் கவிந்து கொண்டிருந்த பனிமூட்டம் மெதுவாக மறைந்து கொண்டிருந்தது. படைவீரர்கள் பாயுங் குதிரைகளில் காற்றுகப் பறந்து கொண்டிருந்தனர். புத்தவிகாரைகளிலும், இந்து தேவாலயங்களிலும் வணக்கத்திற்காக மக்கள் மலர்க்கூடைகளை ஏந்தியபடி விரைந்து நடந்து கொண்டிருந்தனர். அநுரதபுரி விழித்துக்கொண்டது. எங்கும் ஒரே ஆரவாரம்! மக்கள்கூட்டம்!!

எங்கோ, ஒரு புத்தவிகாரையின் பக்கத்துமடத்தில் படுத்துறங்கிய பிக்கு ஆனந்தர் தூக்கங்கலைந்தெழுந்தார். காலைக்கடன்களை முடித்துக்கொண்டு யாசகத்திற்காகப்புறப்பட்டார். அவர் கரங்களில் "பிட்சா பாத்திரம்" இலங்கியது. அவரது இளமையும், அழகும் ததும்பும் உடலினை நீண்ட மஞ்சள் அங்கி

அலங்கரித்தது. முகத்திலே அவருக்கே உரித்தான அருட்பொலிவு ஒளிவிட்டுநின்றது. "புத்தம் சரணம் கச்சாமி சங்கம் சரணம் கச்சாமி" என்று அவர் வாய் முணுமுணுத்தது. அவர் மெல்ல நடந்து கொண்டிருந்தார். அவர் மனதில் கடந்தகாலச் சம்பவங்கள் நிழலாடிக் கொண்டிருந்தன.

எல்லாளமன்னனின் ஆட்சிக்காலத்தில் அநுரதபுரி யெனும் அணிநகர் எல்லாச்சிறப்பும் பெற்று விளங்கியது. புத்ததுறவிகளும், இந்துமததுறவிகளும் நகரில் நிறைந்திருந்தனர். மதவேற்றுமை, இனவேற்றுமையில்லாத நீதிமன்னனுன, எல்லாளனின் ஆட்சியில் எல்லாத் துறவிகளும் நன்கு மதிக்கப்பட்டனர். அவர்கள் எல்லாளமன்னனை வாயாரவாழ்த்தினர்! அத்தகைய துறவிகளின் கூட்டத்தில் பிக்கு ஆனந்தர் முதலிடம் வகித்தார். எல்லாளமன்னனின் அரசவையில் பிக்கு ஆனந்தர் சொல் பெருமதிப்புப்பெறும். அந்த அளவுக்குப் பிக்கு ஆனந்தர் ஆண்டிமுதல் அரசர்வரையில் செல்வாக்குப் பெற்றிருந்தார். இத்தனைக்கும் காரணமாகவிருந்தது அவரது தேசசேவையே! பிக்கு ஆனந்தர் வாழவழியில்லையே என்பதற்காகப் "புத்தனின் புனிதசேவை" க்குப் போகிறேனென்று மஞ்சள் அங்கிக்குள் மறைந்து கொண்டவரல்லர். நாட்டின் நலத்திற்காகத் தம்மையே அர்ப்பணித்துக்கொண்ட வீரத் தமிழ்க்குடும்பத்திற்பிறந்தவர் பிக்கு ஆனந்தர். ஒன்று இரண்டல்ல பத்து ஆண்டுகள் எல்லாள மன்னனின் ஒற்றர் படையில் திறமைமிக்கவராக, சிறந்த வீரராக விளங்கியவர். ஆனுல் காலதேவனின் கோரமான தாக்குதல் அவர் குடும்பத்தைச் சிதறடித்துவிட்டது. எல்லாளனின் போர்ப்படையிலேயே வீரர்களாகக் கடமையாற்றிய அவரது தந்தையும், இரு சகோதரர்களும் பயங்கரக் கொள்ளைக்கூட்டத்தைச் சேர்ந்த குண்டர்

களால், அவர்கள் சதிக்கூட்டத்தில் சிக்கியதினுல் கோர மாகக் கொலையுண்டனர். வயது சென்ற அவ்ர்த் அன்னை, கணவனையும் தனது மூத்தமைந்தர் இருவ ரையும் நினைத்து அழுது, அழுதே இறந்துபோனுள். பழிக்குப்பழிவாங்கவேண்டுமென்ற வெறி கொண்ட ஆனந்தர் அந்நாள்களில் செய்த அட்டகாசம் சொல்ல முடியாது. பயங்கரக்கொள்ளைக்கூட்டத்தைச் சேர்ந்த எவனுவது அவர் கையில் அகப்பட்டுவிட்டால் உயிரோடு அவன் திரும்பமுடியாது. இப்படி எத்தனையோ தடவை அவர் குண்டர்படையைச் சேர்ந்த பலரைக் கொன்று குவித்திருக்கிருர். ஆனுல் ஒருநாள் அந்திப்பொழுது ஒரு புத்தவிகாரையின் பக்கத்திலேயிருந்து அவர் தம் முடைய வாழ்க்கையின் விசித்திரநிலைமைகளைச் சிந் தித்துப்பார்த்தார்.

புத்தனின் அருட்போதனையில் அவர் மனம் ஆறு தல் கண்டது. கொலையையும், வெறியையும் கிளப்பும் ஒற்றர்வாழ்க்கையை அவர் முற்ருக வெறுத்தார். அன் றிலிருந்து மஞ்சள் அங்கி அவர் மாசற்ற உடலினை மறைத்தது. எல்லாளன் தாங்கொணுத்துயருடன் ஒற் றர் படை உறுப்பினரான ஆனந்தர், பிக்கு ஆனந்த ராக மாறிச்செல்வதை ஏற்றுக்கொண்டான். "பிக்கு ஆனந்தரே, வாழ்க்கை நிலையற்றதுதான், ஆனுல், சமூகத்திற்கும், நாட்டிற்கும் ஆற்றவேண்டிய சேவை கள் பலவுள. புத்தனின் அருட்கடலில் மூழ்கித் திளைக்கும் நீங்கள் மறுபடியும் ஒரு போர்வீரராக வரநேரிட்டால் என்மனம் எவ்வளவு மகிழ்ச்சியடையும் தெரியுமா? எல்லாளமன்னன் அன்று சொன்ன வார்த்தை கள் இப்பொழுதும் பிக்கு ஆனந்தரின் காதுகளில் வீரஒலி செய்து கொண்டிருந்தன.

அந்தக் குடிசைக்கு முன்னே வந்ததும், பிக்கு ஆனந்தரின் கால்கள் தாமாகவே நின்றுவிட்டன.

குடிசையைக் கூர்ந்து நோக்கினர். அவர் முகத்திலே இனந்தெரியாத,ஒருவிதமான சலனம் தோன்றி மறைந்து கொண்டிருந்தது. "புத்தம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி" அவர் வாய் மெதுவாக முணுமுணுத் தது.

குடிசைக்குள்ளிருந்து அழகே உருவான ஓர் இள நங்கை 'பிட்சை'யுடன் ஆனந்தர் முன்தோன்றினுள். "இன்று ஏன் இவ்வளவு நேரம்? அவள் கேள்வி அவரைத் திகைக்க வைத்துவிட்டதோ, என்னவோ! அவர் வாயே திறக்கவில்லை. அவர் கரங்கள் முன்நீண்டன. அவள் தன் கைகளை நீட்டிப் "பிட்சாபாத்திரத்தை" நிறைத்தாள். சட்டென்று கைகளைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டாள். ஒரே மின்தாக்கமோ! பிக்கு ஆனந்தரின் கரங்களுடன் அவள், கரங்கள் உரசிக்கொண்டன. அவள் கண்களின் கூர்மையை ஆனந்தரால் தாங்கிக் கொள்ள இயலவில்லை. தலையைக்குனிந்து கொண்டார். அதுவரை சிலைபோல நின்ற அவள், நினைவுவரவே பிக்கு ஆனந்தரைப்பணிந்து கொண்டார். அவர் மெதுவாக நடந்துகொண்டிருந்தார். அவர் மனத்திரையில் அந்த அழகி அழியாத சித்திரமாக உருவெடுத்துக் கொண் டிருந்தாள். அவள் அந்த வாலிபப்பிக்கு நடந்து மறையும்வரையில் வைத்தகண் வாங்காது பார்த்துக் கொண்டு நின்ருள்.

இரவின் ஆட்சி சமீபித்துக் கொண்டிருந்தது! ஆனுலும் மக்கள் அதைப்பற்றி அவ்வளவு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அன்று பூரணைத்தினம். கதிரவன் மறைந்தாலும் இரவைப் பகலாக்கும் பால்நிலவின் உதயத்தை எண்ணி மக்கள் தங்கள் கடமைகளைச் சுறுசுறுப்பாகச் செய்துகொண்டிருந்தனர். பிக்கு ஆனந்தர் அந்தவிகாரையின் பக்கத்திலுள்ள நந்தவனத்தில் உலாவிக்கொண்டிருந்தார். அவர் மனதில் ஒரே போராட்டம்.

எல்லாம் அந்த அழகியைப்பற்றித்தான். அவளுடைய ஒருபார்வையே அவருடையதுறவு நிலையைத் தொலைத்து விடும்போலிருந்தது. "அந்தக்குடிசைப் பக்கம் போகாமலிருக்கலாமென்ருலோ, சரியென்றிருக்கும் மனம். வெளியே புறப்பட்டதும், 'போ, போ' என்று உந்தித் தள்ளுகிறதே! என்ன சோதனை பகவானே........" அவர் மனதில் பாசமும், பத்தியும் ஒன்றையொன்று மல்லாடிக்கொண்டிருந்தன. குறுக்கும், நெடுக்குமாக நடந்துகொண்டிருந்தார்.

"சுவாமி..........." சத்தம் வந்த திசையை நோக்கித்திரும்பினுர்! அவர் கண்களை அவராலேயே நம்ப முடியவில்லை. அந்தக் குடிசைவாசியான எழிலரசிதான் அங்கே நின்ருள். "சே, இங்கேகூட ஆசைப்பேய் அரசாட்சி செலுத்த ஆரம்பித்துவிட்டதா?" அவர் 'துறவு, மனம் உள்ளுக்குள் இப்படி ஓலமிட்டது.

"எங்கே இந்த நேரத்தில்........"?

"மாலைப்பிரார்த்தனைக்காக விகாரைக்கு வந்தேன். இங்கே தங்கள் தரிசனம் கிடைக்கிறது" அவள் இப்படிச்சொல்லிவிட்டு மெதுவாகச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் பிக்கு ஆனந்தரின் "துறவுக்கட்டிடமே" இடிந்துவிடும்போலிருந்தது.

"ஏன் சிரிக்கிருய்........? என்னிடத்தில் என்ன அலுவல் ......? அவர் முகம் கடுமையாகிக் கொண்டிருந்தது.

"மன்னிக்கவேண்டும் சுவாமி. எதைக் கேட்பதென்றே எனக்குத்தெரியவில்லை. உங்களைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. அதுதான் வந்தேன்"

அவள் எழில்வதனத்தில் இப்போது பயமும், நிரா சையும் நிழலிட்டன. பிக்கு ஆனந்தரின் முகம் அமைதி பெற்றது. குரலும் தாழ்ந்தது.

பெண்ணே நான் முற்றுந்துறந்தவனுனுலும் வாலி பன். நீயோ எழில் மங்கை. அதுவும் கன்னிப்பெண். நமது உள்ளத்தூய்மையை உலகம் தப்பர்த்தம்செய்து கொள்ளக்கூடும். ஏன் வீணுக நமது நிலையைக்கலக்கிக் கொள்ள வேண்டும்?"

பிக்கு ஆனந்தர் இப்படிக்கூறிவிட்டு, அவளைக் கூர்ந்து நோக்கினுர். அவள் முகத்தில் பலவித உணர்ச்சிகள் கொந்தளித்து விகாரப்பட்டுநின்றன. அவள் உடல் நடுங்கியது. கிணற்றுக்குள்ளிருந்து பேசுவதுபோலப் பேசினுள்.

"சுவாமி, நான் உங்களைக் காதலிக்கிறேன்" அப் பால் அவளால் பேசமுடியவில்லை. மாமன்னர் முன் நின்றுகொண்டிருக்கும் குற்றவாளியைப்போலப் பயந்து கொண்டு நின்றுள்.

அதே பழைய தாக்குதல்......! பிக்கு ஆனந்தர் நிலை தடுமாறினுர். அவள் பார்வை,-பேச்சு இப்பொழுதைய நிலை ஒவ்வொன்ருக அவர் மனத்திரையிற்றேன்றி அவரை, அவர் திடசித்தத்தைக் கரைக்க ஆரம்பித் தன. உடனடியாக ஒன்றும் பேசமுடியாதவராக நின்று கொண்டிருந்தார். ஒவ்வொருவிஞடியும் ஒவ்வொருயுக மாகப்பட்டது அவளுக்கு. ஆனந்தருக்கோ ஒன்றுங் கூறமுடியாதநிலை. சிந்தித்து முடிவுசெய்வதற்குவேண் டிய நேரமில்லை. அதற்குள் யாரோ வரும்சத்தம்கேட்டது.

"நீ போ, நாளைசந்திப்போம்!"

எங்கே?

"இங்கேதான், இதே நேரத்தில்"

இப்பொழுது அவள் வேகமாக நடந்துகொண்டிருந்தாள் வீடுநோக்கி. மனதிலே ஒருவித அமைதி. என்றாலும் அது தற்காலிகமானதுதானே! நாளைக்கு அவர் என்ன சொல்லப் போகிறரோ, என்பதில் அவள் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தது.

விகாரையை அடுத்துள்ள மடத்தில் அகல் விளக்கு சுடர் விட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. வெளியே வெண்ணிலவு பால்போலக் காய்ந்து கொண்டிருந்தது. காயும் நிலவைக்கூடக் கவனியாது அகல்விளக்கின் ஒளியில் எதையோ யோசித்துக்கொண்டிருந்தது ஒரு உருவம். அந்த உருவம் பிக்கு ஆனந்தரைத் தவிர வேறுயாருமல்ல! நேரம் போய்க்கொண்டிருப்பதே அவருக்குத்தெரியவில்லை. நகரவாசற்காவற்காரன் எழுப்பிய மணி ஒலியைக்கேட்டபின்னர்தான் நேரம் நள்ளிரவு பன்னிரண்டுமணியென்பதை அவருணர்ந்தார். பேசாமல் விளக்கை அணைத்துவிட்டுப் படுத்துக்கொண்டார்.

விடிந்து இவ்வளவு நேரமாகிவிட்டதே என்று ஆச்சரியப்பட்டார், அவர் விழித்துக்கொண்டபோது! அவசரம் அவசரமாக எல்லாளன் அரசவை நோக்கிப் புறப்பட்டார். "புத்தனின் அருட்கடலில் மூழ்கித் திளைக்கும் நீங்கள் மறுபடியும் ஒருபோர் வீரராகவரநேரிட்டால் என்மனம் எவ்வளவு மகிழ்ச்சியடையும், தெரியுமா" எல்லாளன் அன்று சொல்லிய வார்த்தைகள் இப்பொழுது அவர் மனதில் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருந்தன.

மாலை மலர்ந்தது. பிக்கு ஆனந்தர் இப்போது புதிய தோற்றத்தில் நந்தவனத்தில் உலாவிக்கொண்டிருந்தார். அவள் வேகமாக வந்து கொண்டிருந்தாள்.

சமீபத்தில் வந்துவிட்டாள். அவள் நடைதளர்ந்தது. ஆச்சரியத்தால் அவள் கண்கள் அகலவிரிந்தன. மஞ்சள் அங்கி போர்த்திருக்கும் பிக்கு ஆனந்தர் அங்கேயில்லை. இளமையும், வலிமையும்ஒளிவிடும் உருவமாகப் போர்வீரனுக்குரிய உடைதரித்த ஆனந்தனை அங்கே கண்டாள். ஏதோ பேச எண்ணி வாயெடுத்தாள். ஆனல், பேச முடியவில்லை. இருகரங்கள் அவளை இறுக அணைத்தன. அந்த அணைப்பில் அவள் — அவர்.........! "சே, அதற்குள் இவ்வளவு அவசரப்படுகிறீர்களே" அவள் இப்படிச் சொல்லிவிட்டுச் சிரித்தாள். "இல்லை காதல் வென்றது." அவள் கன்னங்களில் இரு உதடுகள் அன்பு முத்திரையைப் பதித்துக் கொண்டே இந்த வார்த்தைகளை உதிர்த்தன.

# தவறு

எரிந்து, புகைந்து கொண்டிருந்த 'வெண் சுருட்டுத்' துண்டை வெளியே விட்டெறிந்து விட்டு, நிமிர்ந்த என்னை ஏறிட்டு நோக்கியபடியே இருந்த இருவிழிகள்..., அவற்றின் கவர்ச்சி அப்படியே தம்பித்து விடச் செய்தன. சாளரத்தின் பின்னாக நின்று கொண்டிருந்த சரசா மெல்லப் புன்னகைத்தாள். என் சர்வாங்கமும் சிலிர்த்தது. சாய்வு நாற்காலியில் 'தொப்'பென்று விழுந்தேன். நெஞ்சில் என்னென்னவோ நினைவுகள் ஊற்றெடுக்க ஆரம்பித்தன. சரசா, எதிர் வீட்டு 'மோகினி'! பருவமங்கை இளமை உணர்ச்சிகளின் 'கிறக்க'த்தில் இலயிப்பவள்!

நான்...! முற்றும் துறந்த முனிவனல்லன், எப்போது 'உருசி' கிடைக்கும் என்று விழிபிதுக்கித் திரியும் வேடனுமல்லன், மணமாகாத ஒரு வாலிபனுமல்லன். எனக்கும் உணர்ச்சிகளும் ஆசைத்துடிப்புகளும் இருக்கத்தானே செய்கின்றன!

அப்படியிருந்தும், சரசா எதற்காக இந்த விபரீதப் பரீட்சை நடத்துகிறாள்? என்னை நானே கேட்டுக்

கொள்கிறேன்! பதில்...? சரசா விழியகட்டி என் வேதனைத்தீயை வளர்த்துவிடுகிருள்! அதோ சாளரத்திற்குப் பின்னுல் அவள் எழில்முகம், சதிராடும் விழிகள். கொவ்வையுதடுகள், குங்குமக் கலவையைப் பழித்து நிற்கும் கன்னக் கதுப்புக்கள் எல்லாம் என்னைக் கொல்லாமற் கொல்கின்றன!

எதிர்த்தாற் போலிருந்த அந்த இருமாடி வீடுகளுக்கும் இடையே குறுகலான பெரும் பள்ளம். ஒரு ஓரத்தில் அவள், மறுகரையில் நான். இடையேயிருப்பது அதளபாதாளம் - அது என்ன? வாழ்வின் எதார்த்தத்தையே எனக்குப் புலப்படுத்தவா செய்கிறது? என்னவோ! நான் விரும்பினுல் என்ன. விரும்பாவிட்டாலென்ன அந்தப்பக்கமாகத் திரும்பினுல் முதலிற் கண்ணிற் படுவது அந்தச் சாளரம். அதற்கு அப்பால் என்னென்னவோ இருக்கலாம். ஆனுல் எனக்குத்தெரிவது, அவள்! அவளது நிழலுருவம்-அந்தக் கண்கள்-அவற்றின் கவர்ச்சிச் சிரிப்பு! அப்புறம் பார்க்கின்ற சக்தியே எனக்கு இற்றுப்போய் விடுகிறதா? இது என்ன சோதனையோ?

இந்த மாடி அறைக்கே வராமலிருந்து விடலாமென்ருல் பாழும் மனது கேட்டாற்ருனே! நான் வாசிக்கின்ற பத்திரிகைகள், புத்தகங்கள் எல்லாம் இந்த அறையுள் சிதறுண்டு கிடக்கின்றன. ஒழுங்கு செய்ய இரண்டு நாள் தேவையாயிருக்கும். யார் அவ்வளவு பொறுமையோடிருந்து, இதை ஒழுங்கு படுத்துவது? எப்படியோ இங்கு வந்து தானுக வேண்டும். எனக்குத்தான் இப்படியென்ருல் இவள் சரசாவுக்கு அப்படியென்ன தலைபோகிற அலுவல், அந்த மாடியறையில்? சதாசர்வ நேரமும் அங்கேயே வந்து கொண்டிருக்கிருள். தகப்பன் கிழவனுக்கு எந்த நேரமும் வியாபாரமே கண். இரவு பத்து மணிக்குத்தான் வீடுவந்து

சேரும். தாயோ சமையற் கட்டை விட்டு வெளிவராத அளவுக்கு அசல் வைதீகம்! அவள் தமையன்மார் என்கிற இரண்டு தடியர்களும் காலையில் நன்ருக உடுத்திக் கொண்டு வெளியே போகிருர்கள். எப்போது வீடு திரும்புகிருர்களோ எனக்குத் தெரியாது. இவள், இந்தக் கிறுக்கிமட்டும் இந்த மாடியறையைப் படாதபாடு படுத்துகிருள். அந்த அளவில் நிறுத்திவிட்டாற் போதாதா? என்னையுமல்லவா வம்புக்கிழுக்கிருள். அந்தப் பள்ளம்! நிலை தவறிவிட்டால் எலும்புகூட மிஞ்சாது. அவளும் நானும்?

அவள்-என் மனைவி-ஊருக்குப் போய் ஒரு வாரமாகிவிட்டது. அவள் இங்கிருக்கும் வரையும் எனக்கு இந்தச் சிரமமெல்லாம் அவ்வளவாகத் தெரியவில்லை. அவள் போனதிலிருந்து எல்லாம் ஒரே குழப்பமாகி விட்டது. உணவுவிடுதிச் சாப்பாடும், அலுவலக வேலையும் கசந்துவிட்டன. உடலையோ, உணவையோ நன்கு கவனிக்க முடிகிறதா? அவளுக்கு — கமலாவுக்குத்தான் என்மீது எவ்வளவு அன்பு! பிரசவத்திற்காக யாழ்ப்பாணத்திற்குப் புறப்படும்போது அவள் எனக்காகச் சொன்ன பரிகாரங்களைக் கேட்டபோது அவளா, நானு பிரசவப் பெண் என்ற ஐயம் எனக்கு வரத்தான் செய்தது. அந்த ஐயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அவள் ஊர்போய்ச் சேர்ந்து விட்டாள். இங்கே தகிக்கும் தாபத்தில்... வறுத்தெடுக்கும் உணர்ச்சிப் பொசுக்கலில் நான்...?

அலுவலகம் செல்லவே மனம் ஒருப்படவில்லை, உயிரைவிட்டுழைத்து எந்தக் கோட்டையை வாங்கி விடப் போகிருேம். ஒரு நாலுநாள் 'விடுமுறை' போட்டால் என்ன கெட்டுவிடும்! அலுவலகத்திற்கு விடுமுறை கேட்டு எழுதிக் கொடுத்துவிட்டு வீட்டிலேயே குந்திக் கொண்டேன். மிக்க அலுப்பு, சலிப்பு!

யாரோ ஒரு பத்திரிகைக்காரர் கதை அனுப்பி வைக்கும்படி பல நாட்களுக்கு முன்பே கேட்டிருந்தார். இந்தத் 'தொல்லைகளோடு' கதை எழுதவா முடியும்? இந்த நாலுநாள் விடுமுறையில் "அதை" எழுதி அனுப்பி விடலாமென்றால்...சுலபமாகத் தெரியவில்லை! கதையெழுத நான் மாடிக்குவருவதற்கும், சரசா சாளரத்திற்கு வருவதற்கும் சரியாக இருக்கிறதே! எப்படிக் கதையெழுத முடியும்? இந்தக் கதையை யார் எழுதுவது?

விசுவாமித்திர முனிவரின் தவத்தை மேனகை கெடுத்தாளாம். அவளைப் போலச் சரசாவும் என் தவத்தைக் குலைக்க முயற்சிக்கிறாளா? மிகப் பிரமாதமான கற்பனை எனக்கு! விசுவாமித்திர முனிவர் எங்கே? நானெங்கே? கவர்ச்சி நாகரிகத்தின் தொட்டிலாகத் திகழும், கொழும்பு மாநகரில் அந்த விசுவாமித்திர முனிவராற்கூட, ஒருநாளைக்குத், தாக்குப்பிடிக்க முடியாது!

அவ்வளவு மோசம்! வசுவில், புகைவண்டியில் மட்டுமா, நடைபாதையிற் கூட இனக்கவர்ச்சி அலைமோதுகிறது. 'ஸ்பரிசசுகம்' காண்பதில் தம்மை மறந்த இன்பத்தில் திளைக்கிறார்கள் ஆடவரும், பெண்களும், யுவர், யுவதிகள் மட்டுமா, பேரிளம் பெண்தொட்டு தலை நரைத்தும் 'கலை' நரைக்காத காமிகள் வரை இந்த வகையில் இன்பம் காணத் தவறுவதில்லையே!

இளமையின் தலைவாசலில் கால் வைத்து நிற்கும் கட்டழகி சரசா......!

"பட்டும் படாமலும்" அனுபவித்திருக்கிறான்......?

மதுவுக்கு மட்டுமா மயக்கும் சக்தி இருக்கிறது. பெண்—என்ற போதைப் பொருள் முன் மது, சூரியன் முன், மின் மினியாகிவிடாதா?

பெண்ணை அநுபவிப்பது மட்டுமா இன்பம்? அவள் கடைவிழிப் பார்வையில், இதழ்க்கடையின் புன்னகையில், மதுரமொழியில், மனமோகனத் தோற்றத்தில் 'தோய்வது' போன்ற சுகம் வேறென்ன இருக்கிறது?

எனக்கு நானே போதமும், வேதமுமாகிவிட்டேனு? சரசா, நீ ஒரு புதுமலர், மது நிறைந்த மலர், உன் அழைப்பைக் — குறிப்பை நான் ஏற்றுக் கொள்ளட்டுமா?

அந்தப் பள்ளம்! எலும்பு கூட மிச்சம் வைக்காத அதளபாதாளம்!!

வாழ்வைச் சுவைக்கத் தெரியாத கோழைகளின் மனப்பிரமையா இது? அப்படியாலுல் நானும் ஒரு கோழை! இல்லை! இல்லவே இல்லை!!

மீண்டும் ஒரு 'வெண்சுருட்டைப்' பற்றவைக்கிறேன். எண்ணத் தீயின் புகைச் சுருளை நெட்டித்தள்ளும் பெருமூச்சொன்று வெளிப்படுகிறது. எழுந்து நடைபயில்கிறேன்.

அந்தச் சாளரம், கண்ணில் பட்டுத் தொலைகிறது, அட, அவள் இன்னும் அங்கு நின்று கொண்டிருக்கிருளா? போதைக்கிறக்கத்தில் கனலேறிவிட்ட என் கண்களை, அவள் கண்கள் விழுங்குகின்றன. ஐயோ...... உடலெல்லாம், மின்னிசை வயப்பட்ட உணர்ச்சித் தாக்குதல்.........!

சரசா.........! உணர்ச்சிக் கனலேறிவிட்ட உதடுகள் ஒன்றுகூடிப் பிரிகின்றன. ஒரே மயக்கநிலை............... சாய்வு நாற்காலியில் சாய்கிறேன்...........

உணர்வுக்குள் உணர்வற்று நின்ற, அந்த ஒரு கணத்தில் சரசா என் பக்கலில் நிற்கிருள்!

கட்டுமீறிய உணர்ச்சிப் போதையில்...........

'சரசா.........!' அவள் என்னை விழுங்கி விடுபவள் போல உற்றுப் பார்க்கிருள். அந்த ஒரு கணத்திலேயே இளமையின் முழு இன்பத்தையும் அனுபவிக்கச் சொல்கின்ற வெறிப்பார்வை.........!

என் மனதில் ஒரு எண்ண இழை......!

கமலா, நீ என் மனைவி! இப்பொழுது ஊரில் என்ன நிலையிலிருக்கிருயோ......... இங்கே நான்............உன் அன்புக் கணவன்.........?

இந்த மாடியறைக்கு நான் வந்து விட்டாற் போதும். நீ இங்கிருக்கிறபோது குட்டிபோட்ட பூனையைப்போல என்னை வளைய, வளைய வருவாயே. அது இதற்காகத் தானே! தனிமையும், இளமையும் காவலற்ற புலமாகி விட்டதா உன் பிரிவுக்குப்பின்?

கதையெழுதுகிற ஒவ்வொருவனுக்கும், அவன் வாழ்க்கைக்குப்பின்ஞக ஒரு பெரிய கதைத் தொகுப்பே இருக்கும் என்று அடிக்கடி கூறுவாயே, இந்தக் கதையைத் தெரிந்துகொள்ளும் 'தீர்க்கதரிசன' அறிவு எப்படியடி உனக்கு வந்தது!

'என்ன...........பேசமாட்டீர்களோ...........?' சரசா என் எண்ண இழையை அறுத்தாள்!

அவள் கைகளைப் பற்றி, அவளை என் மடிமீதிருத்தி அவளது அழகுக் கன்னங்களை, என் பக்கம் சாய்த்து இளமை விம்மும் நெஞ்சோடு, நெஞ்சு சேர்த்துத்தழுவி முத்தமிட முயலுகையில், உணர்வுகள் தீப்பிழம்பாக கனன்று, உடல் எங்கும் பற்றி எரிகையில், ஒரு கணம் "டிங் டிங்" என்ற மணி ஒலி! அதைத் தொடர்ந்து 'தடதட' வென்று ஆள் ஏறி வரும் அரவம். திடுக்கிட்டு 'விழித்த' எனக்கு உலகமே சுழல்வது போன்ற பிரமை. தளர்ந்து விட்ட அணைப்பிலிருந்து, விடுபட்ட சரசா எழுந்து சற்று எட்டி நிற்கிருள்.

"ஐயா, ஊரிலிருந்து தந்தி வந்திருக்கிறது!"

தந்திச் சேவகன் எங்களிருவரையும் விகாரமாகப் பார்க்கிருன். பேச நா எழவில்லை! கையெழுத்தைப் போட்டுவிட்டுத் தந்தியைப் பெற்று வாசிக்கிறேன்.

"ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. தாயும் சேயும் நலம்." சரசா! அவள் தந்தியைப் பறித்துப் படிக்கிருள்.

தந்திச் சேவகன்! — அவன் அப்போதே போய் விட்டானே!

'சரசா............!'

அவள் மாடிப்படிகளில் 'தடதட' என்று இறங்கி ஓடுகிருள்.

சரசா.........! பதில் இல்லை. என் குரலே எதிரொலித்து என்னை நகைக்கிறதா?

'தொப்'பென்று அந்தச் சாய்வு நாற்காலியில் மீண்டும் சாய்கிறேன். மயக்கம் தெளிந்த நிலை!'

எவ்வளவு நேரம் அப்படிக் கிடந்தேனோ தெரியாது. புத்துணர்வுடன் எழுந்து கீழே வர முயல்கையில் அந் தச் சாளரப் பக்கம், பழக்கப்பட்ட பார்வை மேய்கிறது. முகத்திலடித்தாற் போலச் 'சடா'ரென்று சாளரத்தை மூடிச் செல்கிறாளே ஒருத்தி; சரசாவா? சரசாவேதான்! இனி அந்தச் சாரளம் என்றுமே திறக்காது போலும்! கீழே குனிந்து, அதள பாதாளமான அந்தப் பள்ளத் தைப் பார்க்கிறேன். வானளாவும் நெடுஞ் சுவரொன்று இரு மாடி வீடுகளுக்குமிடையே, தோன்றுவதற்கான அத்திபார வேலையைக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள் பல தொழிலாளர்கள்! இனிச் சரசா சாளரத்தைத் திறந்தாலும், சுவர் இருக்கிறதே, எதுவுமே தெரியாத படி மறைக்க. சரசா, உனக்கு உன் உறுதி சுவர்! எனக்கு............ என் மகன்............! 'விறுவிறெ'ன்று கீழிறங்கிச் சென்று விட்டேன். தவறு என்னவோ!

# சு ட லை யா ண் டி

விண்ணுக்கும் மண்ணுக்கும் இடையே எரியும், பெருநெருப்பில் உலகம் வெந்துகொண்டிருக்கும் வேளை. இதனைத்தான் உச்சி மத்தியானம் என்கிறார்களோ! எல்லாப் புறங்களிலும் அனலின் வெம்மை படர்கிறது. என் அகத்தும், புறத்தும் ஒரே கொதிப்பு. மனதில் அலைபாயும் எண்ணங்கள் முட்டி மோதுகின்றன.

அஃது மயானபூமி. பட்டினத்தின் ஒதுக்குப்புறமாக அமைந்திருந்தது. வானளாவிய ஆலமரங்கள், அவற்றின் கிளைகள் பயங்கரமான வேதாளங்கள் நீளக் கால்கள் ஊன்றி நிலைத்து நிற்பன போலத் தோற்றுகின்றன. கொளுத்தும் அந்தக் கொடிய வெயிலுங் கூட அப்பிரதேசத்துள் நுழையக் கூசுகிறது போலும்!

இலைகளின் 'சலசலப்புச்'சத்தத்தில் மனித உடலின் மயிர்க்கால்கள் குத்திட்டு நிற்கின்றன. ஏறிட்டு நோக்கவே இதயம் பலமாக அடித்துக்கொள்கிறது!

திட்டுத்திட்டான சாம்பர் மேடுகள். சுடலை ஞானம் எனக்குப் பிறக்காவிட்டாலும் உலகவாழ்வையேவெறுக்கத் தூண்டுகின்ற மனோநிலை உயிர்க்கின்றது. ஏன்?

செல்வம், அழகு, ஆசைகள் அத்தனையும் நிராசைகளாகிச் சிதைந்துபோன எலும்புகளாக, கரிந்துவிட்ட நிணச்சுதைகளாக, உடலை நடுங்க வைக்கும் 'கோறை'போன மண்டை ஓடுகளாக அங்கே காட்சியளிக்கின்றன.

சமரசம் நிலவும் இடம் அதுதானுமே! உண்மைதான். ஏழை, செல்வன், முதலாளி, தொழிலாளி, ஆண்டான், அடிமை என்ற பேதமெதுவும் அங்கில்லை. எல்லாருமே - பிடிசாம்பராகப் போய் முடிவெய்தியுள்ள மோனநிலை —

'காடுடைய சுடலைப் பொடிபூசி உளங்கவர் கள்வனுகிய' திரிசூலன் திருநடனமிடும் இடமும் இதுவாமோ? தில்லையம்பலத்தாடுங் கூத்தப்பிரான், எதற்காக இப்பேழ்வாய்ப் பிசாசுகளின் நிரந்தர உறைவிடத்துநிருத்தமிடச் சித்தங் கொண்டான்? அவனேர் பித்தனன்ரே! அவனுக்கு எல்லாம் ஒன்றுதானுமோ!

மனிதப்பிறவி எடுப்பவர்கள் என்றேனும் ஒருபோது, அநித்தப்பிறவியின் அந்தரங்கங்களை அம்பலப்படுத்தும் மயானபூமியை, உயிருடன், உணர்வுடன் தனியாகத் தரிசித்துப் பார்க்கவேண்டும். ஞானநிலை பெற இயலாதாயினும், தீய நெறிப்படர, முனையாத் தூண்டுதலாவது பிறக்காதா?

துவிச்சக்கர வண்டியை, வேலி ஓரத்து மரத்துடன் சாய்த்துவைத்த பின்னர், முட்கம்பிப் போர்வைக்குள் முடங்கிக் கிடக்கும், அந்த மயானத்தில் என் பார்வையை மேயவிட்டபொழுது.........!

ஆலகாலமுண்டவன் கோவண உடையுடன் மீண்டும், சுடலையாண்டியாக என்போன்ற ஈனப்பிறவிகளுக்

கும் தரிசனந் தரச் சித்தங்கொண்டுவிட்டாளு..........
என்ற ஐயம், ஆச்சரியம் தோன்றி மறைந்தது. மன
தில் ஏனோ நிலைகொள்ளவில்லை!

நேற்றைப்பொழுது இதே நேரம், பாடசாலையில்
என் வகுப்பிற் படிப்பித்துக்கொண்டிருந்தேன். கணக்
கைக் கொடுத்துவிட்டு, மாணவர்களைக் கூர்ந்து நோக்
கியபடியிருந்தேன். எப்பொழுதும் பாடங்களில் மிகச்
சமர்த்தனாக விளங்கும் அவனைக் காணவில்லை. எங்கே
அவன்? ஏன் வரவில்லை? என்ற கேள்விகள் என்
மனதுள் கிளர்ந்தன.

'சிற்றம்பலம் வரவில்லையா?'

'இல்லை ஐயா!' என்று பதிலிறுத்தனர் மாணவர்.
'ஏன் வரவில்லை?' நான் கேள்வி தொடுத்தேன்.

அவர்கள் சிரித்தார்கள். என்னிடத்திற் பேசுதற்கு
அவர்களுக்கு அதிக துணிச்சல் வேண்டுமெனினும்
சமயாசமயங்களில், என் முகக்குறிப்பைக் கண்டு
பயந்தெளிந்து பேசுகின்ற பாடம், அவர்களுக்குக்
கைவந்த கலை!

'சுடலையாண்டி, எங்கே போவான்? அங்கேதா
னிருப்பான். இன்று எவ்வாறோ நாலோ, ஐந்தோ சதம்
எடுத்துக்கொண்டு வந்துசேர்வான்.

நாளைக்கு நமக்கெல்லாம் 'பெருமை'காட்டியபடியே
'ஐஸ்பழம்' வாங்கிச் சாப்பிடுவான்!'

அவர்கள் தமக்குள் கதைத்துச் சிரித்தனர். 'என்ன
பேசுகிறீர்கள்?' சற்று அதிகாரத்தோடு கேட்டேன்.

'சிற்றம்பலம் சுடலைக்குப் போய் பணம் எடுக்கின்றவன் ஐயா. அங்கு கிடைக்கும் பணத்தைக்கொண்டு தான், வகுப்பு முடிந்ததும் மலையாளத்தானிடம் 'ஐஸ் பழம்' வாங்கிச் சாப்பிடுபவன் ஐயா.........' சிற்றம்பலத்தின் 'கைச்செலவு'க்குப் பணம் கிடைக்கும் வகையை அவன் பள்ளித்தோழன் தொடர்ந்து விவரித்தான்!

எனக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. சிற்றம்பலம் என்ற அந்தச் சிறுவனையும், அவன் குடும்பத்தினரையும் எனக்கு நன்கு தெரியும். 'வாழ்ந்து கெட்ட' குடும்பம்! வறுமையின் கோரப்பிடிக்குள், அந்தச் சின்னஞ்சிறு குழந்தை மனதின் அசாதாரணத் துணிவு பெருவியப்பளிக்கின்றதன்றோ!

பட்டின நாகரிகத்தின் எல்லையை, எட்டிப்பிடித்து விட்ட அந்த ஊரின் மயானத்தில், சிறுவன் சிற்றம்பலம் பணம் தேடுகின்றுனுமே! எப்படி? நான் தவறு விட்டாலும், மாதத்தில் பலபேரைத் தன்னுள் சாம்பர் மேடாக்கி வரும் அந்தப் பயங்கர பூமியில், பணம் விளைகிறதா ......?

ஏன் விளையாது? வாய்க்கரிசியோடு போடப்படும் சில்லறைக்காசுகள், சுடலையில் பிற கிருத்தியங்களுக்காக வீசப்படும் காசுகள் எல்லாம் தீ மூட்டப்பட்ட பின்னர், பிரேதத்துடன் சேர்ந்து வெந்து, கருகி, உரு மாறிக் கறுத்துவிடுமே!

ஏன், அன்றைக்கு வாய்பாடு அட்டை வாங்கச் சிற்றம்பலம் தந்த ஐந்துசதக் குத்தியும் அப்படித் தானே கறுத்திருந்தது. அதனை எதிலோ வைத்து நன்றுக அழுத்தித் தேய்த்து ஒளியேற்ற முயன்ற அவன் முயற்சியின் முத்திரைகூட அதிலே பதிந்திருக்கவில்லையா......!

சிற்றம்பலம்...... நீ என்ன 'நூதனமான பிறவி' யடா......! அவன்மீது என்னையறியாமலே ஆழமான பரிவு பிறந்தது. கணிதபாடமும், மாணவர்களும் என் மனத்திரையிலிருந்து மறையத்தொடங்கினர்.

'பேய்வாழ் கானகத்தே நின்றுடும் பிராணியல்ல' பணம் தேடும் சிற்றம்பலவனைக் காண என் நெஞ்சு துடித்தது!

உடல் முழுவதும் சுடலைச் சாம்பர் படிந்த கோலம். கோவணாண்டியாக, கையில் ஒரு நெடிய தடியுடன், சாம்பர் மேடுகளைக் கிளறித், தட்டிச், சில்லறைக் காசுகள் சேர்க்கத் துரித முயற்சியில் தன்னை மறந்து இயங்கிக்கொண்டிருப்பவன் சிற்றம்பலம்!

வாய்பாடு அட்டை, ஐஸ்பழம், எழுதுகோல் இவற்றுக்கு அவனுக்குச் சில்லறை வேண்டும். கொடுப்பவர் எவரும் இலர், அவனைப் பொறுத்தவரை...!

ஆனால், ஊர் அவனைப்போலச் சுடலையாண்டியாகவா இருக்கிறது?

கொளுத்தும் வெயிலிலும் 'வெண்சுருட்டு'ப் பொதிகளையே புகையாக ஊதித்தள்ளும் வாலிபச்சிங்கங்கள், பொழுது சாய்ந்ததும் கோகுலகானக் கண்ணனைக் காணச் செல்லும், இராதையைப் போலப் படமாளிகையில் 'காதல் மன்ன'னைத் தரிசிக்கச் செல்லும் 'வீராங்கனைகள்......' மண்ணையும் விண்ணையும் ஒன்றாக்கி, மாத மும்மாரி மழை பொழியச் செய்து, நாட்டையே சொர்க்கலோகமாக்கி விடுவோமென மேடையில் முழங்கும் அரசியல் தலைவர்கள்...... நன்றாக வாழுகிறார்கள்.

அந்தச் சின்னஞ்சிறு குழந்தை மட்டும், ஊரே அருவருக்கும், வெறுக்கும், நினைத்து நெஞ்சு நடுங்கும், மயான பூமியில் 'சல்லிக்காசுகள்' பொறுக்கப் படாதபாடு படுகிறது!

என்ன உலகம்! இதுவும் ஒரு வாழ்வா? துவிச்சக்கர வண்டியை ஓசைப் படாமல் மெல்ல எடுத்து, பிரதான வீதியில் நிறுத்தி, எனது பயணத்தைத் தொடக்கினேன்.

அவன் — அந்த முயற்சியில் ஆழ்ந்து கிடந்தமையால் என்னைக் காணவே இல்லை. கண்டிருப்பானாயின் என்ன எண்ணுவானோ...!

பாடசாலைத் தொடக்கமணி ஒலித்து ஓய்ந்தது. வகுப்பு ஆரம்பித்தது. நாலைந்து நாள்களாகச் சிற்றம்பலத்தை அந்தப் பக்கமே காணவில்லை. என்னுள்ளம் அவன் வருகைக்காக ஏங்கித் துடித்தது. அவனுக்கும் எனக்கும் என்ன உறவு? ஆசிரியன் நான். அவன் என் மாணவன், என்னிடம் பயிலும் முப்பது பேரில் ஒருவன்தானே! மற்றையவர் அனைவரிலும் காணாத எதனை அவனிலே காணத் தவிக்கின்றேன்?

'சிற்றம்பலம் ஏனோ பாடசாலை வரவில்லை?' 'ஐயா அவனைப் பேய் அடித்துவிட்டதாம்! ஏதோ காய்ச்சலாகக் கிடந்து புலம்புகின்றானாம். இன்று கடுமையாகி விட்டதனால் அரசினர் மருத்துவமனைக்குக் கொண்டு போயிருக்கிறார்களாம்!' கண்களில் நீர் ததும்ப அவனது பள்ளித்தோழன் இப்படிச் சொன்னான். கூடப் பழகிய குற்றமல்லவா? அந்த மாணவன் நிலை குலைந்து, உளஞ்சாம்பி, உருகினான்.

நான் என்ன மனிதனா? மரக்கட்டையா? என் கண்கள் ஊற்றெடுக்க ஆரம்பித்தன. விம்மி, விம்மி அழ

வேண்டும்போலிருந்தது. சிரமப்பட்டு அடக்கிக் கொண்டேன். மாணவர்களும் என்னை வியப்புடன் பார்க்கின்றனர். எனக்கென்ன, அவன் கதை தெரியாதா? கண்ணாரக் கண்டிருக்கிறேனே அவன் செயலை! பாவம்; திரும்பிவருவானோ, அல்லது திரும்பாமலே போய்விடுவானோ! யாரறிவார்?

பேயோ, பூதமோ இவற்றைப்பற்றி ஆராயவேண்டிய அவசியம் இதுவரை எனக்கு நேரவில்லை. பேயுமில்லை, பூதமுமில்லை என்று அடித்துப்பேசிவிட்டு அந்தரங்கத்தில் 'மாந்திரீகம்' செய்ய ஆள் தேடும் பகுத்தறிவு வாதியுமல்லன் யான்! ஆனால்......?

சிற்றம்பலம் எப்படி நோயுற்றான்? அவனுக்காக இறைவனை வேண்டிக்கொள்வதைத் தவிர வேறொரு செயலும் எனக்குப் புலப்படவில்லை. அவ்வாறே அம்பலக்கூத்தனை வாயார, நெஞ்சார வழுத்தினேன். அவனருள் செய்வான் என மனந் தேறினேன்.

மனம் ஒருநிலைப்பட்ட உணர்வில், பாடசாலை என்ற நினைவே போய்விட்டது! என்னுள் நானாக, விவரிக்கவொண்ணாப் பரவசக் காட்சியில் மூழ்கினேன்.

சூலந்தரித்த சிவன், எமபாசந்தவிர்க்கும் அரன், ஒரு சுடலையாடி, சுடலையாண்டியன்றோ, நெற்றிக்கண் மின்ன, விரித்த செஞ்சடை வீறுற்றாட, தரித்துள புலித்தோல் விழித்தெனை நோக்க, காதார் குழையாடக் காட்சிதருகின்றான் அகத்தில்......!

புறம் மறைந்துவிட்ட புதுநிலை. பாடசாலை, மாணவர், உலகம் எங்குற்றனரோ...!

காலைநேரம், புதிய மனத்தெளிவுடன் துவிச்சக்கர வண்டியை வேகமாக மிதித்து வருகிறேன். அதோ ஒரு

தாய்...... 'பரபரப்பு'டன் என்னை நோக்கி விரைந்து வருகிருள்.

அவள் — சிற்றம்பலத்தின் அன்னையல்லவா? என்ன செய்தி சொல்வாளோ...! நெஞ்சம் பலமாக அடித்துக் கொள்கிறது.

'ஐயா, என் மகனை நேற்றுத்தான் அரசினர் மருத்துவ மனையிற் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கிறேன். கடுமையான காய்ச்சலில் வருந்தியவன். இரவு எவ்வளவோ சுகப்பட்டுவிட்டான். என் உயிர் மீண்டுவிட்டது ஐயா!'

அவள் கன்னங்கள் நனைந்தன, நீரினல். என்னுளம் குளிர்ந்தது உவகையால்.

'பலநாள்களாகப் பாடசாலைக்கு வரவில்லை. அதுதான் உங்களிடம் சொல்லிவிட்டு மருத்துவ மனைக்குப் போகலாமென்று வந்தேன்!' அந்தத் தாய் சொன்னுள். சொற்களில் பெண்மையின் தாய்மை பிரவகிக்கிறது.

'கடவுள் கைவிட மாட்டார். போய்வா அம்மா!' அந்த அன்னை மனநிறைவுடன் வேகமாக நடந்தாள். நானும் பாடசாலை நோக்கி விரைந்தேன். இந்தச் சின்னஞ்சிறு சுடலையாண்டியை, அந்தப் பென்னம் பெரிய சுடலையாடி, காப்பாற்றிய செயலை, என் மாணவர்களிடஞ் சொல்லி மகிழவேண்டாமா; என்ன...... ?

அச்சுப்பதிவு :

கலைவாணி அச்சகம்,
10, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.